கல்கி

KALKI 5.1.2003
ரூ. 6.00



ஒலிம்பிக் கனவு!


Precious
Stone
Jewellery



2003- நேசம் பரவட்டும்!

பூனாவிலிருந்து சுமார் இருநூறு கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது ஷீர்டி. ஊருக்குள் நுழைகிறபோதே சாயிபாபாவின் பெயரில் அங்கங்கே ஓட்டல்கள், தங்கும் விடுதிகள், நூற்றுக்கணக்கில் சிறு சிறு சிற்றுண்டிச் சாலைகள். இந்தியா முழுவதிலிருந்தும் பஸ்களிலும், ஜீப்புகளிலும், கார்களிலும் வந்து குவியும் சாயி பக்தர்கள், நேரே கோயிலுக்கு வந்து, க்யூவில் நிற்கத் தொடங்குகிறார்கள்.

முறையான க்யூவில் நின்று முன்னேறி சந்நிதானத்தை அடையும்போது, சரியாக தீபாராதனை - ஆரத்தி - நேரம். சந்நிதி மண்டபத்தில் பாபாவுக்கு எதிரே வரிசை வரிசையாக உட்கார வைக்கிறார்கள். காக்கி உடுப்பு அணிந்திருந்தாலும், கடுமை இல்லாத உத்தரவுகள். ஒழுங்கு, வெகு இயல்பாக எல்லோருக்கும் தொற்றிக் கொண்டு விடுகிறது!



கோயில் வளாகம் முழுதும் சுத்தம் என்றால் அவ்வளவு சுத்தம். லட்சக்கணக்கில் பக்தர்கள் வந்தபோதும் தூய்மை காக்கப்படுகிறது.

சந்நிதியில் வரிசையிலிருந்து எழுந்து, ஒவ்வொருவராக சாயியின் விக்கிரத்துக்கு அருகே சென்று, பூஜைக்குரிய மலர் மாலைகளையும், தேங்காயையும் கொடுக்கிறபோது, இயந்திர கதியில் அவற்றை வாங்கி, மாலையைப் பூசாரி பின்னால் வீசும்போது மனசு சங்கடப்படுகிறது. ஆனால் அவரைப் பொறுத்தவரை, தினசரி ஆயிரக் கணக்கில் வந்து மாலை வழங்கும் பக்தர்களில் நாமும் ஒருவர்.

வெண்மையான சிலையிலிருந்து நம்மைக் கருணையோடு கவனித்து ஆசி தருகிறாரே பாபா, அது ஒன்றே போதுமே! நமக்கும் அவருக்கும் மட்டுமே நிகழும் அந்தக் கண நேரப் பார்வைப் பரிமாறல் தரும் பரவச உணர்வு வேறு எங்கும் கிடைக்காதது!

இந்தப் பக்கம் சீக்கியர். அந்தப் பக்கம் தாடியும் லுங்கியுமாக முஸ்லீம் பக்தர். முழுக்க முழுக்க ஹிந்துக் கோயில்களில் கடைபிடிக்கப்படும் பூஜை முறைகளாக இருந்தாலும், அனைத்து மதத்தவரும் ஈடுபாட்டுடன் தரிசிக்க வருகிறார்கள்.

இந்த நேசம் நாடெங்கும் பரவ பிரார்த்திப்போம்.

கட்டுரை, புகைப்படம்:
சாருகேசி

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
ஈ மெயில் முகவரிகள் : எடிடோரியல் : kalki@kalkiweekly.com
சந்தா : subscription@kalkiweekly.com பிற தகவல்கள் : info@kalkiweekly.com

தும்புரு

நதியின் குணம்தான் நர்மதாவுக்கும்... சமயத்தில் கட்டுக்கடங்காமல் கரையுடைத்துக் கொண்டு ஓடுகிறார்; சமயத்தில் சமர்த்தாக, இருக்கும் இடம் தெரியாமல் ஒடுங்கிக் கொள்கிறார்.

கிருஷ்ண கான சபாவில் சௌம்யாவுக்கு அவர் பக்கவாத்தியம் வாசித்தபோது நர்மதா-1; ஆர். ஆர். சபாவில் விஜயலக்ஷ்மி சுப்ரமண்யம் பாட்டுக்கு வாசித்த போது நர்மதா - 2!

கி.கா. சபாவில் வடகிழக்குப் பருவ மழையின் கடைசிப் புயல் மையம் கொண்டது போல் இடி, மின்னல், சாரலுடன் ஆரம்பித்தது சௌம்யாவின் கச்சேரி! அரங்கத்தை அழகு செய்வதில் செலுத்திய கவனம் ஒலி அமைப்பில் செலுத்தப்படாததால், நாட்டைக் குறிஞ்சி வர்ணம் நாற்பதுகளின் நாடக இசை போல் அதிர, பாடகியின் குரல் கரகரத்துக்



நர்மதா 1 & 2!

கேட்டது. 'மாயாதீத ஸ்வரூபிணி'யை (மாயா மாளவ கௌளை) சௌம்யாவும் நர்மதாவும் போட்டி போட்டுக் கொண்டு அதீத கமகங்களால் போர்த்தி, பிருகாக்களில் புதைத்துத் தீர்த்து, அடாணா ஆலாபனைக்கு முன்னேறினர். 'எப்படிப் பாடறேன் பார்!' என்று சௌம்யா சவால் விட, நர்மதா, 'நான் இப்படித்தான் வாசிப்பேன்' என்பது போல் விதவிதமான ஒலிகளை எழுப்பினார்.

'ஸ்ரீ குமார நகராலயே' கீர்த்தனையை ஆரம்பித்த சௌம்யா, 'இப்படியும் பாட முடியும்' என்பது போல் பாணியை மாற்றிக் கொண்டு கச்சேரியை திசை திருப்பினார். அளவான, கற்பனை ஸ்வரங்கள் அடாணாவின் அழகை எடுத்துக்காட்டின.

'பலஹம்ஸ' பாடும் முன் ஒரு 'பிரேக்' எடுத்துக் கொண்டு, ராகத்தையும் தமது குரு எஸ். ராமநாதன் அதைக் கற்றுத் தந்த அனுபவத்தையும் விளக்கினார் சௌம்யா. 'வந்தாலும் வரட்டும் சுவாமி, தந்தாலும் தரட்டும்..' - நெய்வேலி நாராயணன், இக் கீர்த்தனையின் தாளக்கட்டை எடுத்துக்காட்டி மிருதங்கம் வாசிக்க, உடுப்பி சங்கரின் கடம் இலேசாகக் காதில் விழுந்தது.

கச்சேரியில் வித்வத் பிரகாசிக்கும் அளவுக்கு பக்தியோ பாவமோ காணோமே... என்று நாம் கவலைப்பட ஆரம்பிக்கையில் கரஹரப்ரியா அற்புதமாகப் பூத்தது. கீழ் ஸ்தாயிகளில் கனமான பிரயோகங்களில் தொடங்கி, தெளிந்த குரலில் மேலே சென்று, குட்டி பிருகாக்களை அளவாகத் தூவி... அந்த அழகில் மயங்கும் நேரம், நர்மதாவின் வயலினிலிருந்து டி.வி.எஸ். ஸ்கூட்டர்கள் புறப்பட்டு ஓடி அதிர்ச்சியூட்டின. ஹோண்டாக்கள் உறுமிப் பாய்ந்தன... நாய், பூனை... பூனை பால் குடிக்கும் ஓசை ஒன்றுதான் பாக்கி! அத்தனைக்கும் அவர்



• நர்மதா



• சௌம்யா

யைக் கொடுப்பது இருக்கட்டும்; அந்த கரஹரப்ரியாவும் சளைக்காமல் ஈடுகொடுத்ததே. அது அவருடைய அபார அபார திறமைக்குச் சான்று!

'சக்கனி ராஜ'வை பேடன்ட் பண்ணிவிட்டது போல் பாடினார் சௌம்யா. நிரவல் ஸ்வரங்களால் அரங்கம் நிறைந்து போயிற்று.

அதுவரை தனியாய் இருந்த உடுப்பி ஸ்ரீதர் தனியாவர்த்தனத்தில் திறமையைக் காட்ட, சிங்கமும் மாடப்புறாவும் உரையாடுவது போல் மிருதங்கமும் கடமும் பிரவாகங்களைப் பொழிந்தன.

அஸாவேரி ராகம்-தானம்-பல்லவி சௌம்யாவின் வித்வத்துக்குச் சிகரம் வைத்தாற் போன்ற சாட்சி. பாவமும் உணர்ச்சியும் குன்றாமல் காத்தது பெரிய விஷயம். 'அடி நீடை' என்ற யமுனா கல்யாணி ஜாவளியை, அதன் அழகு வெளிப்படும்படி அனாயாசமாகப் பாடியது அதனினும் பெரிய விஷயம். இப்பேர்ப்பட்ட பாடகி, கச்சேரியின் ஆரம்பத்தில் மட்டும் அனாவசிய பிருகா, சங்கதி, போன்ற எக்ஸ்ட்ரா ஃபிட்டிங்ஸை நாடுவது ஏன் என்பது நமக்குப் புரியாத விஷயம்!



படங்கள்: ஸ்ரீஹரி • ஆர்.ஆர். சபாவில்

வராளியில் துரித கால கற்பனை ஸ்வரம் பாடிய போது, களைகட்டியது விஜயலக்ஷ்மி சுப்ரமண்யமின் கச்சேரி. சற்றே கமறலுடன் கூடிய தொண்டையும், மோசமான ஒலியமைப்பும் ஆரம்ப ஜட்டங்களை பாதித்தன. ஆபோகி வர்ணம், 'விடஜாலதுரா நா மனசு' (ஜனரஞ்சனி), 'நீ தய ராதா' (வஸந்த பைரவி, ரூபகம்) என்று சிறப்பாகத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார், இரண்டு மணி நேரத்துக்கும் குறைவான நிகழ்ச்சியை...



• விஜயலக்ஷ்மி சுப்ரமண்யம்

சிறு சிறு சஞ்சாரங்களால் வளர்க்கப்பட்ட வராளி ஆலாபனை, கார்வைகளும் அழுத்தமான துரிதப் பிரயோகங்களுமின்றி, கொஞ்சம் படுத்துவிட்டது.

'அட, இதுவும் நர்மதா!' என்று வியக்க வைக்கும்படி ஆரம்பித்த வயலின் வாசிப்பு, மிருதுவாக முன்னேறி, பரூர் பாணியின் ஒலி விளையாடல்களை மறக்காமல் சேர்த்துக் கொண்டது என்றாலும் மித மிஞ்சிவிடவில்லை.

'ஏடி ஜன்மமிதி ஹா' என்ற தியாகராஜரின் அங்கலாய்ப்பு முழுமையாய் வெளிப்படாவிடினும், நிதானமான காலப் பிரமாணத்தில் அரங்கை நிறைத்தது. 'ஸாடிலேனி'யில் நிரவல். மிருதங்கமும் (மன்னார் கோவில் பாலாஜி) கஞ்சிராவும் (பி.எஸ். புருஷோத்தம்) ஆதரித்துப் போஷித்தனர். (இந்த ஜோடி வாசித்த தனியாவர்த்தனம், குறைவான நேரத்தில் நிறைவைத் தருவது எப்படி என்பதற்கான செயல்முறை விளக்கம்!)

சாமாவில் 'அன்னபூர்ணே விசாலாக்ஷி', வார்த்தைகள் தெளிவாய்க் கேட்டால் இன்னும் எத்தனை சிறப்பாக இருக்கும் என்று அங்கலாய்க்கச் செய்தது.

விஜயலக்ஷ்மியின் கரஹரப்ரியா ஆலாபனை, மிக நூதனமாகவும் சம்பிரதாயம் மீறாமலும் படிப்படியாக முன்னேற, நர்மதாவும் அவர் தொடாத சில பிரயோகங்களைத் தொட்டுக் காண்பிக்க, 'ஜானகி பதே' என்ற பாபனாசம் சிவனின் கீர்த்தனையைப் பாடகி ஆரம்பித்த போது, நிகழ்ச்சியின் தரம் கிடுகிடுவென்று உயரத்துக்கு வந்தது.

'ஸரோ ருஹ சரணா'வில் கற்பனை ஸ்வரங்களை அமைத்து, ஸ்ரீராமனின் தாமரைப் பாதங்களில் அர்ச்சனை செய்யும் பாவத்தைக் கொணர்ந்த விஜயலக்ஷ்மி, வலுவான அகாரங்கள், கார்வைகள் பக்கம் கவனம் செலுத்தினால் பூர்ணத்துவம் நோக்கி முன்னேறலாமே, என்ற எண்ணம் நிகழ்ச்சியின் இறுதியில் எழுந்ததைத் தவிர்க்க முடியவில்லை.

நீங்கள் கேட்டவை - ஞாநி

● எஸ். சாந்தி, காட்பாடி.

? தாம் பிரதமர் ஆவது ஒரு பிரச்னையே அல்ல என்கிறாரே ஜெ...?

! உண்மைதான். அம்மா பிரதமர் ஆவது ஒரு பிரச்னை அல்ல... பற்பல பிரச்னைகளின் கூட்டுப் பயங்கரம்!



• குரோத் இன்டெக்ஸ்!

● எம்.வி. குருசிந்தியா, கரந்தை.

? ஹிந்து நாளிதழில் முதல் பக்கத்தில் வீராணம் பற்றிய செய்தி வந்தவுடனேயே சகல தரப்பினரும் பெரிதாகப் பேசுகிறார்களே... இன்னமும் நமது ஆங்கில அடிமைத்தனத்தைத்தானே இது பறைசாற்றுகிறது?

! ஆங்கில இதழ் என்பதால் அல்ல; நம்பகத்தன்மை உள்ள இதழ் என்பதால், ஆதாரங்களுடன் எடுத்துச் சொன்னதால் அந்தச் செய்திக்கு மதிப்பு. இதிலே அடிமைத்தனம் எங்கே வந்தது... சிந்தியுங்கள் சிந்தியா!

● சி.மு.சோ. வன்னியராசன், விருதுநகர்.❒

? ஏப்ரலில் மோடியைப் பதவி விலகும்படி கூறிய ஜெயலலிதா, டிசம்பரில் அவர் வெற்றி பெற்றதுமே வாழ்த்துவதன் மர்மம் என்ன...?



• நோ பிராப்ளம்!

! நாடாளுமன்றத் தேர்தல் நெருங்குதில்லே... கூட்டணிகள் மாறுமில்லே... மத்தியில் மறுபடி கூட்டணி ஆட்சிதான்னு ஏற்பட்டா 'மியூசிகல் சேர்' போட்டியில் பிரதமர் நாற்காலியில் உட்கார்ந்துவிட வாய்ப்பு இருக்கில்லே..!

● த. குமரேசன், காவல்கிணறுபுதூர்.

? உலகிலேயே பதினைந்து ஆண்டுகளில் மிக வேகமாக வளர்ந்த ஒரு கட்சி பாரதிய ஜனதாதான் என அத்வானி கூறியுள்ளாரே...?

! அக்கட்சி வளர்ந்ததால் பாரதம் வளர்ந்ததா என்று பாருங்கள்... ஏமாற்றம்தான் மிஞ்சும்! ஊளைச் சதை போடுவது வளர்ச்சி அல்ல என்பது புரியும்.

● கு. அருணாசலம், தென்காசி.

? குடும்ப நலத்துறையைத் தமிழக அரசு கலைத்துவிடப் போவதாகச் செய்திகள் வருகின்றன. அப்படி ஆனால், பின்

❒ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
சி.மு.சோ. வன்னியராசன்,
9, தந்திமரத் தெரு,
விருதுநகர், 626001

✱ ரூ. 50/- பரிசு பெறுபவர்:
கல்லார் ரஹ்மத்,
220, கடசல்கார தெரு,
நாகை - 611 001.

விளைவுகள் என்னவாக இருக்கும்?

! பொறுப்பை இராம கோபாலனிடம் கொடுத்துவிட வேண்டியதுதான். "ஒரு குடும்பத்துக்கு ஐந்து குழந்தைகள் பெற்றெடுக்க வேண்டும்; குழந்தைகளை வளர்க்க முடியாவிட்டால் என்னிடம் கொடுங்கள், நான் வளர்ப்பேன்..." என்று ஆவேசமாகச் சொல்லியிருக்கிறாரே!

● கே.என். பாலகிருஷ்ணன்,
சென்னை - 91.

? வைகோவின் விடுதலை எப்போது...?

! இன்னும் வழக்கே பதிவு செய்யவில்லையே! "இப்படித் தாமதிக்கிறீர்களே! விரைந்து செயல்படுங்கள்..." என்று நீதிபதி கண்டனம் செய்தால், "அவ்வாறு விரைந்து செயல்படாவிட்டால் என்ன ஆகுமாம்...!" என்று எதிர்க்கேள்வி கேட்கிறார் அரசு தரப்பு வழக்கறிஞர்! பொடா அந்த அளவுக்குத் துஷ்பிரயோகமாகிறது.

● கல்லார் ரஹ்மத், நாகை. ●

? பிரேமானந்தாவைப் பார்த்தாவது மக்களிடம் உள்ள சாமியார் மோகம் போய் விடுமா..?

! பிரேமானந்தாவுக்கு முன்னரும் போலிச் சாமியார்கள் இருந்தார்கள். அதற்காக பிரேமானந்தாவிடம் ஏமாறாமல் இருந்தார்களா என்ன...!

● ஆர். காஞ்சனா, நெய்வேலி - 3.

? குவாட்ரோச்சி, மலேஷிய நீதி மன்றத்திலிருந்து விடுதலையாகி, இத்தாலிக்குச் சென்றுவிட்டதாகக் கூறும் செய்தி குறித்து...?

! போபர்ஸ் ரேஞ்சுக்கு ஊழல் பண்ணுவதில் ஓசைப்படாமல் உதவியவருக்குத் தப்பவா தெரியாது? எங்கே தட்டினால் எங்கே அசையும் என்பது நன்றாகத் தெரிந்திருக்கும்! சாண் ஏறினால் முழம் சறுக்கும் சி.பி.ஐ.யின் பாடுதான் சங்கடம்.



• கரெக்ஷன்...!

● கருப்பம்புலம் சித்திரவேலு, நெய்விளக்கு.

? அரசு ரத்து செய்த பெட்ரோல் பங்க்குகளை நடத்தச் சொல்கிறதே நீதிமன்றம். இது மத்திய அரசுக்கு அடிதானே?

! முக்கியமாகப் பிரதமருக்கு வைக்கப்பட்ட குட்டு. அனைத்து உரிமங்களையும் ரத்து செய்துவிட்டால், நடந்த ஊழல்களை அப்படியே அமுக்கிவிடலாம் என்று திட்டம் போட்டார். 'நல்லது கெட்டது இரண்டையும் ஒட்டுமொத்தமாக ஒழித்துவிடக் கூடாது; நல்லதை நடக்கவிட்டுத் தீயதை ஆராய்ந்து தண்டிக்க வேண்டும்' என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துவிட்டது.

ஜெ.பிரதமராவது பிரச்னையில்லையாமே...!



• காட்ஃபாதர்!



• கிரேட் எஸ்கேப்

● பொன்விழி, அன்னூர்.

? நாடாளுமன்றத்தைத் தாக்கியவர்களுக்கு மரணதண்டனை சரிதானே...?

! மனித உரிமை இயக்கங்கள் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் மரண தண்டனை நியாயமே. நாட்டுக்கு எதிராக, திட்டமிட்டச் சதிசெய்வோர் பேரில் தாட்சண்யம் காட்டலாகாது – குறிப்பாக பயங்கரவாதமும் தீவிரவாதமும் தலைவிரித்தாடும் இக்காலகட்டத்தில்.

● எம். அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.

? மிஸ்டர் பரிதாபம் யார்...?

! நியூசிலாந்திடம் குட்டப்பட்டு ஊற்றிக்கொண்ட இந்திய கிரிக்கெட் அணிதான்! உலகக் கோப்பை.... கொர்.....கொர்...!

● ராஜிராதா, திருச்சி - 14.

? குஜராத் முடிவுகள் ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு மரண அடி என்கிறாரே சோ....?

! பத்திரிகைகளுக்கு மட்டும் தானா....? மதச்சார்பின்மைக்கும்தான்!

● செ.ரா.ரவி, ஒட்டன்சத்திரம்.

? ரஜினி, விஜய், சரத் என்று ஆளாளுக்குக் கொடி பிடிக்க நாங்க போவிருக்கு...?

! ''மக்கள் இயக்கத்தைக் கலைத்து விட்டேன்..'' என கோவை சச்சிதானந்த ஆசிரமத்தில் பேசிய ரஜினி, அரசியல் கொடியை இறக்கிவிட்டு ஆன்மிகக் கொடியை மீண்டும் ஏற்றிவிட்டாரே....?

● கே.வி. ராமன், சென்னை - 73.

? ஸ்டெய்ன்ஸ் கொலைக் குற்றவாளி தாராசிங்கின் தாயாருக்கு வி.எச்.பி. 25,000 ரூபாய் பரிசு வழங்கியுள்ளதே...?

! கொலைக்கும் எங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று சத்தியம் செய்தவர்கள்தான் இவர்கள்! இவர்கள் திட்டமிடும் ஹிந்துத்வா எப்படி இருக்கும் என்று கற்பனை செய்தால் குலை நடுங்குகிறது.



• லேட்டஸ்ட்!



• நியூ ஸ்டைல்!

● ஆர். ராமசுப்ரமணியன்,
வடவள்ளி.

? நம் ஜனாதிபதி, இளம் மாணவர்களிடையே பேசும் போது, நம் அணுசக்தி பலத்தைப் பற்றிப் பேசுவது சரியாகப் படவில்லையே...?

! கலாம், இதைத் தவிர்க்கலாம்!

● கொ. மூர்த்தி, குட்டலாடம்பட்டி.

? ஆண்களின் உதவியால்தான் பெண் விடுதலை கைவரும் என்று பாடலாசிரியர் பழநிபாரதி கூறியுள்ளாரே...?

! சிறிய திருத்தம் _ உதவி என்பதை 'ஆதரவு' என மாற்றிக் கொள்ள வேண்டும். 'நாங்கள் வேறு இனம்' என்பது போல் பெண்கள் கட்சிக்கட்டிக் கொள்ளும்போதுதான் ஆண்கள் அச்சுறுத்தப்படுவதாக உணர்கிறார்கள். அவ்வாறு இன்றி, பெண்கள் பிரச்னைகளுக்குத் தீர்வுகள் _ விடைகள் காண ஆண்களையும் உள்ளடக்கிச் சிந்தித்து, ஈடுபடுத்தித் திட்டமிட்டால், மோதல்கள், உராய்வுகளின்றி மாற்றங்கள் விளையும்.

● க.நா. ராஜேஸ்வரன்,
மொரட்டுப்பாளையம்.

? 5000கோடி ரூபாய் பங்குச் சந்தை ஊழல் பற்றி...?

! நாடாளுமன்றக் கூட்டுக் குழு விசாரணை அறிக்கை ஏதோ ஒப்புக்குச் சாடினாலும், சல்லடை வழியே தண்ணீர் போல் விரயமாகிவிட்டது. யூ.டி.ஐ. அதிகாரி மட்டும் பலிகடா ஆகியிருக்கிறார்.



● எம். சிவகுருநாதன், தஞ்சாவூர்.

? 'வீரப்பனுக்கு எதிரான போர், அவன் பதுங்கியுள்ள காட்டில்தான் நடக்க வேண்டுமெயொழிய பத்திரிகைகளில் நடக்கக் கூடாது' என்று கர்நாடக முதல்வருக்குத் தமிழக முதல்வர் கடிதம் எழுதியுள்ளது பற்றி...?

! கர்நாடக அரசுக்கும் எஸ்.எம். கிருஷ்ணாவுக்கும் எதிராக இவர் பத்திரிகை அறிக்கை விட்டால் ரொம்ப ரொம்ப சரி; தமிழக அரசின் செயல்பாடு குறித்து குறை கூறி கர்நாடகத்தில் அறிக்கை விடப்பட்டால் அது இமாலயத் தவறு! 'ஜெ'யுடைய நியாயமே அலாதிங்க!

25,000 நபர்களுக்கு டிராயிங் கோர்ஸ் இலவசம்!

WISH YOU HAPPY NEW YEAR



உங்கள் வீட்டில் இருந்தே இலவசமாய் டிராயிங் கற்றுக் கொள்ளுங்கள்

இப்படி இப்படி இப்படி



இப்படி இப்படி இப்படி

1 முதல் 12 எண்களின் படம்

5 கோர்ஸ்கள்

1. ஈஸி டிராயிங் கோர்ஸ்
2. ஈஸி கார்ட்டூன் கோர்ஸ்
3. ஈஸி அனாடமி கோர்ஸ்
4. ஜாமெட்ரிகல் ஆர்ட் கோர்ஸ்
5. கமர்ஷியல் ஆர்ட் கோர்ஸ்

5 கோர்ஸ்கள்

இந்தக் கோர்ஸ்கள் எல்லாம் இலவசம்!

இந்தக் கோர்ஸை இலவசமாக பெறுவது எப்படி?

1. உங்கள் பெயர், முகவரியைத் தெளிவாக எழுத வேண்டும். இந்த விளம்பரத்திலுள்ள கூப்பனையே அனுப்ப வேண்டும். ஜெராக்ஸ் ஏற்கப்பட மாட்டாது. 2. இந்த கோர்ஸ் எளிய ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.. 3. இதன் பின்னர் வரப்போகும் கோர்ஸ்கள் கூட உங்களுக்கு அனுப்புவோம். இது கண்டிப்பாக உங்களுக்கு உதவும் என்றே நாங்கள் நம்புகிறோம். 4. கூப்பனிலுள்ள நிபந்தனைகளை ஏற்க வேண்டும். 5. இத்திட்டத்தில் உரிமையாளரின் தீர்ப்பே முடிவானது.




192 பக்கங்கள்
2000 சித்திரங்கள்
பல்வேறு நிலைகளுடன்

இந்தக் கூப்பனை நிரப்பி உடனே அனுப்புங்கள் 2376

5 இலவச டிராயிங் கோர்ஸ்களோடு 192 பக்கங்கள் (2000 சித்திரங்கள்) தபால், பேக்கிங், விளம்பரச் செலவுகளுக்கு மட்டும் ஆகும் ரூ.100/- க்கு எனக்கு வி.பி.பி.யில் அனுப்புங்கள். தபால்காரரிடம் பணம் செலுத்தி வாங்கிக் கொள்கிறேன்.

Name --

Address --

-- Pin Code ☐☐☐☐☐☐

KVR INSTITUTE
Award Winner
No.77, Habibullah Road,
(Near: Kodambakkam Railway Stn.)
T.Nagar, Chennai - 600 017.
Ph: 044 - 8142641

இளமைக்கு மாற தயாராகுங்கள்...!



இவர் பேச்சு...



இவர் எழுத்து...



இவர் வாதம்...


இவங்க பேட்டி



இனிய ஆச்சர்யங்கள் தொடரும்!

''மோடி மஸ்தான் வேலை போலிருக்கிறதே?'' என்று வியக்காதவரில்லை... மோடியின் குஜராத் வெற்றியைத்தான் சொல்கிறோம்! அவர் ஜெயிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தவர்கள் கூட இந்த இமாலய வெற்றியை எதிர்பார்க்கவில்லையே? 'நிச்சயம் தொங்கு சட்டசபை... அதில் காங்கிரஸ் தொண்டியடித்து கூட்டாட்சி அமைக்கும்' என்று நம்பிய மும்பை 'புக்கி'கள் (பெட் கட்டி விளையாடும் தொழில் நடத்துபவர்கள்) இந் நிலையைக் கனவு கூட காணவில்லையே! அதனால், முடிவுகள் வெளிவந்ததும்... ஒருவர் தற்கொலை செய்து கொள்ள, ஒருவருக்கு ஹார்ட் அட்டாக் வர, இன்னொருத்தர் ஆகபத்திரி ஐ.சி.யூ.வில்... மும்பையின் மொத்த இழப்பு ஐந்நூறு கோடி!





• பூனை தம்பதி

கோடி கொடுத்தாலும் பூனை வளர்க்க மாட்டேன் என்று பிடிவாதம் செய்வோரிடையே அதையே மடியில் கட்டிக் கொள்ளும் தம்பதி மும்பையில்... ஃபெரட் - மௌரீன். ஃபெரட் அமெரிக்கன் கான்சலேட்டில் 'விசா' செக்ஷன் அதிகாரி; மௌரீன் கௌன்சல் ஜென்ரலின் காரியதரிசி. இவர்களின் பூனை பிரியத்துக்கு இவர்கள் சொல்லும் ஒரு கிறிஸ்துமஸ் கதைதான் அடிப்படையாம். தொழுவத்தில் அழுது கொண்டிருந்த குழந்தை ஏசுவை, ஒரு பூனைக்குட்டிதான் சமாதானப் படுத்திச் சிரிக்க வைத்ததாம். அகமகிழ்ந்த அன்னை மேரி அதன் தலையை வருடினானாம். அதனால், இன்றும் பூனைக்குட்டிகளின் நெற்றிப் பகுதியில் 'எம்' என்ற, அன்னை மேரியைக் குறிக்கும் எழுத்து வடிவிருக்குமாம். பார்க்கிறேன் பேர்வழி என்று பிராண்டல் பட்டுத் தொலையாதீர்கள். படித்தோமா... கம்மென்றிருந்தோமா!

சச்சின் வழியில் கங்குலி!

கம்மென்றிருந்தாலும் சும்மா விட மாட்டேனென்கிறார்களே? இப்படிக் கிண்டலடிக்கிறார்களே... ''கம்முனு நிக்காம, எப்பனாச்சும் ஒரு தபாவானா 'பேட்'டைத் தூக்கிப் பந்தை அடிங்க சார்... இது டெஸ்ட் மாட்ச் இல்லை; விளம்பரப் படம்'' என்று 315வது 'டேக்'கில் போடுகிறார்களே... அடுக்குமா? போதாக்குறைக்கு டீவியில் வேறு அவ்வப்போது ஷாருக்கான் 'கப் எங்கே?' கப் எங்கே?' என்று கேலி செய்கிறாரே... தாங்குமா? அதனால்தான் 'கப்சிப்'பென்று சௌரவ் கங்குலி, சச்சின் வழியில் தாமும் ஓர் உணவகத்தை நிறுவலாம் என்று முடிவு கட்டி விட்டார் போலும். 9500 சதுர அடியில் லோயர் பரேலில் இடம் பார்த்து விட்டார்; மெனுராஜன் சஞ்சீவ்கபூரை வளைத்துப் போட்டு விட்டார். கண்ணாடியால் ஆன 'பார்' ஒன்றும், கிரிக்கெட் சம்பந்தமான லைப்ரரி ஒன்றும் 'ஸ்பெஷல் அட்ராக்ஷனாம்'! இனிமேல் அங்கே அடித்து நொறுக்கு வாராயிருக்கும்!

- ஜெய்ஸ்ரீ ராஜ்

மும்பை மசாலா :

"நால்வர் பொற்றாள் நம் உயிர்த்துணை"

சலுகையும் உண்டு! இலவச நூலும் உண்டு!

தெய்வப்புலவர் சேக்கிழார் அருளிய

பெரியபுராணம்

மூலமும் தெளிவுரையும் 2390 பக்கங்கள் 6 தொகுதிகளில்

இச்சலுகைகள் 9.1.2003 வரை மட்டுமே!

விலை ரூ.600 சலுகை விலை ரூ.400 மட்டுமே!

பக்திநூல்களில் பண்டைக் காலத்து நீதி காணீர்!

இந்தியத் திருநாட்டில் தற்போது பல துறைகளில் சீர் கேட்டைப் பார்க்கிறோம். ஆனால் ஒரே ஒரு துறை மட்டும் தடம் புரளாமல் அசைக்க முடியாத தூணாக நின்று ஜனநாயகம் என்னும் மாபெரும்மாளிகையைத் தாங்கி நிற்கிறது. அந்தத் துறைதான் நீதித்துறை! இந்த நீதி திடீரென இன்று நேற்றுத் தோன்றியதன்று. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்த நீதி எந்த அளவுக்குச் சிறந்திருந்தது என்பதனை இந்த பக்தி நூலிலிருந்து தெரிந்து கொள்ளலாம். பண்டையோர் எப்படியெல்லாம் ஆய்ந்து ஆய்ந்து உண்மையைக் கண்டு நீதி வழங்கியிருக்கிறார்கள் என்பதனைக் காண்போம்.

சோழர் காலத்து நீதி : தடுத்தாட் கொண்ட புராணம் அனை வருக்கும் தெரியும். பண்டை நியதிப்படி மண்ணில் மானிடனாய்ப் பிறந்த நம்பியாரூரரைச் சிவபெருமான் தடுத்து ஆட்கொண்ட நிகழ்ச்சி ஏதோ புராணக்கதை அல்ல. ஆழ்ந்து நோக்கினால் பண்டைக் காலத்தில் ஒரு வழக்கில் எப்படிச் சிறப்பாக ஆராய்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது என்பது புலனாகும்.

திருமண மேடையில் மாப்பிள்ளையாக ஆரூரர் அமர்ந்திருந்த போது, சிவபெருமான் தொண்டு கிழவனார் வேடம் தாங்கி வந்து, "உனக்கும் எனக்கும் முன் காலத்திலிருந்து வரும் வழக்கைத் தீர்த்த பின்தான் நீ திருமணம் செய்து கொள்ள முடியும்" என்று கூறினார். இந்த மாநிலத்தில் இதற்கு முன் இப்படி ஒரு வழக்கு இல்லையே என்று அனைவரும் திகைத்தனர்.

அவையோர் அனைவரும் ஆரூரர்க்கே ஆதரவாகப் பேசினர். வந்த கிழவனாரோ வழக்குக்குச் சான்றாக அடிமை ஓலையைக் காட்டினார். ஆத்திரம் அடைந்த ஆரூரர் அதனைப் பற்றி இழுத்துக் கிழித்து வீசி எறிந்தார்.

வழக்குத் தொடுத்த கிழவனார், ஆரூரர் விருப்பப் படி வழக்கைப் புத்தூரிலிருந்து திருவெண்ணெய் நல்லூருக்கு மாற்ற ஒப்புக் கொள்கிறார். (இப்போது கூட ஒரு நீதி மன்றத்திலிருந்து வழக்கை வேறொரு நீதி மன்றத்திற்கு மாற்றுவதைக் காண்கிறோம்.)

திருவெண்ணெய் நல்லூரில் வேதபாரகர் முன்னிலையில் வழக்கு வருகிறது. கிழவனாரிடம் "ஆட்சி (அனுபவ உரிமை), ஆவணம் (எழுத்து மூலமான ஆதாரம்), அயலார் காட்சி (கண்ணால் கண்டவர் சாட்சி) என மூன்றில் ஒன்று காட்டுவாய்" எனும் போது ஆவணத்தைக் காட்டுகிறார் (Documentary Evidence). மேலும், "இவன் புத்தூரில் ஆத்திரத்தில் கிழித் தெறிந்தது நகல் ஓலை; மூல ஓலை இதோ இருக்கிறது" என்றார். (இதிலிருந்து என்ன தெரிகிறது? எதற்கும் நகலைத் தான் அனுப்ப வேண்டும்: மூலத்தை உரிய நேரத்தில் தான் தர வேண்டும் என்பது தெரிகிறதல்லவா?)

அடிமை ஓலையாகிய ஆவணம் (ஆரூரரின் பாட்டனார் எழுதிக் கொடுத்த அடிமை ஓலை) வேதியர் அவைமுன் வைக்கப்பட்டது. அதிலுள்ள கையெழுத்து நம்பி ஆரூரரின் பாட்டனாருடையது தானா எனச் சரி பார்க்கப்பட்டது. இப்போதும் Comparison of Hand writing and signature என்னும் முறை உள்ளதை நாம் அறிவோம். பண்டைக் காலத்தில் சாட்சிக் கையெழுத்தும் ஆய்வு செய்யப்பட்டுத் தீர்ப்புக் கூறப்பட்டது. தற்போதும் இந்த முறை பின் பற்றப்படுவது கவனிக்கத்தக்கது.

இத்தகைய நீதி முறைகளோடு
சிவனடியார்களின் சிறப்பையும் புராணம்
என்ற பெயரில் அமைந்த
இந்நூலில் கண்டு இன்புறலாம்


இலவசநூல் — நாயன்மார் அவதாரத்தலங்கள் — விலை ரூ.60

சிவமெனும் செம்பொருளைச் சிந்தையில் இருத்தி, அச்செந்நெறியில் வாழ்ந்தவர்கள் நாயன்மார்கள். பிறப்பால்- இடத்தால் - இனத்தால்- தொண்டால் - தொழிலால் இவர்கள் வேறுபட்டிருந்தாலும், இறைவனருளால் ஒன்றுபட்டவர்கள். இந்நாயன்மார்கள் அவதரித்த- தொண்டு செய்து வழிபட்டுப் பேறு பெற்ற தலங்களை; யாத்திரையாகச் சென்று தரிசிப்பது சைவ உலகில் தலை சிறந்த பணியாகும். அதற்கு உதவும் பொருட்டே இந்நூல் வெளிவருகிறது. **ஒவ்வொரு நாயன்மார் வரலாற்றிலும், திருத்தொண்டர் புராணப் பாடல், சுருக்கமான வரலாறு, அவதரித்த தலம் ஆகிய விவரங்கள் தெளிவாக தரப்பட்டுள்ளன.**

இவற்றை தபாலில் பெற,9.1.2003 க்குள் கடிதம் எழுதுக. இருநூல்களையும் V.P.P. யில் அனுப்புகிறோம். சலுகை விலை ரூ.400+ தபால் மற்றும் கட்டுச் செலவு ரூ.50 சேர்த்து ரூ.450 மட்டும் தபால் காரரிடம் செலுத்தி நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம். நேரில்,9.1.2003க்குள் ரூ.400 மட்டும் செலுத்தி நூலினை உடனே பெறலாம். நேரம் : காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை. இடைவேளையின்றி. ஞாயிறு மற்றும் தமிழக அரசு விடுமுறை நாட்களில் விற்பனை இல்லை.

கடிதம் எழுத வேண்டிய முகவரி
வர்த்தமானன் பதிப்பகம்
15, சரோஜினி தெரு, தியாகராயநகர், சென்னை-17.
(உஸ்மான் சாலை - கீதாஞ்சலி ஹோட்டல் அருகில்)

கோயமுத்தூர் விஜயா பதிப்பகத்திலும் இதே சலுகை விலை ரூ.400 மட்டும் (நேரில் 9.1.2003க்குள்) ரொக்கமாகச் செலுத்தி நூலினைப் பெறலாம்.
விஜயா பதிப்பகம், கோவை. ✆: 394614, 382614.





கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா

- பாரதியார்.

தமிழகத்திலும் தீவிரவாதம்!


கர்னூல் மாவட்டத்தில் இருபது உயிர்களை பலிகொண்டு எண்பது பேரைக் காயமுறச் செய்த ரயில் விபத்து, திட்டமிட்ட சதி வேலை என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

புத்தம் புது ரயில் பாதையை ரம்பம் கொண்டு அறுத்துவிட்டு, அறுத்தது தெரியாமல் துணியைப் போட்டு மூடி வைத்துள்ளனர் சதிகாரர்கள். அறுப்பதற்குப் பயன்படுத்திய ரம்பமும் ஜெலட்டின் வெடிகுண்டுகளும், ரயில் பாதையினருகே புதர்களினிடையே கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ரயில்வே காவல் பிரிவு, தண்டவாளங்களை நோட்டமிட்டுக் கண்காணிக்கும் பணியை உருப்படியாகச் செய்திருந்தால், இந்த விபத்தைத் தவிர்த்திருக்கலாம் என்ற வாதம் எழுந்துள்ளது. ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, மத்திய அரசின் ரயில்வே அமைச்சகம்தான் விபத்துக்குப் பொறுப்பேற்றாக வேண்டும் என்கிறார்.



2003 ஜனவரி 5
சித்ரபானு மார்கழி 21
மலர் : 61
இதழ் : 23



ஆனால், இந்தியாவின் ரயில் பாதைகள் அனைத்தையும் ரோந்து சுற்றிக் கண்காணிப்பது என்பது நடக்காத காரியம். ஓரளவுக்குத்தான் இதைச் செய்ய முடியும்.

ரயில் பாதையைத் திட்டமிட்டு அறுக்கும் சதி ஏன் நிகழ்கிறது என்பதுதான் கேள்வி. அன்னிய நாடுகளிலிருந்து தீவிரவாதிகளின் ஊடுருவல், எல்லைப் பகுதி பயங்கரவாதம் போன்ற பிரச்னைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், ஆந்திர மாநில பீபிள்ஸ் வார் க்ரூப் என்ற நக்ஸல் அமைப்புதான் விபத்துக்குக் காரணம் என நம்புதற்கு இடமிருக்கிறது.

இஸ்லாமிய பயங்கரவாதத்தை ஒடுக்க, உலகளாவிய ஆதரவு வேண்டும் என்று குரல் கொடுத்து வரும் நமது அரசு, உள்நாட்டுச் சதிச் சக்திகளையும் போர்க் குழுக்களையும் தீவிர வாதிகளையும் கட்டுப்படுத்த என்ன செய்து வருகிறது...?

இது விஷயத்தில் மாநில அரசுகளின் பொறுப்புதான் அதிகம். ஒரு பகுதியில் தீவிரவாதம் முளைத்து, தீவிரவாத அமைப்புகள் பெருக என்ன காரணம்...? பெரும்பாலான சமயங்களில், பொருளாதார சமுதாய ஏற்றத் தாழ்வுகளே காரணமாக அமைகின்றன. ஒரு மாநிலத்தின் பின்தங்கிய மாவட்டங்களில்தான் தீவிரவாதம் ஆரம்பமாகிப் பெருகுகிறது. வேலையில்லாத, வருமானத்துக்கு வழியில்லாத இளைஞர்கள் சுலபமாக இயக்கங்களுக்குள் வளைத்துப் போடப் படுகிறார்கள். தங்களுக்கு எந்த வகையிலும் உபயோகமில்லாத, உபகாரம் செய்யாத அரசையும், அரசு அமைப்புகளையும் ஒழிப்பதும் தகர்ப்பதும் நியாயம், என்பதாகச் சிந்தனை விதைக்கப்பட்டு மூளைச் சலவை நடக்கிறது. வன்முறையின் பராக்கிரமம், பகுத்தறிவையும் நியாய உணர்வையும் சாகடித்து, ஏழை எளிய மக்களைச் சுலபத்தில் ஈர்த்து, அவர்களுடைய மௌனமான ஆதரவைப் பெற்று வருகிறது.

ஆந்திராவில் மக்கள் போர்க்குழு வேரூன்றியிருப்பது இவ்வாறுதான். அதன் கொடூர நடவடிக்கைகள் ஒரு சீரான கதியில் தொடர்ந்து வருகின்றன. தமிழகத்து தர்மபுரி மாவட்டத்திலும் இதே சமுதாயக் காரணங்களால்தான் நக்ஸல்பாரிகள் தழைத்தார்கள். சில ஆண்டுகளாக அடங்கியிருந்த அவர்களுடைய நடவடிக்கைகள், சமீப காலங்களில் மீண்டும் தலையெடுத்



திருப்பதைப் பார்க்கிறோம். கர்னூல் விபத்து போன்ற ஒன்று தமிழகத்திலும் நேரக்கூடும் என்கிற அளவுக்கு இன்று அச்சுறுத்தல் இருக்கிறது.

நமது தென்மாவட்டங்கள் தீவிரவாதிகளின் புகலிடமாக மாறி வருகின்றன என்ற செய்தியும் வெளியாகி, அச்சத்தையும் கவலையையும் தருகிறது. குற்றால மலைச் சாரலில் ரகசியக் கூட்டங்கள் நடக்கின்றன, சதித் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. இங்கெல்லாம் போலீஸ் கண்காணிப்பு அதிகரித்து வருவதாகத் தெரிகிறது.

காவல்துறை கண்காணிப்பு மிக முக்கியம் என்றாலும், பிரச்னையின் நிரந்தரத் தீர்வு நோக்கி சிந்தனையும் முயற்சிகளும் திரும்ப வேண்டியதும் மிக அவசியம்.

கல்விப் பெருக்கமும் பின்தங்கிய பகுதிகளில் வேலைவாய்ப்புப் பெருக்கமும் திட்டமிட்டு நிகழ்த்தப்படவேண்டும். பரிவினால், அன்பினால் மக்களைக் கவர்ந்து, அவர்களுடைய நம்பிக்கையை, விச்வாசத்தைப் பெற வேண்டும். உழைக்கவும் சம்பாதிக்கவும் வாய்ப்புகள் இருக்கும் போது, உயிரைப் பணயம் வைக்கும் தவறான சித்தாந்தங்களில் மக்கள் நம்பிக்கை வைக்க மாட்டார்கள்; அவற்றை எவ்வகையிலும் ஆதரிக்க மாட்டார்கள். வன்முறையும் தீவிரவாதமும் இயல்பாக மடியும்.

இதற்கான வழிவகைகள் செய்வது, ஓர் அரசின் கடமை. ஆனால், இது உடனடியாக நிறைவேற்ற இயாலத காரியம் என்பதால், கண்காணிப்பும் காவலும் கூடவே பலப்படுத்தப்பட வேண்டும்.

ஆந்திராவைப் பற்றியுள்ள இந்தப் பிரச்னை, தமிழகத்துக்குள் ஊடுருவ ஆரம்பித்திருப்பது தமிழக அரசுக்கு மிகப் பெரிய சவால். அமைதிப் பூங்காவான தமிழகம், அந்தப் பெயரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால், அரசும் காவல்துறையும் அமைதி கொள்ளாமல் மேற்சொன்ன இரண்டு அம்சங்களையும் கவனத்தில் கொண்டு, திட்டமிட்டு சுறுசுறுப்புடன் செயல்பட வேண்டும். அடக்குமுறை மட்டுமே வெற்றி பெறாது; மாறாக எதிர்ப்பும் தீவிரவாதத்தில் முனைப்பும் அதிகரிக்கும். ○

வருகை

தூரத்து மணியோசை
சொல்லி விடுகிறது...
தபால்காரரின் வருகையை.

சின்னக் கொலுசொலிகள்
சொல்லி விடுகின்றன...
குழந்தைகளின் வருகையை.

அடுப்பங்கரையில் கொதிக்கும்
கறியின் வாசம்
சொல்லி விடுகிறது...
உறவுகளின் வருகையை.

தரையைத் தேய்க்கிற
செருப்புச் சப்தம்
சொல்லி விடுகிறது...
அந்நியர் வருகையை.

பூனைப் பாதம் பதித்து,
மெல்லப் பின்வந்து...
'அய்...'யென
கட்டியணைக்கையில்தான்
உணர முடிகிறது...
உன் வருகையை மட்டும்.



- மு. முருகேஷ்

தேவ மருந்து

டாக்டர் எல்.மகாதேவன்

22

சமீபத்தில் சென்னை வந்திருந்தபோது, என்னுடைய நண்பர் வீட்டுக்குச் செல்ல நேர்ந்தது.

போக்குவரத்து நெரிசலில் மாட்டிக் கொண்ட என் நண்பரால் சொன்ன நேரத்துக்கு வர முடியாது போகவே, நான் அவருக்கும் முன்பாக, அவரது ஃபிளாட்டுக்குப் போய் விட்டேன்.

"உங்க நண்பர் வர்ற வரைக்கும் எங்க வீட்டுலே இருங்க ஸார்" என்று அன்புடன் அழைத்தார் எதிர் வீட்டுக்காரர். அவரது அழைப்பை மறுக்க முடியாமல் எதிர்வீட்டுக்குப் போனேன்.

இரவு எட்டு மணியைத் தாண்டியிருந்ததால், சாப்பாட்டுக் கடையை ஆரம்பித்திருந்தார்கள்.

டி.வி. யில் ஏதோ சிரிப்பு நிகழ்ச்சி ஓடிக் கொண்டிருக்க, வாயில் உணவுடன், ஓர் இளைஞர் சிரித்துக் கொண்டிருந்தார். இன்னொருவர், சாப்பிட்டுக் கொண்டே, ஃபோன் பேசினார். ஓர் இளம் பெண், கையில் தட்டை சுமந்தபடி, நின்று கொண்டே சாப்பிட்டார். இதற்கு நடுவே குழந்தைகள் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்ததால், சாப்பாட்டுக்கடை கூப்பாடுக் கடையாகியிருந்தது.

"இப்படிச் சாப்பிடுவது நல்ல பழக்கமல்லவே' என்று என் மனது சங்கடப்பட்டது. 'உணவை எப்படிச் சாப்பிட வேண்டும்' என்று ஆயுர்வேதம் அழகாகச் சொல்கிறது.

பத்தியமான உணவையும், அபத்தியமான உணவையும் ஒருத்தன் கலந்து சாப்பிட்டால், அதற்கு 'சமாசனம்' என்று பெயர். 'சமாசனம்' என்றால், உடம்புக்கு வேண்டிய உணவையும், தோஷம் தரக் கூடிய உணவையும் சேர்த்து, தாறுமாறாகச் சாப்பிடுவது. 'அத்தியஸனம்' என்றால் அளவுக்கு அதிகமாகச் சாப்பிடுவது (ஓவர் ஈட்டிங்) பட்டினியால் ஏற்படுவதைவிட, அளவுக்கு அதிகமாகத் தின்பதாலேயே, நோய்கள் அதிக அளவில் ஏற்படுகின்றன என்பதுதான் உண்மை.

'விஷமாஸனம்'னும் இருக்கிறது. அதாவது உணவை, விஷமாகச் சாப்பிடுவது, எந்த நேரத்திலே சாப்பிட வேண்டுமோ அதை விட்டு விட்டு, அகாலத்திலே சாப்பிடுவது, அளவுக்கு அதிகமாகச் சாப்பிடுவது அல்லது குறைவாகச் சாப்பிடுவது, ஒழுங்கீனமாக உட்கார்ந்து கொண்டு சாப்பிடுவது இதெல்லாம் விஷமாஸனம்.

இந்த மூன்று பழக்கங்களையும், தவிர்க்க வேண்டும். குளித்து, சுத்தமான ஆடைகள் அணிந்து கை



கால் அலம்பி, பித்ருக்களையும் தேவதைகளையும் நினைத்துக் கொண்டு, ஆச்சாரியர்களுக்கும், விருந்தினர்களுக்கும் பெரியவர்களுக்கும் சாப்பாடு பரிமாறிவிட்டு, நாம் சாப்பிடணும். இருக்கும் உணவை, பகிர்ந்து சாப்பிடணும்.

அந்தக் காலத்திலே, சாப்பிடும் செயலையே ஒரு யக்ஞம் போல நினைத்து, ரொம்ப சிரத்தையாகச் செய்தார்கள். நம்முடைய உடம்பிலே அக்னி ஸ்வரூபமாக இருக்கக் கூடிய பகவானுக்கு, நாம் செய்யக் கூடிய ஒரு யக்ஞம்தான் உணவு உட்கொள்வது. நித்ய "அக்னி ஹோத்ரம்' மாதிரி திவ்யமான காரியம்.

ஸ்ரீகிருஷ்ணர் "நான் அக்கினி வடிவமாகி, பிராணிகளுடைய உடம்பைச் சார்ந்து பிராணன், அபானன் இவற்றோடு கூடி நால் வகையான உணவை செரிக்கச் செய்து பின்பு ரஸமாக மாற்றுகிறேன்.

அக்னி வடிவாகிய பகவானுக்கு, நாம் அளிக்கக் கூடிய ஹவிஸாகிய உணவானது, அன்ன ரஸமாக மாறி, அது உடலுக்கு புஷ்டியை தருவது மட்டுமல்லாது, மனோ பாவத்தையும் பாதிப்பதால், சாப்பிடும் முறையை, பூஜையைப் போல சிரத்தை யுடன் செய்ய வேண்டும்.

மேலை நாட்டிலே சாப்பிடுவது என்பது சோஷியல் ஈவெண்ட். வெளியிடங்களில் கூடி, பேசிக் கொண்டே சாப் பிடுவார்கள்.

இப்படித்தான் சாப்பிடணும்!



ஆனால் நம் நாட்டில், அது ஒரு ரிச்சுவல் ஆக்ட். அமைதியாக உட்கார்ந்து, பரமாத் மாவைத் தியானித்து, ஒவ்வொரு கவளத் தையும் தெய்வமாக மதித்து, சாப்பிடணும்.

டீவி. பார்த்துக் கொண்டே சாப்பிடுவது, சாப்பிடும்போது சிரித்துப் பேசுவது, கோப மாகச் சண்டை போடுவது இதெல்லாம் கூடவே கூடாது.

பிரார்த்தனையோடச் சாப்பிடணும். பிரார்த்தனையிலேதான் பஞ்சப் பிராணன் களுக்கு ஆஹுதி கொடுக்கிறோம். "ப்ரா ணாய ஸ்வாஹா அபானாயஸ்ஹா வ்யானய ஸ்வாஹா, உதானாய ஸ்வாஹா, சமானாய ஸ்வாஹா'னு சொல்றதெல்லாம் ஆஹுதி மந்திரங்கள்.

சாப்பிடும்போது, முதல் கவளத்தை, நெய் கலந்து சாப்பிடணும். அக்னியிலே நெய் விட்டு உத்தீபனம் மாதிரி, வயிற்றில் உள்ள அக்னியை செய்கிற அக்னியை, முதலில் நெய் விட்டு பண்ணனும்.

'பிரதம கவள போஜ்யாம் சர்பிஷாம்'னு சொல்ற மாதிரி, முதல் உருண்டையிலே நெய்விட்டுச் சாப்பிடணும்.

'கொழுப்பு சத்து சேரக்கூடாது' என்ற விழிப்புணர்ச்சி தேவைதான். ஆனால் உடம்பில் மிதமான அளவில் எண்ணெய்ப் பசை இருக்க வேண்டும்.

இரைப்பையில் நான்கில் இரண்டு பகுதியில் அன் னத்தையும், ஒரு பகுதியில் பானத்தையும் நிரப்பணும். மற்றொரு பகுதியை 'வாயுவு'க்கு விட்டுடணும். சாப்பிட்ட பிறகுதான் தண்ணீர் குடிக்கணும். சாப்பிடுவதற்கு முன் னாலோ, இடையிலே குடிக்கக் கூடாது. 'இடையில் குடியேல்; கடையில் மறவேல்'னு சொல்வோம்.

பானங்களைக் குடிப்பதற்கும் ஒரு விசேஷ முறை உள்ளது. 'அனுபானம்'னு சொல்வோம். கோதுமைப் பண்டங்களைச் சாப்பிட்டால், குளிர்ந்த ஜலம் சாப்பிடணும். மாவு பண்டங்களைச் சாப்பிட்டால், உஷ்ண ஜலம் சாப்பிடச் சொல்வார்கள். பயறு வகைகளைச் சாப்பிட்டால், தயிர், நீர்மோர், சாப்பிடணும். உடல் படுத்துள்ளவர்கள், சாப்பிட்டதும் நீரில் தேன் கலந்து சாப் பிட்டால், உடம்பு குறையும்.

களைப்பாக உள்ளவர்கள், ஸ்த்ரீ சம் பந்தமுள்ளவன், வெயிலில் சுற்றும் வேலை உள்ளவர்கள், உடல் மெலிந்தவர்கள, நோய் வாய்பட்டவர்களுக்கு எல்லாம் பால் ரொம்ப நல்லது.

உணவைச் சாப்பிட்டதும், நீர் குடிப்ப தால், கெட்டியான உணவு, குழைந்து, ஜீரணமாக உதவும்.

சாப்பிட்ட உடனே, சிரமமான வேலை செய்யக் கூடாது. நாற்பத்து ஐந்து நிமிடம் (1 முஹுர்த்தம்) வரை ஓய்வு எடுத்துவிட்டு, மற்ற வேலைகளில் ஈடுபடலாம்.

(தொடரும்)

"எட்டு மணி வரைக்கும் இட்லி கடையிலே வியாபாரம் பார்த்துட்டு, எச்சியிலை எடுத்துப் போட்டு விட்டுதான் பெரிய பையன் காலேஜுக்கும், சின்னவன் பள்ளிக்கூடமும் போவாங்க."

பிளாட்பாரத்தில் இட்லி கடை வைத்து ஒரு மகனை 'சாஃப்ட்வேர்' என்ஜினியராக்கியிருக்கிறார்; இன்னொரு மகனை ஹோட்டல் மேனேஜ்மெண்ட் படிக்க வைத்து, அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்திருக்கிறார், தன்னம்பிக்கைப் பெண்மணியான சரஸ்வதி. திருவான்மியூரில் குறுகலான தெருவில் இப்போது சின்னதாக ஒரு 'மெஸ்' நடத்தி வருகிறார் . இவருக்கு உதவியாக, கணவர் சின்னசாமி.

"'ஒட்டன்சத்திரம்' பக்கத்திலுள்ள 'பெருமாள்நாயக்கன் வளவு' என்ற கிராமம்தான் சொந்த ஊர். ஓர் ஏழை விவசாயிக்கு ஐந்தாவது பெண் நான். பெரிய பெண்ணாகும்வரை ஆடு மேய்ச்சுக்கிட்டிருந்தேன். அப்புறம் கூலி வேலைக்குப் போனேன்.

எனக்குக் கல்யாணம் செய்து வைக்குமளவிற்கு, வசதியில்லாத குடும்பத்தில்... யார் கல்யாணம் செய்து கொள்வார்கள் என்று நினைத்திருந்த சமயத்தில்தான், என் கணவர் சின்னசாமி பெண் கேட்டு வந்தார். சீர் செனத்தி செய்ய முடியாத இடம் என்று தெரிந்தும், கட்டின புடைவையோடுதான் என்னைக் கட்டிக்கிட்டாரு. ஊரில் பிழைக்க வழியில்லாமல், திருமணமான மூன்றாவது நாளிலேயே பிழைப்பு தேடி கொடைக்கானல் வந்தோம். ஒரு பள்ளியில் அவருக்கு மாசம் நூற்றைம்பது ரூபாயும், எனக்கு எண்பது ரூபாயும் சம்பளம் கொடுத்தார்கள். கொஞ்ச நாள்ல எனக்கு வேலை இல்லைன்னு சொல்லிட்டாங்க. 'குறைந்த வருமானத்தோடு, இந்தக் குளிரில் ஏன் வாழ்க்கையோடு போராடுறீங்க; சென்னைக்குப் போனால் பிழைக்க நிறைய வேலை இருக்கு'ன்னு, அங்குள்ளவங்க சில பேர் சொன்னாங்க.

"1977ம் வருஷம் என்னுடைய முதல் பையன் ரமேஷ் ஆறு மாதக் குழந்தை. சென்னைக்கு வந்துட்டோம். அடையாறு காந்திநகர்ல ஒரு கல்கத்தாக்காரர் பங்களாவில், அறுபது ரூபாய் சம்பளத்துக்கு வேலை கிடைச்சது. அவர்கள் வளர்த்த ஒரு நாய்க்குச் சாப்பாடு போடுவதிலிருந்து, குளிப்பாட்டி பராமரிப்பதுவரை என் வேலைதான். இதற்காகப பத்து ரூபாய் சம்பளம் எக்ஸ்ட்ரா தந்தார்கள். தங்குவதற்கு அங்கேயே ஒரு சின்ன அறை. வெறும் மூன்றாவது வரை படித்த எனக்கு, அந்தக் கல்கத்தாக்காரர்கள்தான் ஆங்கிலம் பேசுவதற்குக் கொஞ்சம் கொஞ்சம் கற்றுத் தந்தார்கள். இவர்கள் தரும் கூலி போதவில்லை.

அடுத்து நடிகர் எம்.என். நம்பியார் ஐயா



• ரமேஷ்



• கணவர் சின்னசாமியுடன் சரஸ்வதி

அசத்தல் அம்மா!

வீட்டில் என் கணவரும், அவர் மகன் சுகுமாரன் சார் வீட்டில் நானும், வீட்டு, சமையல் வேலை சிறிது காலம் செய்து வந்தோம்.

"1980 ஆம் வருஷம் என் இரண்டாவது பையன் சுரேஷ் பிறந்தான். வேலையை விட்டுட்டு, திருவான்மியூரில் பிளாட்பாரத்தில் சின்னதா ஒரு இட்லி கடை வைத்தேன். ஒரு இட்லி இருபது பைசா. அப்படியே கொஞ்சம் கொஞ்சம் கூட்டம் வரத் தொடங்கியதும், ஓரளவு வருமானம் வந்தது. மத்தியானத்தில் பரோட்டா போட்டோம். என் பெரிய பையன் ரமேஷை, துரைப்பாக்கம் ஜெயின் கல்லூரியில் பி.காம் படிக்க வைத்தேன். அடுத்தவன் சுரேஷ் பத்தாவதில் நல்ல மார்க் எடுத்திருந்தான். அவனை 'ப்ளஸ் ஒன்' சேர்த்தேன்.

"என்னுடைய இரண்டு பையன்களும் அதிகாலைல நாலு மணிக்கே எழுந்து, ஒரு மணி நேரம் படிப்பாங்க. அப்புறம் பால் வாங்கி வந்து காப்பி போடுவாங்க. எட்டு மணி வரைக்கும் இட்லி கடையிலே வியாபாரம் பார்த்துட்டு, எச்சிலிலை எடுத்துப் போட்டுவிட்டுதான் பெரிய பையன் காலேஜுக்கும், சின்னவன் பள்ளிக்கூடமும் போவாங்க.

"மறுபடியும் ஒரு மணிக்கு வந்து மாவு பிசைந்து பரோட்டா போடுவாங்க. என் பையன்கள் கொஞ்சகூட கௌரவம் பார்க்க மாட்டாங்க, வெட்கப் பட மாட்டாங்க... சரஸ்வதியின் கண்களில் கண்ணீர் எட்டிப் பார்க்கிறது.



• சுரேஷ்

"பிளாட்பாரத்தில் கடை வைப்பதென்பது சாதாரண விஷயமில்லை. நிறைய இடைஞ்சல்கள். அதையெல்லாம் சமாளிச்சுதான் ஆகணும். பகலில் பிளாட்பாரத்தில் கடை, இரவு படுப்பதற்கு சின்னதாக வாடகை வீடு. இப்படித்தாங்க எங்க வாழ்க்கை போய்க்கிட்டு இருந்தது. எது எப்படியோ, என் பையன்களை நல்லா படிக்க வைக்கணுங்கறதுதான் என் கனவு, ஆசை, இலட்சியம். இதற்காக நானும் என் கணவரும் கடுமையா உழைச்சோம். திருவான்மியூர்ல இருந்து கொத்தவால்சாவடி வரைக்கும், சைக்கிளில் நானே போய் காய்கறி வாங்கி வருவேன் என்றார் சரஸ்வதி, முகத்தில் பெருமையோடு.

"நாலு வருஷம் கடை நடத்தினோம். அக்கம் பக்கத்துல நிறைய போட்டி. கடைங்க வர ஆரம்பிச்சதும், பிஸினஸ் குறைஞ்சு போச்சு... இதற்கிடையில் என் பசங்க படிப்பு செலவுக்குன்னு கொஞ்சம் சேர்த்து வச்சிருந்த பணத்தை எடுத்துக்கிட்டு மறுபடியும் ஊருக்கே போய்டலாமுன்னு, தோணுச்சு. திரும்பிப் போனா சொந்தக்காரங்க மதிக்க மாட்டாங்கன்னு திருவான்மியூர்லேயே தினம் ஒரு பதினைஞ்சு பேர் ரெகுலரா சாப்பிடறா மாதிரி இப்போதான் ஒண்ணு ஆரம்பிச்சோம்.

பெரிய பையன் ரமேஷ் 'எம்.சி.ஏ' முடிச்சுட்டு, இன்னைக்கு ஒரு கம்பெனியில சாஃப்ட்டுவேர் என்ஜினியராக இருக்கிறான். என் சின்னப் பையன் சுரேஷை, கடன் வாங்கி, 'ஹோட்டல் மேனேஜ்மென்ட் கோர்ஸ் படிக்க வச்சேன். நானும், என் கணவரும் படிக்காதவங்க, என் பிள்ளைகள் அப்படி ஆகி விடக் கூடாதுங்கறதுக்காக, 'இதோடு படிப்பு முடிஞ்சு போச்சுன்னு நெனைக்காதப்பா...



''செகரட்டரி சார்.. நீங்க நம்ம முதலமைச்சரோட அனுதாபியா இருக்கலாம்... அதுக்காக கச்சேரிகள் நடந்துக்கிட்டிருக்கறச்சே வயலின் வித்வான், மிருதங்க வித்வான் ஆகியோரை அடிக்கடி மாற்றுவது கொஞ்சங் கூட நல்லாயில்லே!''

- புளியரை கணேசன்

நீ என்ன படிக்கணும்னு தோணுதோ அதைப் படி, ஆனா அது உன் வாழ்க்கைக்குப் பிரயோஜனமா இருக்கணும்னு' சொன்னேன். ஒருநாள் சுரேஷ் என் கிட்ட வந்து 'ஷிப்பிங் கோர்ஸ்' படிக்கப் போறேம்மா. அது படிச்சு முடிச்ச உடனே அமெரிக்காவுல வேலை கெடைக்கும்னு' சொன்னான். படிக்க டெல்லிக்கு அனுப்பி வச்சேன். படிச்சு முடிச்சுட்டு வந்து, சவேரா ஹோட்டலில் வேலைக்கு சேர்ந்தான். திடீர்னு ஒருநாள் அமெரிக்கா போறதுக்கு மும்பையிலே இன்ட்ர்வியூ இருக்குன்னு தகவல் வருது. இதை நாங்க யாருமே கொஞ்சங்கூட எதிர்பார்க்கல. என் கையில் வெறும் நானூறு ரூபாய்தான் இருந்தது. உடனே அதைக் கொடுத்து மும்பைக்கு டிக்கட் புக் செய்யச் சொன்னேன். கடன் கேட்டா இல்லேங்கிற பதில்தான் வருது. கையில் ஒரு நகையும் இல்லை. எங்கள் நிலைமையைக் கேள்விப்பட்டு எதிர் வீட்டிலிருக்கும் தெரிந்த பெண், தன்னுடைய நகையைக் கழற்றித் தந்தபோது தான், கடவுள் ஏதாவது ஒரு வழியில் வழி காட்டுவார் என்பதைத் தெரிந்துகொண்டோம்.

''மும்பைக்குப் போய் இன்டர்வியூ முடிந்து, அமெரிக்கா போவதாக தகவல் சொன்னதும், என்னால் நம்பவே முடியாமல் ஓவென்று அழுதுவிட்டேன். இந்த பிளாட்பார வாழ்க்கை வாழ்ந்தது, இதைப் பார்க்கத்தான்...'' - மீண்டும் குளமாகிறது சரஸ்வதியின் கண்கள்.

''இப்போ நியூஜெர்சில இருக்கான். 900 பேர் வேலை செய்யும் 'ஷிப்பிங்' கம்பெனியாம். வாரத்துல புதன், வியாழன் மட்டும் தான் தரையில இருப்பானாம். மத்த நாளெல்லாம் கப்பல்லதானாம்'' சொல்லும்போதே முகத்தில் பெருமை பூரிக்கிறது.

''அமெரிக்காவுக்குப் போய் இதோட நாலு மாசம் ஆகுதுங்க. போன மாசம் தான் கொஞ்சம் பணம் அனுப்பி இருந்தான். இனி மேல்தான் கடனை அடைக்கணும். இந்த மெஸ்ஸை மெயின் ரோட்டுக்குக் கொண்டு போகணும்'' என்றார் படபடக்க.

''உங்க பையன் அமெரிக்காவுக்கு வந்துடச் சொன்னா, நீங்க போய்டுவீங்களா'' என்று கேட்டோம்.

''அவன் நல்லா இருந்தா அதுவே போதுங்க. என்னதான் பணம் வாங்கிட்டுச் சோறு போட்டாலும், பசின்னு வரவங்களுக்கு நல்ல சாப்பாடு போடறது ஒரு திருப்திதாங்க'' என்றார் கண்ணீரோடு!

- வி. பாலு

படங்கள்: 'டிஜிட்டல்' சண்முகம்



உ

ஸ்ரீ ராமஜெயம்

ஸ்ரீ விகனஸ மஹா குருவே நம :



ஸ்ரீ லக்ஷ்மி குபேர தனாகர்ஷன மஹாயக்ஞம்

ஸ்ரீ சூக்த மஹாயக்ஞம்

ஸ்ரீ சூக்த பாராயணம் (ஒரு லக்ஷம் ஆவ்ருத்தி)

(18.1.2003 சனிக்கிழமை 5.00 P.M. முதல்

19.1.2003 ஞாயிற்றுக் கிழமை 7.00 P.M. முடிய)

ஸ்ரீ லக்ஷ்மி குபேர தனாகர்ஷன மஹாயக்ஞம்
நடைபெறும் இடம் :
டி.வி.ஆர். சுப்பி செட்டி வசந்த மண்டபம்
எண் : 14, மேற்கு சித்திர குளம் தெரு, மைலாப்பூர், சென்னை – 600 004.
போன் : 4610179

கட்டணம்					
	ரூ.100/-	ரூ.250/-	ரூ.500/-	ரூ.1000/-	ரூ.2,500/-

குறிப்பு: 1) ரூ.100/- செலுத்தும் பக்தர்களுக்கு ஸ்ரீ லக்ஷ்மி செப்பு டாலர், மிகவும் பிரசித்தி பெற்ற ஸ்ரீ லக்ஷ்மி குபேர படம் வழங்கப்படும்.

2. ரூ. 250/- செலுத்தும் பக்தர்களுக்கு ஸ்ரீ லக்ஷ்மி வெள்ளி காசு, மிகவும் பிரசித்திபெற்ற ஸ்ரீ லக்ஷ்மி குபேர படம் வழங்கப்படும்.
3. ரூ. 500/- செலுத்தும் பக்தர்களுக்கு ஸ்ரீ லக்ஷ்மி வெள்ளி காசு, ஸ்ரீ லக்ஷ்மி குபேரதனாகர்ஷன யந்திரம், மிகவும் பிரசித்திபெற்ற ஸ்ரீ லக்ஷ்மி குபேர படம் வழங்கப்படும்.
4. ரூ. 1000/- செலுத்தும் பக்தர்களுக்கு ஸ்ரீ லக்ஷ்மி வெள்ளி காசு, ஸ்ரீ லக்ஷ்மி குபேர தனாகர்ஷன யந்திரம், ஸ்ரீ மஹா லக்ஷ்மி விளக்கு, மிகவும் பிரசித்தி பெற்ற ஸ்ரீ லக்ஷ்மி குபேர படம் வழங்கப்படும்.
5. ரூ. 2,500/- செலுத்தும் பக்தர்களுக்கு ஸ்ரீ லக்ஷ்மி குபேர தனாகர்ஷன யந்திரம், ஸ்ரீ மஹா லக்ஷ்மி விளக்கு, ஸ்ரீ லக்ஷ்மி தங்க காசு (1கிராம்) மிகவும் பிரசித்திபெற்ற ஸ்ரீ லக்ஷ்மி குபேர படம் வழங்கப்படும். யாக சாலையின் உள் விசேஷ சங்கல்பம் செய்விக்கப்படும்.

குறிப்பு : மேற்படி பணம் செலுத்தும் பக்தர்கள் அனைவருக்கும் சங்கல்பம் செய்வித்து ரக்ஷாபந்தனம் செய்விக்கப்படும். M.O/ D.D/ காசோலை Postal மூலம் அனுப்பும் பக்தர்களுக்கு பிரசாதம் கொரியரில் அனுப்பி வைக்கப்படும்.

Postal மூலம் பணம் அனுப்புபவர்கள் தங்கள் பெயர், கோத்திரம், நட்சத்திரம் விலாசம் முதலியவைகளை மிகவும் தெளிவாக தமிழ் எழுத்தில் எழுதி அனுப்பவும்.

இங்ஙனம்

ஸ்ரீ சுதர்ஸன மஹாயக்ஞ்ய கமிட்டி,


S. ஸ்ரீரங்கராஜ பட்டாசாரியார், T. சம்பத்குமார், V. நந்தகுமார், M. பிரவீன்குமார், T. சுதர்ஸன்.

M.O./D.D. காசோலை, **Postal** மூலம் பணம் அனுப்ப வேண்டிய முகவரி:
ஸ்ரீ சுதர்ஸன மஹாயக்ஞ்ய கமிட்டி,
ஸ்ரீ ரங்கராஜபட்டாசாரியார்,
Old.No.5, New No.32. கேசவ பெருமாள் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை - 600 004. ஃபோன் : 461 0179

புன்னகை பூமி - 10

உள்ளங்கையில் ஒரு கிராமம்


தாய்லாந்தில் உல்லாசப் பயணிகள் மூலமாய் வரும் அந்நியச் செலாவணி ஒரு பொருளாதாரத் தூண். வருடா வருடம் லட்ச லட்சமாய்ப் பயணிகள் குவியும் தாய்லாந்தில், இந்தக் கலாசாரத் தாக்கத்தை மனத்தில் கொண்டு, பயணிகளைக் கவர ஒரு நூதன உத்தி வைத்திருக்கிறார்கள். உல்லாசப் பயணிகளுக்கு, தாய்லாந்தின் கிராமப்புறக் கலைகளையும் கலாசாரத்தையும், வாழ்க்கை முறையையும், காண்பிக்கவென்றே ஓர் இடம் உருவாக்கியிருக்கிறார்கள்.




தலைநகர் பாங்காக்கின் போக்குவரத்திலிருந்து நழுவி, அறுபது கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்து வந்தால் ''ரோஜாத் தோட்டம்'' (Rose garden) என்ற அந்த இடம் பூக்களால் சிரித்து வரவேற்கிறது. படகுச் சவாரி போக ஒரு ஏரி. ஏரிக்கு அருகில் ஒரு நட்சத்திர விடுதி, கால்ப் விளையாடும் மைதானம், என்று ரம்யமாக இருக்கிறது. பொதுவாய் இது மாதிரி ஏரி, சுற்றி புல் தரை என்று இருந்தால் ஊரில் இருக்கும் காதலர்கள் அங்கங்கே பிணைந்து கொண்டு பிதற்றிக் கொண்டிருப்பது உலகளாவிய கலாசாரமாயிற்றே... ஆனால் இங்கே என்னடாவென்றால் ஒரு ஜோடி கூடக் காணவில்லை. தேடினால் அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. இந்த இடத்திற்குக் காதலர்கள் வந்தால், அந்த ஜோடி பிரிந்துவிடும் என்று உள்ளூர் காதலர்களிடையே ஒரு நம்பிக்கை இருக்கிறதாம். (மெரினாவில் இது மாதிரி ஒரு புரளி கிளப்பினால் கடற்கரை எவ்வளவு கண்ணியமாய் இருக்கும்!)

கலை அரங்கம்

ரோஜா தோட்டத்தில் இருக்கும் கலைக்கூடம்தான் அந்த



• க்வாய் நதி பாலம்





• நீள நக நடனம்

இடத்தின் கரு. கலைக்கூடம், ஒரு கிராமம் போல உருவாக்கப்பட்ட பெரிய திறந்தவெளி அரங்கம். அதனுள் சின்னச் சின்னதாய் குடில்கள். இந்தக் குடில்கள் எல்லாம் தாய்லாந்தின் வடக்கு, தெற்குப் பகுதி கிராமங்களைச் சார்ந்த, வேறு வேறு பாணியில் கட்டப்பட்ட, குடில்கள். உலா வரும் தாய்லாந்தவர்கள் எல்லோரும் அந்தந்தப் பிரதேசத்தின் உடைகள் தரித்தவாறு இருக்கிறார்கள்.

கிராமத்தின் முக்கிய அம்சம் கலை நிகழ்ச்சிகள் நடக்கும் அரங்கம். அரங்க மண்டபமே தாய்லாந்தின் பழைமையான கட்டிடக்கலையில் முற்றிலும் மரத்தால் ஆன, களிமண் தரையோடு கட்டப்பட்ட கட்டடம். ஐந்நூறு பேருக்கும் மேல் உட்கார்ந்து பார்க்க வல்ல ஓர் அரங்கம். மேடை இரு பகுதிகளாய்ப்





• கிராமிய நடனம்

பிரிக்கப்பட்டு, மேல் பகுதியில் கலை வேலைப்பாடுகளின் அலங்கரிப்பின் இடையே வாத்தியக்காரர்கள் அமர்ந்து இசைத்துக் கொண்டிருக்க, கீழே இருக்கும் இரண்டாவது தளத்தில் நிகழ்ச்சிகள் நடக்கின்றன.

ஒரு மணி நேரம் கலை நிகழ்ச்சியில் பல அம்சங்கள். முதலில் வரவேற்பது 'போன் லாப்' என்னும் 'நீள நக' நடனம். நீளமான நகங்களை விரலில் பொருத்திக் கொண்டு கைகளைக் குழைத்துக் குழைத்து ஆடும் நடனம். வடக்குத் தாய்லாந்தில் பிரபலமான இந்த நடனம், விருந்தினர்களை வரவேற்கும் ஒரு விசேஷ நடனம்.

ரோஸ் கார்டன் ஓர் ஆச்சரியமே அல்ல. அதை விட நூறு மடங்கு பெரிய தாய் இன்னொரு நகரமே இருக்கிறது. தாய்லாந்தில் உள்ள சரித்திரப் புகழ் பெற்ற கோயில்கள், கட்டடங்கள், அரண்மனைகள் அத்தனையும் சிறிய அளவில் கட்டப்பட்டு, கொலுவீற்றிருக்கும் புராதன நகரம் (Ancient City) என்கிற திறந்தவெளி அருங்காட்சியகம் ஒன்றிருக்கிறது. இதன் உள்ளே வாகனத்தில் தான் பயணிக்க முடியும். இவை மினியேச்சர்கள் அல்ல. ஒவ்வொரு கட்டடத்தையும் உள்ளே சென்று பார்த்து வரும் வகையில், கட்டப்பட்ட, அளவில் சிறியதான ஒரு நகல். தாய்லாந்தில் இருக்கும் பிரபலக் கட்டடங்கள் இருக்கும் இந்த அருங்காட்சியகத்திலும், இந்தியத் தாக்கம் இல்லாமல் இல்லை. இதன் உள்ளே ராமாயணக் காட்சிகளையும், இந்துக் கடவுள்களையும் செதுக்கி வைத்திருக்கும் பூங்கா ஒன்று இருக்கிறது.

தாய்லாந்தில் எங்கே போனாலும் ஏதாவது கலை நிகழ்ச்சிகள் பார்க்காமல் விட மாட்டார்கள். கான்ச்சனாபுரியில் இரண்டாவது உலகப் போரின் போது ஜப்பானியர்களால் கட்டப்பட்ட 'க்வாய் நதிப் பாலம்' உலகப் பிரசித்தி வாய்ந்தது. ஆயிரக் கணக்கான போர் வீரர்களைக் கடின உழைப்பில் ஈடுபடுத்திக்

ஆனந்த் ராகவ்





கொன்று குவித்து, ஜப்பானியர்கள் இருப்புப் பாதை (Death Railway) கட்டினார்கள். தாய்லாந்து வழியாக பர்மாவில் புகுந்து, இந்தியா வரை எட்டும் எண்ணத்தில் போடப்பட்ட இருப்புப்பாதைத் திட்டம் இது. இந்த சரித்திரத்தை வைத்து எடுக்கப்பட்ட Bridge over River Kwai என்கிற பிரசித்தி பெற்ற படம் உங்களுக்கு நினைவிருக்கலாம். அந்த இருப்புப்பாதையின் கடினமான பகுதி தாய்லாந்து வழியாகச் செல்கிறது. அந்த கொடூரத்துக்கு மௌனமான சாட்சியாக, பாலம் இன்னும் இருக்கிறது. சுற்றுலாப் பயணிகளைக் கூட்டி வந்து பாலத்தைக் காண்பிப்பதோடு இவர்கள் நிற்கவில்லை. அந்தக் கொடூரத்தின் உண்மையான தாக்கத்தை உணர வைக்க, இறந்த காலத்தை இழுத்து வந்து நிறுத்துகிறார்கள். ஒவ்வொரு டிசம்பர் மாதமும் இந்தப் பாலத்தின் பின்னணியில் ஒரு பிரம்மாண்டமான காட்சி நடத்தப்படுகிறது. பாலம் கட்டப்பட்ட வரலாறும், ஆயிரக்கணக்கானோரை ஜப்பானிய ராணுவம் கொன்று குவித்த காட்சிகளும், பாலத்தின் மேல் நிஜ ரயில் வண்டி பவனி வருவதும், இறுதியில் ஆங்கிலேயர்கள் அந்தப் பாலத்தைத் தகர்க்க மேற்கொண்ட குண்டு வீச்சும், அத்தனையும் நூதனத் தொழிற் நுட்பம் கொண்டு, இரவில் ஆயிரக்கணக்கானோர் நதியில் படகுகளிலும் மேலே அரங்கங்களிலும் அமர்ந்து பார்க்கும் வகையில், பிரம்மாண்டமாக நடித்துக் காண்பிக்கப் படுகிறது. போரின் இடையே உட்கார்ந்து பார்க்கும் உணர்வு ஏற்படும் வகையில், அற்புதமான ஓர் அனுபவம், இந்த ஒலி ஒளி காட்சி.

புது வருடக் கொண்டாட்டங்கள், அரசு விழாக்கள் மற்றும் ராஜ குடும்ப விழாக்களின்போது நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகளும், பிரம்மாண்டமான முறையில் நடத்தப்படுகின்றன. பாங்காக்கின் சௌப்ரயா நதிக் கரையில், பெரிய பெரிய அரங்கங்கள் அமைத்து சரித்திரக் காட்சிகள் நடத்தப்படுகின்றன. பார்வையாளர்கள் இருப்பது நதியில். நூற்றுக்கணக்கில் உல்லாசப் படகுகளில் மக்கள் அமர்ந்து, நதிக்கரையில் இரண்டு மூன்று கிலோ மீட்டர் இடைவெளியில் கட்டப்பட்ட மேடைகளின் முன், காட்சிகளைப் பார்ப்பார்கள். ஒரு காட்சி முடிந்ததும், அத்தனை படகுகளும் அடுத்த நாடகத்துக்கு விரைந்து சென்று, அணி வகுத்து நிற்கும். கொஞ்சம் பணக்கார உல்லாசப் படகாயிருந்தால், பயணிக்கும் நேரத்தில் போர் அடிக்காமல் இருக்க, படகுக்குள்ளேயே ஆடல், பாடல், விருந்து கேளிக்கைகள் என்று கோலாகலப்படும்.

வெளியூர் தலைவர்கள் யாராவது வந்தால் மட்டும், தாஜ்மகால் போன்ற உலக அதிசய சமாசாரங்களை அலம்பி, அவசர பூச்செடி நட்டுப் புதுப்பித்து, பிறகு மறந்து போகும் நம் சுற்றுலாத் துறை அதிகாரிகளை, இந்தப் பக்கம் இழுத்து வந்து இவர்கள் பொட்டலம் கட்டித் தரும் பாங்கைப் பார்க்க வைத்தால், நம்மூரின் பாவப்பட்ட ஸ்தலங்களுக்கு விடிவு காலம் பிறக்கும். வேறு எதுவும் வேண்டாம். கலை நிகழ்ச்சியில் காசி யாத்திரையும், நலங்கும் கலந்த கல்யாணக் காட்சியை மேடையேற்றினால், அதைப் பார்க்கவே பாதி அமெரிக்கா வரும்!

(முற்றும்)



"ஸார்! உங்ககிட்ட பாட்டு கத்துக்கணும்னு கொஞ்ச நாளாவே ரொம்ப ஆசையா இருக்கு..."

"ஸாரிப்பா! என்னோட கடைசி பொண்ணு மீனாவுக்குக் கல்யாணம் நிச்சயமாயிடுத்து!"

- சாவித்திரி வேங்கடசுப்ரமணியன்




எல்லாவித சர்க்கரை வியாதிகளுக்கும் உடல் ரீதியாக முன்னேற்றமடைய தெய்வீக மூலிகை சிகிச்சை



பல வருட ஆராய்ச்சியின் மூலம், வேதங்களும், ஞானிகளும் போற்றியதும், கடவுளுக்கு சமமாகவும், நம் நாட்டின் பல பொக்கிஷங்களில் ஒன்றாகவும் கருதக் கூடிய பல தெய்வீக மூலிகைகளைக் கொண்டு பக்க விளைவுகள் இல்லாதவகையில், தாமே தயார் செய்த தெய்வீக மூலிகை மருந்துகள் மூலம் அடிக்கடி இரவில் சிறுநீர் கழித்தல், தேவையில்லாத போதும் அதிக அளவில் தண்ணீர் தாகம், சிறு வேலைகள் செய்தாலும் களைப்பு, பலஹீனம், சரியான உணவு உட் கொண்டும் எடை குறைவு, உடல் மெலிவு, அதிகமான பசி, அதிக அளவு தண்ணீர் குடித்தும் நாவறட்சி, தோல் வறட்சி, பரிசோதனையின் போது இரத்தத்திலும், சிறுநீரிலும் சர்க்கரையில் அளவு அதிகம் இருத்தல், உடலில் காயம் ஏற்பட்டால் விரைவில் ஆறாமை, ஆண்மைக் குறைவு கால் பாதம் எரிச்சல், குத்தல், மரத்துப் போகுதல், வீக்கம், மயக்கம், BP, கண்பார்வை குறைவு, மூட்டுவலி போன்ற குறைகளை உடைய நாட்பட்ட சர்க்கரை நோயாளிகளுக்கும் எந்த விதமான அறிகுறிகளும் இல்லாத ஆரம்ப நிலை சர்க்கரை நோயாளிகளுக்கும், குழந்தை சர்க்கரை நோயாளிகளுக்கும் (Juvenile Diabetics) சிறந்த முறையில் ஆலோசனைகளும் & சிகிச்சைகளும் அளிக்கப்படுகின்றது.

மற்றும் சிறுநீரகக் கோளாறு, எல்லாவிதமான இதயநோய், பல வகையான புற்று நோய் ஆண்மைக்குறைவு, குழந்தையில்லாத குறை, அல்சர், மூட்டுவலி, ஆஸ்துமா, சொரியாசிஸ் எனப்படும் எல்லாரக சர்ம நோய்களுக்கும் தரமான மூலிகை சிகிச்சைப் பெறலாம். அணுக வேண்டிய முகவரி



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

Chennai Cell : 98410 45138 Vellore Cell : 98423 69696

தலைமை முகவரி : Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, Dr.M.சிவசக்தி, S/o Dr.C.K.மாணிக்கவாசகம்

P.B.No:30, No.3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர், வேலூர் Dt.-635601 ✆ 04179-220469, 222769

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 10

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1, மாலை 5 to 7 ✆ 28424285, 28427638

ஒவ்வொரு மாதமும் வெளியூர்களில் டாக்டரை நேரில் சந்திக்க

வேலூர்	காஞ்சிபுரம்	கடலூர்	விழுப்புரம்	திருவண்ணாமலை
2ந் தேதி - 12 pm to 2 pm (N.S.R.லாட்ஜ்) 26A, ஆரணி ரோடு, (கண் ஆஸ்பத்திரி அருகில்) ✆ : 0416 - 213159	2ந் தேதி - 5 pm to 6 pm ராஜம் லாட்ஜ், (பஸ் நிலையம் அருகில்) காமராஜர் தெரு, ✆ : 04112 - 222519	4ந் தேதி - 9 am to 11 am ஆர்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல், ✆ : 04142 - 330707, 330717	4ந் தேதி - 2 pm to 3 pm ஹோட்டல் ஆனந்த, பஸ் நிலையம் எதிரில், ✆ : 04146 - 22962, 28626	4ந் தேதி - 5 pm to 6 pm ராஜா லாட்ஜ், (பஸ் நிலையம் எதிரில்) ✆ : 04175 - 22536
மும்பை	**பெங்களூர்**	**ஓசூர்**	**சேலம்**	**ஈரோடு**
7 & 8ந் தேதி - 10 am to 8 pm The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga (CR), ✆ : 022 - 4083879, 4011589	9ந் தேதி - 11 am to 1 pm ஹோட்டல் பிராட்வே, (கல்பனா தியேட்டர் அருகில்) கெம்பகவுடா ரோடு, ✆ : 080-2266374,2873013	9ந் தேதி - 4 pm to 5 pm சீனிவாசா லாட்ஜ், பாகலூர் ரோட், ✆ : 04344 - 42899, 43321	12ந் தேதி - 11 am to 1 pm ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில், ✆ : 0427 - 449333, 449332	12ந் தேதி - 4 pm to 6 pm ஹோட்டல் ஆக்ஸ்ஃபோர்ட்டு, பஸ் நிலையம் எதிரில், ✆ : 0424 - 226611/12/13/14
கோயம்புத்தூர்	**மதுரை**	**தஞ்சாவூர்**	**திருச்சி**	**நாமக்கல்**
13ந் தேதி - 9 am to 1 pm சேரன் பேலஸ் லாட்ஜ் (சாந்தி தியேட்டர் பின்புறம்) ✆ : 0422 - 302211, 302220	14ந் தேதி - 9 am to 11 am ஹோட்டல் கிராண்ட் சென்ட்ரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு, ✆ : 0452 - 343941	14ந் தேதி - 5 pm to 7 pm அசோகா லாட்ஜ், தஞ்சாவூர். ✆ : 04362 - 330022	15ந் தேதி - 9 am to 11 am ஹோட்டல் ஆனந்த், (சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில்) ✆ : 0431 - 415545	15ந் தேதி - 2 pm to 4 pm ஹோட்டல் தேவி அன்னபூர்ணா, நாமக்கல். ✆ : 04286 - 20433, 21336
நியூடெல்லி	**தர்மபுரி**	**திருப்பூர்**	**உடுமலைபேட்டை**	**திண்டுக்கல்**
18 & 19ந் தேதி - 10 am to 8 pm South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh. ✆ : 011-5717126,5723651	22ந் தேதி - 8 am to 10 am ஸ்ரீ மகேஸ்வரா லாட்ஜ், 103, அதியமான் பைபாஸ் ரோடு, ✆ : 04342 - 260226, 261472	22ந் தேதி - 2 pm to 3 pm ராமகிருஷ்ணா லாட்ஜ், ஈஸ்வரன் கோவில் தெரு, ✆ : 0421 - 240418	22ந் தேதி - 6 pm to 7 pm ஹோட்டல் குறிஞ்சி, (பஸ் நிலையம் எதிரில்) ✆ : 04252 - 224353	23ந் தேதி - 9 am to 11 am ஹோட்டல் குறிஞ்சி, பஸ் நிலையம் பின்புறம், ✆ : 0451 - 421056, 427017
தூத்துக்குடி	**திருநெல்வேலி**	**நாகர்கோவில்**	**விருதுநகர்**	**கரூர்**
23ந் தேதி - 5 pm to 6 pm ஹோட்டல் ஆல்வின், தேவர்புரம் ரோடு, ✆ : 0461 - 327780	24ந் தேதி - 8 am to 11 am ஹோட்டல் ஸ்ரீ சித்தபதி, மதுரை ரோடு, ✆ : 0462 - 333312	24ந் தேதி - 2 pm to 3 pm ஹோட்டல் சுவர்ணா, மீனாட்சிபுரம் ✆ : 04652 - 236078	25ந் தேதி - 8 am to 10 am அன்டன் லாட்ஜ், மதுரை ரோடு, ✆ : 04562 - 345537	25ந் தேதி - 2 pm to 4 pm அதி லாட்ஜ், ஜவகர் பஜார் ✆ : 04324 - 263763, 262663

தகவல் : SUN, RAJ, VIJAY, DD T.V. களில் எமது பேட்டியை காணத் தவறியவர்கள், டாக்டரின் மூலிகைகள் பற்றிய 28 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய **"எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்"** இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய **"என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்"** என்ற இரு புத்தகத்தையும் பதிவுத் தபாலில் பெற ரூ.200/- மேற்கண்ட முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.



மலையாள பெண் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர் ஸாரா தாமஸ். இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கிறார். கேரள சாகித்ய அகாதமி பரிசு, ஜனாதிபதி பரிசு, உள்ளிட்ட பல்வேறு பரிசுகளைப் பெற்றிருக்கிறார். சமூக, கலாசார அமைப்புகளிலும் இவரது பங்களிப்பு உண்டு.

அநேகமாகச் சின்ன வயது முதல், அதாவது நினைவு தெரிந்த நாள் முதல் என்று சொல்லலாம், அவளுடைய மனத்தை ஓர் ஆசை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது. ஒரு சஞ்சாரி ஆகவேண்டுமென்று; பயணம் செய்து கொண்டே இருக்க வேண்டுமென்று; நீண்ட தூரம், இடைவிடாமல் சரத்கால மேகங்களைப் போல! பொங்கிப் பாயும் மழை வெள்ளத்தில் காகிதக் கப்பல்களைப் போல! அதிவேகத்துடன் நீந்தி மறையும் மேக விளிம்புகளைத் தாவிப் பிடிக்க வேண்டுமென்று அவள் ஏக்கம் கொண்டிருக்க வேண்டும். அம்மாவின் இடுப்பில் இருந்தபோதே மேகங்களைப் பார்த்துக் கை உயர்த்திக் குதூகலித்திருக்கிறாள். குழந்தைகளுக்கான மொழியில் ஆர்வத்துடன் ஏதோ ஒலியெழுப்புகிறாள் என்றுதான் மற்றவர்களுக்குத் தோன்றி

பயணப்படுதல்

மலையாள மூலம் : **ஸாரா தாமஸ்**

தமிழில் : **இளம்பாரதி**



யிருக்கும்.

பின்னர் கால்களுக்கு வலு சேர்ந்த பின்பு, அறிவுக்கு மேலும் தெளிவு வந்தபோது, ஆசைப் போக்கில் மாற்றம் ஏற்பட்டது. அது மேல் அதிக உறுதியும் தெளிவும் பெற்றது. தன்னால் இப்போது நடக்க முடியுமே! ஆமாம், நடக்க வேண்டும் – மணல் பரப்பிய முற்றம் தாண்டி, வாசல் படிக்கட்டுகள் இறங்கி, அறுவடை முடிந்த வயல் வரப்புகளினூடே, ஆற்றின் மணல் வெளியில் காலாற நடக்க



வேண்டும். அதற்குப் பின் ஆற்றைக் கடந்து, படத்தில் வரையப்பட்டுள்ளது போன்று கம்பீரமாகத் தென்படும் மலை உச்சியைத் தாண்டிப் போக வேண்டும். வீட்டு முற்றத்தைத் தாண்டி வெளியே போக முடியாத அந்த வயதில், அவளுக்கு அந்தத் தொலைவை மட்டுமே நினைத்துப் பார்க்க முடிந்தது. ஆனாலும் அதையும் தாண்டி இருப்பதான உலகத்தைக் குறித்தும் அவள் தன்னுடைய அறிவுக்கு எட்டிய வரை நினைவுகளில் ஆழ்ந்தாள்.



குழந்தைப் பருவத்திற்கு அடுத்துப் பள்ளிக்கூடத்தில் படிக்கத் தொடங்கியபோது, அங்கே அறிவின் புதிய எல்லைகள் தென்பட்டபோது, தான் வாழ்ந்து கொண்டிருக்கும் உலகத்தைப் பற்றியதான அறிவு அவளை வியப்பில் ஆழ்த்தியது. எவ்வளவு வகைவகையான பூமி சார்ந்த இயற்கை விநோதங்கள், உயரங்கள், தாழ்வுகள், தாவரங்கள், விலங்குகள் – எல்லாவற்றுக்கும் மேலாக மனிதர்கள்! அவளுடைய சம பருவத்துப் பெண்கள் சுகுமாரக் கலைகள் பயின்றும், கன்னிப் பெண்களுக்கான களியாட்டங்களில் மூழ்கியும், அலங்காரம் செய்து கொள்வதில் முனைப்புச் செலுத்தியும் சிரித்துக் கும்மாளமிட்டும் வாழ்ந்திருந்த போது, அவள் மட்டும் தனக்கானதொரு தனி உலகத்தில் அலைந்து திரிந்தாள். தான் வாழும் சுற்றுவட்டத்தைத் தாண்டி வெளியே கடந்து செல்ல வேண்டும், உலகம் முழுவதும் சஞ்சரிக்க வேண்டும் என்பதான ஆசையை அவள் வெளிப்படையாகச் சொன்னபோது அம்மாவின் முகத்தில் அதிர்ச்சி கலந்த ஆச்சரியம் தென்பட்டது. பெண்ணாக இருப்பவள் என்றென்றும் அடுத்தவருடைய பராமரிப்பில் வாழ வேண்டியவள் என்றும், அதனால் இப்படிப்பட்ட ஆசைகளெல்லாம் வைத்துக் கொண்டிருப்பது தவறு என்றும், இதெல்லாம் கானல்நீர்க் கனவுகள் என்றும் அம்மா அவளுக்கு உணர்த்தினாள். அதற்குப் பிறகு, காடுகளும், மலைகளும், ஆறுகளும், நகரங்களும் தாண்டி உலகத்தின் பரப்பில் இடைவெளி இல்லாமல் தனக்குள் தானே

சஞ்சரித்த கனவுகளை, அவள் காகிதத்தில் எழுத்தாக்கினாள். எவர் கண்ணிலும் படா மல் அதை ஒளித்து வைத்தாள். அதில் திருப்திப்பட்டுக் கொள்ள முயன்றாள்.

அந்த நேரத்தில்தான் கல்யாணப் பேச்சுக் கள் எழுந்தன. பெண்கள் வயதுக்கு வந்து விட்டால், அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்துவிட வேண்டுமென்பதான சமூக சட்டதிட்டங்களால், அப்பா தேர்ந்தெடுத்துத் தந்த கணவனை வரித்துக் கொண்டாள். கணவனும் குடும்பமும்தான் எப்போதும் ஒரு பெண்ணின் உலகம், என்பதை அம்மா பல விதங்களில் மனத்தில் பதியச் செய்த உப தேசங்களை அவளால் புறக்கணிக்க முடிய வில்லை. அது மட்டுமல்ல, கணவனாக வரும் ஆண், தனக்கு உற்ற தோழனாக இருக்க வேண்டுமென்ற தன்னுடைய கனவுகள், மெய்ப்பட வேண்டுமென்ற எதிர்பார்ப்பு மனத்தில் முளைவிட்டது.

திருமண ஆரம்ப நாட்களிலேயே தன்னு டைய நெடுநாள் ஆசையைக் கணவனிடம் வெளிப்படையாகச் சொல்ல அவள் தயங்க வில்லை. அவர் அதைக் கேட்டு எகத்தாள மாகச் சிரித்தார்.

"நல்லாக் கேட்டுக்கோ, நாம கல்யாணம் பண்ணிக்கிட்டதோட முக்கிய நோக்கம் நம்ம ரெண்டு குடும்பங்களை நிலை நிறுத் துறதுக்காக, நமக்கான சந்ததிகளை உண் டாக்கணும் என்கிறதுதான். இல்லையா? இயற்கையோட சட்டமும் அதுதானே? அப்படியிருக்க, இப்பவே பயணங்கள் போகணும், ஊரைச் சுத்தணும்னா எப்படி?" அவருடைய நியாயமான வாதத்தை எதிர்த் துப் பேச முடியாமல் இணங்கிவிட்டாள். ஒன்று, இரண்டு, மூன்று – இப்படிப் பத்து வருடங்களின் இடைவேளையில், மூன்று குழந்தைகள். அவர்களை வளர்த்துப் பெரிய வர்களாக்கும் முயற்சியில் மூழ்கிய போது, அவளுடைய அந்தரங்க ஆசை மனத்தின் உள்ளறைகளில் ஒதுங்கி மயங்கிக் கிடந்தி ருக்க வேண்டும்.

பிள்ளைகள் வளர்ந்தார்கள். அவர்களுக் கான வாழ்க்கைப் பாதைகளை ஏற்கச் செய்து, இணைகளைத் தேடித் தந்த பின், அவர்கள் கூடு விட்டுப் புறப்பட்டுப் போயா யிற்று. எப்படி என்றே தெரியவில்லை. காலப்போக்கில் துருப்பிடித்து, நொறுங்கித் தொலைந்து போயிருந்த அவளுடைய கால காலத்து ஆசை, மீண்டும் நிறங்களைப் பூசிக் கொண்டு புது மெருகுடன் மனத்தின் மேல் மட்டத்திற்கு வந்தது. இதுதான் சமயம்! பொறுப்புகளை ஒதுக்கி வைத்துவிட்டுப் பயணத்தைத் தொடங்க வேண்டிய சமயம்! மனம் முணுமுணுத்தது. கணவனிடம் அவள் தன்னுள் பதுங்கிக் கிடந்த ஆசையைச் சொன்னாள். இந்தத் தடவை அவர் வெளிப் படையாக வெடிச் சிரிப்புச் சிரித்தார்.

"உன்னோட நெனப்பு போற போக்கு ரொம்ப விசித்திரமா இருக்கு. ஒரு பொம்பளே இப்படியெல்லாம் யோசிப் பான்னு என்னாலே நெனக்கவே முடியலே. பிள்ளைங்க கல்யாணம் பண்ணிக்கிட்டு குடும்பம் பெரிசான பெறகு, நமக்கான கட்டுப்பாடு இன்னமும் கூடுதலாயிரிச்சில்ல! இனிமே வர இருக்கிற சின்னஞ்சிறுசுகளை நாமதானே பொறுப்பாப் பராமரிக்கணும்? அவங்களைப் பத்தின குடும்பச் சுமையை ஒதுக்கி வைக்க முடியுமா?"

தன்னுடைய பேரன் பெயரில் ஒரு தொழிற்சாலை தொடங்குவதான அவ சரத்தில் இருந்தார் கணவர்.

தன்னுடைய பேத்திக்காக எஸ்டேட் ஒன்று வாங்க இருப்பதாகத் திட்ட மிட்டிருப்பதாக அவர் சொன்ன போது, அது தன்னை மகிழ்விப்ப தற்காகச் சொன்னது என்பதை அவள் புரிந்து கொண்டாள். தன்னு டைய அடிநாள் ஆசையை நிறை வேற்ற வேண்டுமென்ற எண்ணம்

"இந்தாங்க, அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர், என்ன சந்தேகம்னாலும் தயங் காம கேட்டுத் தெரிஞ்சுக்குங்க."
"இங்கே தலையணை கிடைக்குமா?"
– ஆர்.டி.பாஸ்கரன்



மட்டும் அவருக்கு வராதது, அவளிடம் பெரிய விரக்தியைத் தோற்றுவித்தது. குடும்ப பாரங்களையெல்லாம் ஒருவழியாக இறக்கி வைத்த பின்பு, தன்னுடைய ஆசையை நிறைவேற்றி வைப்பதாக அவர் சொன்னதெல்லாம் வெறும் வீண் வார்த்தை என்றாகி விட்டதே!

இந்தத் தடவை அவள் பின்வாங்குவதாக இல்லை. தங்களுடைய படுக்கையறையின் ஒரு பகுதி முழுவதும் நிறைந்து நின்றிருந்த சுவர் அலமாரியின் ஒரு கடைசிக் கதவை எரிச்சலுடனும் கோபத்துடனும் அவள் இழுத்துத் திறந்தாள். சிறிதும் பெரிதுமான ஏராளமான ஹேண்ட் – பேக்குகளும் பெட்டிகளும் – துணி கொண்டு போர்த்திய ஷோல்டர் – பேக் முதல் சக்கரம் பொருத்திய பெரிய பெரிய வி.ஐ.பி. சூட்கேஸ்கள் வரை. இவையெல்லாம் தன் கணவன் அவ்வப்போது நடத்திய பிசினெஸ் பயணங்களின்போது பயன் படுத்தியவை.

நரைத்து நிறம் மங்கிய பழையதான தோள்பையைத்தான் அவள் தேர்ந்தெடுத்தாள். வாழ்க்கையைத் தொடங்கிய காலத்தில் கணவன் தனக்குரிய மதியச் சாப்பாட்டையும், அத்தியாவசியச் சாதனங்களையும், வேலை பார்க்குமிடத்திற்கு அதில் வைத்துத் தான் எடுத்துப் போனார். அப்போதிலிருந்தே அந்தத் தோள்பை மீது அவளுக்குத் தனிப்பட்டதான பற்றுதல் உண்டு. என்றைக்காவது பயணப்படும்போது தன்னுடைய எழுது கருவிகளைக் கொண்டு செல்ல, அதை உபயோகப்படுத்த வேண்டுமென்று அவள் பலமுறை நினைத்ததுண்டு.

தோள்பை மீதான ஈர்ப்பும் குழந்தைப் பருவத்திலிருந்தே மனத்தில் குடிகொண்டதும், இப்போதும் கூட அதைத் தவிர்க்க முடியாமல் ஒட்டிக் கொண்டதுமான ஓர் ஆசை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒரு பயணம் புறப்படுவதன் முதல் ஆயத்தமாக அந்தத் தோள்பையை உள்ளுக்குள் காலி செய்து, தூசி தட்டி, தேவையானதை அடுக்க முனைந்த போது, தன்னுடைய கைகளை யாரோ பின்னுக்கு இழுப்பது போல் தோன்றியது. கால்களும் எட்டு வைத்து முன்னேறத் தயங்கின. எப்படித் தன்னையும் அறியாமல் இந்த மாற்றம்? தடுமாற்றம்? இந்த நான்கு சுவர்களுக்கு வெளியே தனியே நடக்கத் தன்னால் முடியாது போனதென்ன?

ஆமாம், அதுதான் உண்மை – மனது முணுமுணுத்தது. அடுத்தவர்களை அண்டியிருப்பதான விலங்குகள், தன்னைக் கட்டிப் போட்டிருக்கின்றன என்பதை அவள் நடுக்கத்துடன் புரிந்து கொண்டாள். அம்மா சொன்ன வார்த்தைகள் அவள் நினைவுக்கு வந்தன. அடுத்தவரை அண்டாமல் பிழைக்க முடியாத உணர்வு நிலையை வளர்த்துக் கொண்டதனால்தான், தனக்கான ஆசைகளை வளர்த்து நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை. பிற பெண்களைப் போலக் குடும்பத்தின் நான்கு சுவர்களுக்குள் எதனால் தனக்குத் திருப்தி உண்டாகாமல் போயிற்று?

அயர்வடைந்து இயலாமை உந்த, அவள் மனச்சுழலில் சிக்கினாலும் தன்னுடைய ஆசையை ஆணியறைந்து மனத்தில் நிலைநிறுத்த வேண்டுமென்று திட நிச்சயம் செய்தாள்.

நாட்கள் மாதங்களாகவும் வருடங்களாகவும் மாறிய போது தங்களுடைய சொத்து வகைகள் இரட்டிப்பு இரட்டிப்பாக வளருமென்று கணவர் சொல்லக் கேட்ட போதெல்லாம் அவளுக்கு அதில் மதிப்போ மகிழ்ச்சியோ எதுவும் ஏற்பட்டதில்லை. அவள் தன்னுடைய அறையின் பால்கனியி



“ஏண்டி... துணி செலக்ட் பண்ண இவ்வளவு நேரமா...?”

“சும்மா இருங்க உங்களைத்தான் சரியா செலக்ட் பண்ணலை... துணியையாவது சரியா செலக்ட் பண்ணிக்கிறேன்...!”

– அருள் மூர்த்தி

விருந்துகொண்டு ஆகா யத்தின் பரந்த வெளியில் அலைந்து திரியும் மேகங் களைப் பார்த்துப் பெருமூச்சு விடுவாள். பெண்ணின் வாழ்க்கை என்பது கணவனும் குடும் பமும்தான் என்பதான அம்மாவின் உபதேசத்தை இந்த நிலையிலும் தன்னால் ஏற்றுக் கொள்ள முடிய வில்லையே என்று பல முறை வேதனைப்பட்டி ருக்கிறாள்.

அவளுடைய அறுபதாம் பிறந்த நாளன்று அவளை வியப்பிலாழ்த்தும், சிலிர்க்கச் செய்யும் ஒரு வெகுமதி தரப் போவதாகக் கணவர் சொன்னபோது, எண்ண முடியாத வருடங்களுக்கு முன்பு மேகங்களில் ஏறிப் பயணங்கள் செய்ய வேண்டு மென்று ஆசைப்பட்ட பெண் மீண்டும் விழித்தெழுந்தாள். அவளுடைய பெயரில் கட்டி முடித்த ஏர் – கண்டிஷண்ட் தியேட்டரின் சாவியை அவர் அவளுடைய உள்ளங்கையில் அழுத்திக் கொடுத்தார். மனத்தில் ஆணியறைந்து பதித்து வைத்திருந்த ஆசை, கட்டு பாட்டை மீறித் தலை நிமிர்ந்தது. அவருடைய கையிலேயே அந்தச் சாவியைத் திருப்பிக் கொடுத்து, தன்னுடைய நீண்ட கால ஆசையை மீண்டும் நினைவுபடுத்தினாள். இந்த தடவை பொறுத்துக் கொள்ள முடியாத ஆவேசத்துடன் அவர் பேசினார்:

"என்ன நீ... கொஞ்சம் கூடப் பொறுப்பில்லாத சின்னக் குழந்தையாட்டம்? தலை நரைச்சதையும், முகத்திலே சுருக்கம் விழுந்திருக்கிறதையும், எதையுமே பார்க்கிறதில்லையா வேடிக்கை வினோதப் பயணங்களுக்கான வயசெல்லாம் நம்மளக் கடந்து போயாச்சின்னு உனக்குப் புரியலையா உன்னோட ப்ளட் பிரஷர் மறந்து போச்சா? ஒரு நாள் பத்தியம் தவறுனா என்னாகும்? அதுதான் இல்லேன்னாலும், உன் னோட பேரன் பேத்திகள் வயசுக்கு வந்துட்டாங்க என்கிற நெனப்பாவது இருக்கா? அவங்களுக்குச் சீக்கிரமா வரன் களைத் தேடிப் பிடிச்சுக் கரை சேர்க்கணும்கிற பொறுப்பு ருக்கா இல்லையா? நான் சேர்த்து வச்சிருக்கிற சொத்து களைப் பார்த்துக்கக் கூட ஒம் மகனுக்கு இப்போ நேரம் இல்லையாம்!"

அவளுக்கு ஏதாவது சொல்ல வேண்டியிருக்கிறதா இல் லையா என்று தெரிந்து கொள்ளக் கூடக் காத்திருக்க முடி யாதபடி, அவளுடைய கணவன் நடமாடும் மாளிகையாகத் தோற்றமளித்த பெரிய காரில் பயணப்பட்டுப் போய்விட் டார். வஞ்சகத்தின் மூலமாக லட்சங்கள் சம்பாதித்த மந்திரி யின் மகன்தான், தற்போதைய அந்தப் பயணத்தின் இலக்கு என்பதை அவள் அறிவாள். பொருந்தி வந்தால் எவரும் பொறாமைப்படத் தக்க சம்பந்தம்தான். தலைமுறைகளுக்கு வாரி இறைக்கும்படியான பணம் மட்டுமல்ல; பெயரும் புகழும் கூடத்தான்! லட்சங்களைத் தேடுவதான குறிக் கோளை எட்டும் முயற்சியில் ஒரு நாளின் இருபத்து நான்கு மணி நேரமும் கணவருக்குப் போதுமானதாக இருக்கவில்லை

இந்தத் தடவை அவளுக்கு நிராசையோ கோபமோ இயலாமையோ எதுவும் தோன்றவில்லை. மனத்தில் முழுமையான விரக்தியே பரவியிருந்தது. எதிர்பார்ப்புடன் காத்திருப்பதான ஒரு பயணம் தனக்கு எஞ்சியிருக்கிறது. இந்த வாழ்க்கையைத் தன்னை அறியாமலேயே கடந்து வந்திருப்பதைப் போலத் தன்னந்தனி ஆளாய், இயலா மையுடனான வெறும் கையுடன், நினைக்காத நேரத்தில் எதிர்ப்படும் அந்த முன்பின் தெரி யாத கரை நோக்கியதான நெடும்பயணம்! வந்த வழியே திரும்பிப் போவதான மீள் பயணம்! ○



பந்தாடப்படும் மேயர் தேர்தல்!

மேயர் தேர்தலை ஒத்தி வைப்பதில் எல்லாக் கட்சிகளும் - குறிப்பாக அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் - ஒருமித்த கருத்து கொண்டுள்ளனவோ என்ற ஒரு சந்தேகம் எழுந்துள்ளது. ஸ்டாலினிடம் தோற்றுப்போன பாலகங்காவை மேயராக அறிவிக்க வேண்டும் என்று மைத்ரேயன் போட்ட வழக்கில், தலைமை நீதிபதி விசாரணையின்போது போட்ட அதிரடியில், மாநிலத் தேர்தல் கமிஷன் தேர்தல் தேதியை உடனடியாக அறிவிக்கும் என்று எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால், இறுதிக் கட்ட விசாரணையில் "சர்வகட்சிகளும் வாக்காளர் பட்டியலை சரி செய்த பின் தேர்தல் நடத்தலாம்" என்று சொல்லிவிட்டதால், 'அதன் பின்தான் தேர்தல் நடத்தப்பட வேண்டும்' என்று முடிவாகி விவகாரம் நமுத்துப் போய்விட்டது. இனி தேர்தல் ஏப்ரல் மாதம் நடக்கலாம். அல்லது மீதி உள்ள நான்கு வருட காலம் மேயர் இல்லாமலே மாநகராட்சியை நடத்தலாம்!



• ஸ்டாலின்



• பாலகங்கா



வாக்காளர் பட்டியலைக் காரணமாகக் கொண்டு தேர்தலைத் தள்ளிப்போட தி.மு.க. உடன்பட்டிருக்கக் கூடாது என்கிறார்கள். உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கெதிராக சுப்ரீம் கோர்ட்டில் ஸ்டாலின் திடீரென்று மனு தாக்கல் செய்துள்ளதை, ஒரு பின்னடைவாகக் கருதுகிறார்கள்.

இது நாள் வரை பேசாமல் இருந்தவர் திடீரென்று அப்பீலுக்குப் போயிருப்பது குறித்து பலவித பேச்சுக்கள். மேயர் தேர்தல் வந்தால் அந்தப் பொறுப்புக்கு தி.மு.க. சார்பாகப் போட்டியிடுபவர், கட்சி அடிப்படையில் ஸ்டாலினுக்கு அடுத்த படியாகக் கருதப்படுவார் என்பதால், அப்படியொரு நபரை அடையாளம் காட்ட தி.மு.க. இப்போது தயாராக இல்லை. மேலும் தேர்தல் நடந்து சகல அதிகாரங்களையும் கையாண்டு, அ.தி.மு.க. வெற்றி பெறும் பட்சத்தில், கடைசிக் கோட்டையான சென்னையும் கைநழுவிப் போய்விட்டால், கட்சிக்குப் பெரிய பாதிப்பு விளையும்.




• மைத்ரேயன்

அ.தி.மு.க.வில் மைத்ரேயன் வழக்கு பற்றி சலிப்புடன் சொல்கிறார்கள். 'ஸ்டாலின் தேர்ந்

தெடுக்கப்பட்டது செல்லாது' என்று வழக்குப் போட்டு வெற்றி பெற்ற ஸ்ரீதர்குமார் என்பவருக்கு எழுதிய கடிதத்தில், மாநில தேர்தல் கமிஷன், "பாலகங்காவை மேயராக அறிவிக்க சட்டத்தில் இடம் கிடையாது" என்று சொல்லி விட்டது. இது தெரியாமல் மைத்ரேயன் வழக்குப் போட்டிருக்கிறார் என்று நம்மிடம் சொன்னார் ஒரு அ.தி.மு.க. வழக்கறிஞர் "சென்னை நகர மேயர் தேர்தல் 1919ம் வருடம், சென்னை நகர முனிசிபல் சட்டம் மற்றும் அதன் கீழுள்ள விதிகளின்படி நடத்தப்படுகிறது. இதன்படி, மேயர் இறந்து போனால்தான் ஆறு மாதத்திற்குள் தேர்தல் நடத்த வேண்டும். இப்போது உண்டாகி இருக்கும் காலி இடம் இயற்கையான காரணங்களால் உண்டானது அல்ல. உயர்நீதி மன்றத் தீர்ப்புகளால் உண்டானது. எனவே 'ஆறு மாதம்' என்பது இதில் பொருந்தாது. 1919ம் ஆண்டு சட்டத்தில் ஆறு மாதத்துக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று சொல்லப்படவில்லை. அரசியல் சட்டப்படி கூட, கவுன்ஸில் கலைக்கப்பட்டால்தான் ஆறு மாதத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும். எனவே, அதே சட்டத்தின்படி (38ம் பிரிவு) மீதியுள்ள காலத்தை, துணை மேயர் கொண்டு நடத்தி விடலாம்" என்று சொல்கிறார் ஒரு அ.தி.மு.க. கவுன்சிலர்.

மற்றொரு யுக்தியாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதற்குப் பதிலாக, கவுன்சிலர்கள் மூலம் மேயரை தேர்ந்தெடுக்கும் வகையில், சட்டத்திருத்தம் கொண்டு வர இருக்கிறார்களாம். வட மாநிலங்களில் இந்த முறை இருக்கிறதாம்.

- கௌசி



"சப்பாத்தி பண்ணுற குழவி உடைஞ்சு போச்சு, ஆபீஸ் விருந்து வரும்போது மறக்காம வேற வாங்கிட்டு வாங்க..."

"நேத்து நாம சண்டை போடலையே, எப்படி உடைஞ்சது?"

"நம்ம போடலைன்னா என்ன, பக்கத்து வீட்டுக்காரம்மா இரவல் வாங்கிட்டுப் போயிருந்தாங்களே!"

- எம். சங்கர்

"அந்த தியேட்டர் கடையில் எக்கச்சக்கமா ஜின்ஜர் சோடா வியாபாரமாகுது..."

"அதெப்படி?"

"படத்தின் முடிவை யாராலும் ஜீரணிக்க முடியலையாம்!"

— எஸ். மோகன்



சிறப்பு தள்ளுபடி 10%

பிரம்மாண்டமான

BAPASI

26-வது சென்னை

புத்தகக் கண்காட்சி

ஜனவரி –9– ஆம் தேதி முதல் 19 வரை

இடம் : காயிதே மில்லத் அரசினர் பெண்கள் கல்லூரி, சென்னை-2

நேரம் :

வேலை நாட்களில் – மாலை 2.30 முதல் இரவு 9.00 வரை
10-1-2003, 13-1-2003 தேதிகளில்

விடுமுறை நாட்களில் – காலை 11.00 மணி முதல் இரவு 9.00 வரை
11,12,14,15,16,17,18,19 தேதிகளில்

நுழைவுக் கட்டணம் ரூ.2.00 மட்டும்

தினமும் மாலை 6.30 முதல் 8.00 வரை – சிறப்புப் பேச்சாளர்கள்

தேதி	தலைப்பு	பேச்சாளர்
10.1.2003	தமிழ்க்காவல்	A.I. இரவி ஆறுமுகம் IPS
11.1.2003	'நிதி' மிகுந்தவர் தமிழைத் தாரீர்	ப. சிதம்பரம் (முன்னாள் மத்திய அமைச்சர்)
12.1.2003	மெல்லத் தமிழ் இனி!	சாலமன் பாப்பையா
13.1.2003	உளி பெற்ற வலியில் சிற்பங்கள்	கணபதி ஸ்தபதி
14.1.2003	தூரிகையும் தமிழ்க் காரிகையும்	மதன்
15.1.2003	அன்னைத் தமிழின் ஆயுள் பாவம்	Dr. K.N. சரஸ்வதி
16.1.2003	தமிழ் எனும் தளராத நம்பிக்கை	Dr. M.S. உதயமூர்த்தி
17.1.2003	சிரிக்காமலும் சிந்திக்கலாம்	S.Ve. சேகர்
18.1.2003	கலைத் தமிழ் – கலையாத தமிழ்	நடிகர் கமல்ஹாசன்
19.1.2003	புதிதாய்ப் பூக்கும் தமிழ்ப் பூக்கள்	மு. மேத்தா

Programmes Sponsored by - Oxford University Press

அறுசுவை அரசின் சிற்றுண்டி உண்டு

THE BOOK SELLERS' AND PUBLISHERS' ASSOCIATION OF SOUTH INDIA,

5 மணி 5 நிமிஷம்

"மோக முள்ளுக்குப் பக்கத்தில் சிட்னி ஷெல்டன் எப்படி வந்தார்? இப்படி எல்லாப் புத்தகமும் ஒண்ணடி மண்ணடியாக் கிடக்கிறதுக்குத்தானா ஒண்ணாந் தேதியானா உனக்கு மொய் வைக்கிறேன்? எல்லாத்தையும் சரியாப் பிரிச்சு ஒழுங்கா அடுக்கி வை."

முத்தையாவுக்கு அவரது நூலகத்தில் அனைத்தும் நேர்த்தியாக இருக்க வேண்டும். அதைவிட முக்கியம் அவர் வேலைக்கு வைத்திருக்கும் பெண் கொஞ்சமும் ஒய்வாக இருந்துவிடக் கூடாது.

"லைப்ரரின்னு பேருதான். இருக்கிறதென்னமோ நாலே ஷெல்ஃபு. இதை ஒரு நாளைக்கு நாப்பது தடவை அடுக்கணும்... ச்சே..."

நூலகப் பெண்ணிடம் ஒலி குறைந்த எரிச்சல் முணுமுணுப்பு.

கேட்டுக் கொண்டிருந்த ஹரிணியின் பிரகாச முகத்தில் மேலும் ஒரு பனிச் மென்னகை.

அந்த மென்னகையுடனே, அந்த சின்னஞ்சிறு நூலகத்தின் நாலு ஷெல்ஃபுகளில் ஒன்றிலிருந்து, பொன்னியின் செல்வனை உருவினாள் ஹரிணி. சட்டென்று வர மறுத்தது புத்தகம். ஷெல்ஃப்பைப் பிரிய மாட்டேன் என்று சத்தியாக்கிரகம் செய்தது. அழுத்தமாக இழுத்தாள். அசைந்து கொடுக்கவில்லை புத்தகம். பலத்தை அதிகரித்துக் கொண்டு வேகமாகப் பிடித்து இழுத்தாள். அதை விட வலுவாகப் புத்தகம் இவள் கையிலிருந்து உருவப்பட்டது, எதிர்ப் பக்கமிருந்து!

விதிர் விதிர்த்துப் போனாள் ஹரிணி.

இவளை மாதிரியே திகைத்துப் போயிருந்தான், கையில் பொன்னியின் செல்வனோடு ஷெல்ஃபுக்கு எதிர்ப்பக்கம் தெரிந்த அந்த இளைஞன். வந்தியத்தேவனுக்கு தம்பி மாதிரி வசீகரமாக இருந்தான்.

"ஸா...ஸாரி... நீங்க எடுத்துக்கிட்டிருந்ததை நான் கவனிக்கலை" அவன் பார்வை பொன்னியின் செல்வன் மீதும், ஹரிணியின் மீதும் மாறி மாறிப் பாய்ந்தது. குரலில் மன்னிப்புக் கேட்கிற தொனி.



ஹரிணிக்கு அவன் சங்கடம் புரிந்தது. மிருதுவாகப் புன்னகைத்தான். "பரவாயில்லை" மென்மையாகச் சொன்னான். சொன்ன



பொழுதில் கோயில் மணியும், குயிலின் இசையும் கலந்து ஒலித்தது அந்த நூலகத்துள். ஹரிணியின் குரல் அப்படி.

அந்த இளைஞனைக் கடந்து, நகர்ந்து போனாள் ஹரிணி. சந்தனத் தென்றல் தாலாட்டியது அவனை.

மூக்குக் கண்ணாடியை சரி செய்து கொண்டார் முத்தையா.

"இந்த ரெண்டு புக்ஸை எடுத்துக்கிறேன் சார்..."

"ஹரிணி, ஒண்ணு தெரியுமா உனக்கு? உன்னைப் பார்த்துத்தான் நான் காலண்டரையும் வாட்சையும் சரி பண்ணிக்கிறேன்..."

"என்னைப் பாத்தா? புரியலையே..." விழிகளில் அழகான குழப்பத்தைத் தேக்கியபடி மூக்குக் கண்ணாடிக்காரரை ஏறிட்டாள் ஹரிணி.

"நீ லைப்ரரிக்கு வந்தா, அன்னைக்கு வெள்ளிக்கிழமை. உள்ளே நுழைஞ்சா சரியா மணி அஞ்சு. அஞ்சு நிமிஷம்தான் லைப்ரரியில் இருப்பே. அஞ்சு அஞ்சுக்குப் புறப்பட்டுடுவே. இந்த டைம் டேபிள் என்னைக்காவது மாறியிருக்கா சொல்லு..."

சன்னமான சிரிப்பை முத்தையாவுக்கு பதிலாக்கிவிட்டுப் புத்தகங்களோடு படியிறங்கினாள் ஹரிணி. நாலு எட்டு வைப்பதற்குள், சர்ரக்கென அவளருகே க்ரீச்சிட்டு நின்றது அந்த பைக். பொன்னியின் செல்வனை அவளிடமிருந்து பறிமுதல் செய்த இளைஞன்.

"இந்தாங்க ஹரிணி..." பொன்னியின் செல்வன் அவள் முன் நீண்டது. "நீங்க எடுத்துட்டுப் போங்க. நான் அடுத்த வெள்ளிக்கிழமை அஞ்சு மணிக்கு உங்ககிட்ட வாங்கிக்கிறேன்..." வார்த்தைகள் கருகருவென்று மத்தாப்பின் அவசரத்தோடு படபடவென்று தெறித்தன. "அப்புறம் ஹரிணி, நான் உங்க தெருவில்தான் இருக்கேன்..." விறுவிறுவென்று பேசிவிட்டு, அவளின் பதிலைக்கூட எதிர்பார்க்கவில்லை அவன். புத்தகம் ஹரிணியின்

கைகளில் திணிக்கப்பட்டது. விசுக்கெனக் கிளம்பி சீறிப் பறந்தது பைக்.

பிரமை பிடித்தவள் மாதிரி நின்று கொண்டிருந்த ஹரிணி, மெல்லத் தன் இயல்புக்கு மீண்டாள்.

யாரிவன்? என்ன ஒரு வேகம்? மின்னலுக்குப் பிறந்தவன் மாதிரி...

ச்சட்... என் பெயர் அவனுக்குத் தெரிந்திருக்கிறது. அவன் பெயர் எனக்குத் தெரியவில்லையே?

மனசுக்குள் குறுகுறுத்தது.

எட்டு... ஒன்பது... பத்து... மூளை புள்ளிகளைக் கணக்கிட்டது.

'உங்க தெருவில்தான் இருக்கேன்'.

எந்த வீடாக இருக்கும்?

கோலம் போட்டுக் கொண்டிருந்த ஹரிணியின் கண்கள் அனிச்சையாகத் தெருவை ஆராய்ந்தன. எதிர்ச் சாரியில் கடைசி வீட்டின் வாசலில் கையில் செய்தித் தாளோடு அவன் தென்பட்டான். பார்த்ததும் புன்னகைத்தான்.

கோலத்தின் இழைகள் பின்னிப் பிணைந்தன. ஹரிணியும் பதிலுக்குப் புன்னகைக்கும் முன்..."ஹரிணி..." அவளை உள்ளே இழுத்தது அம்மாவின் குரல்.

"வந்துட்டேன்மா..."

அடுத்த வெள்ளிக்கிழமை வரை தாங்காது. அவன் பேர் என்ன? என்ன செய்கிறான்? அவனைப் பற்றித் தெரிய வேண்டும். ஹரிணியின் மனசு பரபரத்தது. ஆர்வம் குறுகுறு என்றது.

பச்சை மிளகாயை மிக்ஸியில் போட்டபடி அம்மாவின் வாயைக் கிளறினாள் ஹரிணி.

"அம்மா, நம்ம தெருக் கோடியில் இருக்காரே சாம்பசிவம்... அவருக்கு உடம்பு சரியில்லேன்னு சொல்லிகிட்டு இருந்தியே... இப்ப எப்படி இருக்காராம்...?"

"அவரா? நல்லாயிருக்கார். சொந்தக்காரப் பையன் ஒருத்தன் இப்ப அவர்கூட இருக்கான் போல. ஒண்டிக்கட்டை. வயசான காலம், யாராச்சும் துணையிருந்தா நல்லது தானே...!"

"சொந்தம் எல்லாம் எத்தனை நாளைக்கு?" மேலும் விவரங்கள் தேவையாய் இருக்க, பொத்தாம் பொதுவில் ஒரு தத்துவம் சொல்லிப் பேச்சை வளர்த்தினாள் ஹரிணி. வளர்ந்தது.

"நீ சொல்றதும் சரிதான். அந்தப் பையன் காலையில போனா சாயங்காலம் வர்றான். சாம்பசிவம் சார் தனியாத்தானே நாள் பூரா அல்லாடுறார்?"

"ஏன்? அந்தப் பையன் வேலை பாக்கிறானாமா?" இயல்பாகக் கேட்பது மாதிரித் தனக்குத் தேவையான கேள்வியைப் பேச்சின் இடையே நுழைத்தது ஹரிணியின் சாமர்த்தியம்.

"பக்கத்து ஊரில் ஏதோ ஃபேக்டரி கட்டறாங்களாமே? அவனுக்கு அங்கதான் வேலை. இன்ஜினியராம்... சட்னி அரைச்சிட்டியா ஹரிணி?"

"ம்...இதோ..."

"எல்லாம் சொல்கிறாயே அம்மா. அந்தப் பையனின் பேரைச் சொல்லேன்..." மனசு கேட்டதை வார்த்தைகளாக்க முடியாமல் போனதில் மௌனமானாள் ஹரிணி.

மிக்ஸி சுழன்றது.

ஹரிணி, வரப் போகிற வெள்ளிக்கிழமைக்காகக் காத்திருக்க ஆரம்பித்தாள்.

ஹரிணியின் ஆவல் விழிகளுக்குத் தேடுகிற சிரமத்தையே தரவில்லை அவன். நூலகத்து வாசலை ஹரிணி மிதித்த மறுவிநாடி அவன் முன் பிரசன்னமானான். இவளைப் பார்த்ததும் மலர்ந்தான். மலர்ச்சி அதீதமாகத் தெரிந்தது.வெகு நேரமாகக் காத்துக் கொண்டிருந்திருப்பான் போல..."

நெருங்கினான் ஹரிணி.

"ஃபேக்டரி வேலையெல்லாம் எப்படி இருக்கு?"

ஹரிணியின் கேள்விக்கு, 'அதுக்குள்ளே விசாரிச்சாச்சா...?' புரிதலோடு புன்னகைத்தான்.

"விசாரிச்சதில் ஃபேக்டரிதான் சிக்குச்சு.

நாய்க்கு கண்ணாடி!

பாரீஸ் நகரில் புகழ் பெற்ற மூக்குக் கண்ணாடி நிறுவனங்களில் ஒன்று மேர்லினமர். இங்கு தயாராகும் மூக்குக் கண்ணாடிகளெல்லாம் மனிதர்களுக்கு அல்ல. நாய்களுக்கும், பூனைகளுக்கும் தான்!



- நெ. இராமன்

பேர் சிக்கலை. உங்க பேர் என்ன?"

"விசு... விஸ்வநாதன்..."

"ஃபேக்டரிக்குத் தினமும் போயிட்டுப் போயிட்டு வர்றீங்களா? சிரமமாயில்லை?"

"பைக் இருக்கிறதால் பிரச்னையில்லை."

"பேசாம அந்த ஊரிலேயே தங்கிடலாமே நீங்க?"

"போன வாரம் வரை நானும் அந்த ஊரிலேயே தங்கிடறதைப் பத்தி யோசிச் சேன்தான். ஆனா இனிமே அதைப்பத்தி யோசிக்கிறதாயில்லை..."

விசுவின் பார்வை வெளிப்படை நேசத் தோடு ஹரிணியின் மேல் ஆழமாகப் பதித் தது. மலர் மலர்கிறபோது, முன் அறிவிப் புகள் செய்வதில்லை. ஹரிணிக்குள் பரவசம். உணர்ச்சிவசப்பட்டு தத்தளித்தாள்.

"இ... இந்தாங்க உங்க பொன்னியின் செல்வன்... அஞ்சு மணி அஞ்சு நிமிஷ மாயிடுச்சு. நா... நான் போகணும்..."

அன்றைக்கு அவசரமாக நகர்ந்து போனாள் ஹரிணி. ஆனால் தொடர்ந்து வந்த தினங்களில், முத்தையாவுக்கு காலண் டர் மற்றும் கைக்கடிகாரம் சரி செய்து கொள்ள ஹரிணியும், விசுவும் சேர்ந்தாற் போல் உதவி செய்வதுதான் நிகழ்ந்தது.

"போன வாரம் ஏன் வரலை விசு?"

"நான் வந்தேன் ஹரிணி. நீதான் சீக்கிரமாப் போயிட்டே..."

"இல்லியே... நான் எப்பவும் போல அஞ்சு மணி அஞ்சு நிமிஷத்துக்குத்தான் புறப்பட் டேன்."

சட்டென்று ஒரு எரிச்சல் விசுவுக்குள். குரல் எகிறியது.

"அதென்ன அஞ்சு நிமிஷக் கணக்கு? நான் வருவேன்னு தெரியுமில்ல? கொஞ்சம் வெயிட் பண்ணினா என்ன?"

"அவ்வளவு அக்கறை இருக்கிற நீ சீக்கிரமா வர வேண்டியதுதானே?"

"ஏன் பேச மாட்டே? நாய் மாதிரி உன்னையே சுத்திச் சுத்தி வர்றேன்ல. அந்த திமிரு. எனக்காக வெயிட் பண்ணணும்னு மஹாராணி அம்மாவுக்குத் தலை எழுத்தா என்ன?"

ஊசியாகத் தைத்தன, விசுவின் வார்த் தைகள். ஹரிணியின் விழிகள் ஒரு உடனடி அழுகைக்குத் தயாராகின. நீர் கோத்துக் கொண்டது.

"நீ ஆம்பளை. கேக்கிறதுக்கு ஆள் கிடை யாது. ஆனா நான் வீட்டிலிருக்கிறவங்



"'வாய் விட்டு அழுதா நோய் விட்டுப் போகும்' என்று புதுசா பழமொழி சொல்லு கிறாரே. யார் இவர்?"

"டி.வி. மெகா சீரியல் தயாரிப் பாளர்தான்"

- லலிதா செல்லப்பா

களுக்குப் பதில் சொல்லியாகணும். வழக்கத்தை விட நான் லேட்டாப் போனா சந்தேகம் வரும். பிரச்னையாயிடும். புரிஞ் சுக்கடா..." குரல் கரகரத்துக் கெஞ்சியது.

"அழுது அழுதே ஆளைக் கொன்னுடுங்க. உங்கிட்டப் பேசலைன்னா எனக்கும் வாரம் பூரா வேலையே ஓட மாட்டேங்குது. அடுத்த வாரம் உனக்கு முன்னால நான் லைப்ரரியில் இருப்பேன். போதுமா? அழுதது போதும். சிரியேன்..."

நூலகம் அமைதியாக இருந்தது. ஹரிணி அமைதியாக இல்லை. விசு வரவில்லை.

வைத்த புத்தகத்தை மறுபடி எடுத்து மறுபடி வைத்தாள்.

நிமிஷங்கள் நகர்ந்தன.

எடுத்த புத்தகத்தை மறுபடி வைத்து மறுபடி எடுத்தாள்.

ஹரிணியின் தவிப்பு கூடிக் கொண்டே போயிற்று.

படிக்காமல் பக்கங்களைத் திருப்பி...

படித்துவிட்டும் பக்கங்களைத் திருப்பா மல்...

ஹரிணியின் பரிதவிப்பு அவள் செயல் களில் பிரதிபலித்தது.

'உனக்கு முன்னால நான் லைப்ரரியில் இருப்பேன்...' உறுதி தெறிக்கச் சொன்னவன் ஏன் வரவில்லை?

அன்றைக்கு அரை மணி நேரத்துக்கும் மேல், நூலகத்தில் இருந்த ஹரிணியை அதிசயமாகப் பார்த்தார் முத்தையா.

மனசே இன்றி நூலகத்தை விட்டுப் படியிறங்கினாள் ஹரிணி.


பாடம்

மம்மி என்கிறது
வரலாறு,
பாடம்
பண்ணிய
உடலை.

மம்மி என்கிறது
கான்வென்ட்
குழந்தை,
தாயை

பாடம்
பண்ணிக்
கொண்
டிருக்கிறோமோ
உயிருடன் தாயை?

- தெ. வெற்றிச்செல்வன்



[illegible] சொல்வது போல், "ம்... பேசிப் பேசியே பொண்ணுங்களைக் கவுத்துடுறானுங்க இந்தக் காலத்துப் பசங்க. எல்லாம் நம்ப வச்சுக் கழுத்தறுக்கிற ஏமாத்துக்காரனுங்களாதான் இருக்கானுவோ..." முத்தையா பேசிய வார்த்தைகள் ஹரிணியின் முதுகில் மோதின.

மனசு பாரமாக கனத்தது.

அன்றைய இரவின் ஒவ்வொரு மணித்துளியும் உறக்கமற்ற வலிப் பிரக்ஞையோடு கழிந்தது ஹரிணிக்கு.

விசு ஏன் வரவில்லை? உண்மையான காரணம் ஏதேனும் இருந்திருக்குமா? இல்லை தன்னை ஏமாற்றுவதுதான் உண்மையிலேயே காரணமாக இருந்திருக்குமா?

கேள்வி முடிச்சுகள். ஹரிணியின் இதயம் முழுக்க சிக்கல்கள். திணறித் தவித்தது அது.

"ஹரிணி, நாழியாச்சு பார். வாசல் தெளிச்சுக் கோலம் போடு..."

"இன்னைக்கு நீயே போட்டுடும்மா..."

காயம்பட்ட ஹரிணியின் உள்ளம் எந்தக் காரியத்திலும் செல்ல மறுத்தது. ரணப்பட்ட மனத்தின் வலி, வேதனைகளை முகத்தில் வெளிப்படுத்திவிடாமலிருக்க அவள் மிகவும் சிரமப்பட்டாள்.

சோர்ந்து கிடந்த ஹரிணியைப் பார்த்துக் கலவரமானாள் அவள் அம்மா.

"என்னடி நீ. இன்னைக்குன்னு பாத்து இப்படி டல்லா இருக்கே? ஜுரமா?"

"ப்ச்ச்... இல்லேம்மா. அது சரி இன்னைக்கு என்ன விசேஷம்?"

"நல்லாக் கேட்டே போ. இன்னைக்கு உன்னைப் பொண்ணு பாக்க வர்றாங்க."

உணர்வுகள் உடைந்து நொறுங்கி உருத் தெரியாமல் சிதறின. உள்ளே ஒரு பூகம்பம் வெடித்துப் பிளந்து இதயத்தை விழுங்கியது.

"எ... என்னம்மா... திடீர்னு?"

"நல்ல காரியமெல்லாம் திடீர் திடீர்னுதான் நடக்கும். போ. போய்க் குளிச்சிட்டு... பச்சைக் கலர் மைசூர் சில்க் எடுத்து வச்சிருக்கேன் பார். அதைக் கட்டிக்கோ."

உடலின் அழுக்குகளைப் போல், உள்ளத் தின் துயரங்களும், குழப்பக் கேள்விகளும், ஏமாற்றங்களின் வலிகளும்கூட, இந்தக் குளிர்ந்த நீரோடு அடித்துச் சென்றுவிடக் கூடாதா?

"ஏய் ஹரிணி. என்ன இங்க மூலையில உக்காந்துகிட்டு மோட்டு வளையை வெறிச்சிக்கிட்டு இருக்கே. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்தாச்சு. சட்டுனு வா..."

அம்மாவின் ஆணைக் குரலைத் தொடர்ந்து, ஹரிணியின் முன்பாக நீட்டப் பட்டது காப்பி தம்ளர்கள் அடங்கிய டிரே.

"முகத்தை உம்முன்னு வச்சுக்காதே. கொஞ்சம் சிரிச்சாப்பல வா..."

இனம் தெரியாத குழப்பங்கள். ஏமாற்றம் தந்த வலி... வேதனை... அனைத்தையும் ஒரு வலுக்கட்டாயப் புன்னகைக்குக் கீழே போட்டுப் புதைத்தாள் ஹரிணி.

அந்த இதழ் வலிக்கிற புன்னகையுடனே வந்திருந்தவர்களை நோக்கி ஹரிணி காப்பியுடன் நகர்ந்த அதே நேரம்... தெருவைக் கடந்தது அந்தச் சத்தம். தாரை, தப்பட்டைகளின் சாவு மேளம், அழுகை, கூச்சல், மரண வாசனை.

"ஆக்ஸிடண்ட் கேஸ். ஸ்பாட்லயே அவுட்டாம். பையன் சின்ன வயசு. நம்ம தெருதான். பக்கத்து ஊர் ஃபேக்டரிலேருந்து பைக்கில் வந்துருக்கான். லாரிக்காரன் அடிச்சிட்டு..."

வார்த்தைகள் ஹரிணியின் உயிரைப் பிடுங்கின. ○

ஸ்ரீ டிராவல்ஸ்

194 - a. முதல் மாடி, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை - 6.
போன்: 5870482, 28516799, 28513109, 28513122 பேக்ஸ் : 28513109
இ-மெயில்: sritrave@satyam.net.in இணையம்: www.sreetravels.com

ஸ்ரீ டிராவல்ஸ் அளித்திடும் அருமையான சுற்றுலாக்கள்

சென்னை - அந்தமான் - சென்னை

பயணத்தொகை: ரூ. 8,000/- இருவழி கப்பல் பயணம்
ரூ. 13,000/- ஒருவழி கப்பல் மற்றும் விமானப்பயணம்
புறப்படும் தேதிகள்: 03.02.03 பயண நாட்கள்: 8

சென்னை - கொழும்பு - கண்டி - நுவரெலியா - பொல்லனருவா - கதிர்காமம் - திரிகோணமலை - சென்னை

புறப்படும் தேதிகள்: 03.02.03, நாட்கள்: 8 தொகை: 14,900/-

மேற்கண்ட அனைத்து சுற்றுலாக்களுக்கும் அருமையான தங்கும் அறைகள், தென்னிந்திய சைவ உணவு, ரயில், கப்பல் மற்றும் விமானக் கட்டணம், இடங்களைச் சுற்றிப் பார்க்க சொகுசு பேருந்து வசதி அனைத்தும் பயணக்கட்டணத்துக்குட்பட்டவை.

LTC வசதி உண்டு

(எமது கோடைகால சுற்றுலா பற்றிய விபரங்களுக்கு ரூ. 4/- கொண்ட தபால் தலையுடன், உங்கள் முகவரியையும் அனுப்பவும்)



S.V.முதியோர் இல்லம்



Charitable Trust (Reg)

இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் டாக்டர்களும், நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எல்லா எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED

Charitable Trust (Reg)

50 / 88, Panchali Amman Kovil Street, (Near Arumbakkam Post Office)
Arumbakkam, Chennai - 600 106 Tel. Off: 475 5700, 475 1356.

சிவகாமியின் சபதம்



முப்பத்து மூன்றாம் அத்தியாயம்

இருள் சூழ்ந்தது

மாமல்லர் அன்று ஆயனரின் அரண்ய வீட்டிலிருந்து புறப்பட்டுக் காஞ்சி நகரை நோக்கிச் சென்றபோது உச்சி நேரம். நிர்மலமான நீல ஆகாயத்தில் புரட்டாசி மாதத்துச் சூரியன் தலைக்கு மேலே தகதகவென்று பிரகாசித்துக் கொண்டிருந்தான். ஆயினும் மாமல்ல நரசிம்மருக்கு அப்போது வானமும் பூமியும் இருள் சூழ்ந்திருந்ததாகத் தோன்றியது. அமாவாசை நள்ளிரவில் நாலாபுறமும் வானத்தில் கன்னங்கரிய மேகங்கள் திரண்டிருந்தாற் போன்ற அந்தகாரம் அவர் உள்ளத்தைக் கவிந்து கொண்டிருந்தது. ஒரு சின்னஞ்சிறு நட்சத்திரத்தின் மினுக் மினுக் என்னும் ஒளிக் கிரணத்தைக்கூட அந்தக் காரிருளில் அவர் காணவில்லை.

ஆனால், திடீர் திடீர் என்று சில சமயம் பேரிடி முழக்கத்துடன் கூடிய மின்னல்கள் - கீழ்வான முகட்டிலிருந்து மேல்வான முகடு வரையில் அந்தகாரத்தைக் கிழித்துக் கொண்டு பாய்ந்த மின்னல்கள் - கண்ணைப் பறித்து மண்டையைப் பிளக்கும் பயங்கரத் தீட்சண்ய ஒளி மின்னல்கள் - மாமல்லருடைய உள்ளமாகிற வானத்தில் தோன்றத்தான் செய்தன. அந்த மின்னல் ஒளியெல்லாம், ஆயிரமாயிரம் கூரிய வாள்களும் வேல்களும் போர்க்களத்தில் ஒன்றோடொன்று உராயும் போது சுடர்விட்டு ஒளிர்ந்து மறையும் மின்னல்களாகவே அவருடைய அகக்காட்சியில் தோற்றமளித்தன.

சிவகாமி அடியோடு நஷ்டமாகிவிட்டதாகவே மாமல்லர் எண்ணினார். சளுக்கரால் சிறைப்பட்டுச் சிவகாமி

அமரர் கல்கி

உயிர் வாழ்ந்திருப்பாள் என்று அவரால் கற்பனை செய்யவே முடியவில்லை.

சிறைப்பட்டுச் சிறிது நேரத்துக்கெல்லாம் அவள் பிராணனை விட்டுத்தான் இருக்க வேண்டும். கேவலம் மற்றச் சாமான்யப் பெண்களைப் போல் அவள் சத்ருக்கள் வசம் சிக்கிக் கொண்ட பிறகு உயிரை வைத்துக் கொண்டிருப்பாளா? மானத்தைக் காட்டிலும் பிராணனே பெரிது என்று எண்ணும் ஈனத்தனம் சிவகாமியிடம் இருக்க முடியுமா?

தன்னுடைய வாழ்க்கையிலிருந்தும் இந்தப் பூலோகத்திலிருந்தும் அந்தத் தெய்வீக ஒளிச்சுடர் முடிவாக மறைந்தே போய்விட்டது. அத்தகைய தெய்வீக சௌந்தர்யத்துக்கும் கலைத் திறனுக்கும் மேன்மைக் குணத்துக்கும் இந்த உலகம் தகுதியற்றது; தானும் தகுதியற்றவன்!

இரண்டு தந்தைகளுமாய்ச் சேர்ந்து சிவகாமியின் உயிருக்கு இறுதி தேடி விட்டார்கள். தன்னுடைய வாழ்வுக்கும் உலை வைத்து விட்டார்கள். ஆன போதிலும், அவர்கள் மீது மாமல்லர் அதிகமாகக் கோபங் கொள்ள முடியவில்லை.

மகளைப் பிரிந்த துயரத்தினால் ஆயனர் ஏறக்குறையச் சித்தப் பிரமை கொண்ட நிலையில் இருக்கிறார். கால் முறிந்து எழுந்து நிற்கவும் முடியாமல் கிடந்த இடத்திலேயே கிடக்கிறார். அவர் மேல் எப்படிக் கோபம் கொள்வது? அல்லது போர்க்களத்திலே படுகாயம் அடைந்து யமனுடன் போராடிக் கொண்டிருக்கும் மகேந்திர பல்லவரிடந்தான் எவ்விதம் கோபம் கொள்ள முடியும்?

சிவகாமி இல்லாத உலகத்திலே நாம் உயிர் வாழ்வது என்னும் எண்ணத்தை மாமல்லரால் சகிக்கவே முடியவில்லை. எனினும், சில காலம் எப்படியும் பல்லைக் கடித்துக் கொண்டு ஜீவித்திருக்கத்தான் வேண்டும்; நாரதமார்களும், நம்பிக்கைத் துரோகிகளும், மனித உருக் கொண்ட ராட்சதர்களுமான வாதாபி சளுக்கர்களைப் பழி வாங்குவதற்காகத்தான்!

இதுவரையில் இந்த உலகமானது கண்டும் கேட்டுமிராத முறையிலே பழி வாங்க வேண்டும்! சளுக்கர் தொண்டை நாட்டில் செய்திருக்கும் அக்கிரமங்களுக்கு ஒன்றுக்குப் பத்து மடங்காக அவர்களுக்குச் செய்ய வேண்டும். சளுக்க நாட்டில் இரத்த ஆறுகள் ஓட வேண்டும். அப்படிப் பெருகி ஓடும் செங்குருதி நதிகளில், பற்றி எரியும் பட்டணங்களின் மீது கிளம்பும் அக்கினி ஜுவாலைகள் பிரதிபலிக்க வேண்டும்! அந்த அரக்கர்களின் நாட்டிலே அப்போது எழும் புலம்பல் ஒலியானது தலைமுறை தலைமுறையாகக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்!

இவ்விதம் பழி வாங்குவதைப் பற்றி எண்ணிய போதெல்லாம் மாமல்லருக்குச் சிறிது உற்சாகம் உண்டாயிற்று. அடுத்த கணத்தில், "சிவகாமி இவ்வுலகில் இப்போதில்லை; அவளை இனிமேல் பார்க்கவே முடியாது" என்ற எண்ணம் தோன்றியது. உற்சாகம் பறந்து போய்ச் சோர்வு குடிகொண்டது. உடம்பின் நரம்புகள் தளர்ந்து சகல நாடிகளும் ஒடுங்கிக் குதிரையின் கடிவாளங்கள் கையிலிருந்து நழுவும்படியான நிலைமையை அடைந்தார்.

அந்த மனச் சோர்வைப் போக்கிக் கொள்வதற்காக மாமல்லர் பழைய ஞாபகங்களில் தம்முடைய மனத்தைச் செலுத்த முயன்றார்.

சென்ற மூன்று நாலு வருஷங்களில் சிவகாமிக்கும் தமக்கும் ஏற்பட்டிருந்த தொடர்பை நினைத்தபோது மாமல்லரின் இருதய அடிவாரத்திலிருந்து



பந்து போன்ற ஒரு பொருள் கிளம்பி மேலே சென்று தொண்டையை அடைத்துக் கொண்டது போலிருந்தது. கண்களின் வழியாகக் கண்ணீர் வருவதற்குரிய மார்க்கங்களையும் அது அடைத்துக் கொண்டு திக்குமுக்காடச் செய்தது.

ஆஹா! உலகத்திலே அன்பு என்றும், காதல் என்றும், பிரேமை என்றும் சொல்கிறார்களே! சிவகாமிக்கும் தமக்கும் ஏற்பட்டிருந்த மனத் தொடர்பைக் குறிப்பிடுவதற்கு இவையெல்லாம் எவ்வளவு தகுதியற்ற வார்த்தைகள்?

தளபதி பரஞ்சோதியும் அந்தத் திருவெண்காட்டு மங்கையும் கொண்டுள்ள தொடர்பைக்கூட அன்பு, காதல், பிரேமை என்றுதான் உலகம் சொல்கிறது. ஆனால் பரஞ்சோதியின் அனுபவத்துக்கும் தம்முடைய அனுபவத்துக்கும் எத்தனை வித்தியாசம்?

பரஞ்சோதி சேர்ந்தாற்போல் பல தினங்கள் உமையாளைப் பற்றி நினைப்பது கூட இல்லை என்பதை மாமல்லர் அறிந்திருந்தார். ஆனால் அவருடைய உள்ளத்திலேயிருந்து ஒரு கணநேரமாவது சிவகாமி அப்பாற்பட்டதுண்டா? கேணியில் உள்ள தண்ணீரை இறைத்து விட்டால், அடியில் உள்ள நீர் ஊற்றிலிருந்து குபுகுபுவென்று தண்ணீர், மேலே வருமல்லவா? அதே மாதிரியாக மாமல்லரின் இருதயமாகிய ஊற்றிலிருந்து சிவகாமியின் உருவம் இடைவிடாமல் மேலே வந்து கொண்டிருந்தது. ஆயிரமாயிரம் சிவகாமிகள் நெஞ்சின் ஆழத்திலிருந்து கிளம்பி மேலே மேலே வந்து மறைந்து போய்க் கொண்டேயிருப்பார்கள்.

முகத்தில் புன்னகை பூத்த சிவகாமி, கலீரென்று சிரிக்கும் சிவகாமி, புருவம் நெரித்த சிவகாமி, சோகம் கொண்ட சிவகாமி, பயத்துடன் வெருண்டு பார்க்கும் சிவகாமி, கண்களைப் பாதி மூடி ஆனந்த பரவசத்திலிருக்கும் சிவகாமி, வம்புச் சண்டைக்கு இழுக்கும் விளையாட்டுக் கோபங் கொண்ட சிவகாமி - இப்படியாக எத்தனை எத்தனையோ சிவகாமிகள் மாமல்லரின் உள்ளத்தில் உதயமாகிக் கொண்டேயிருப்பார்கள்.

தாய் தந்தையரோடு பேசிக் கொண்டிருக்கும்போதும், இராஜரீக விவரங்களை மிக்க கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கும்போதும், புரவியின் மீது அதிவேகமாகப் போய்க் கொண்டிருக்கும் போதும், இராஜ சபையில் வீற்றிருந்து ஆடல் பாடல் விநோதங்களைக் கண்டு கேட்டுக் களித்துக் கொண்டிருக்கும் போதும், போர்க்களத்தில் வாள்களும் வேல்களும் நாலாபுறமும் ஒளி வீசி ஒலி செய்ய, எதிரி சைனியங்களுடன் வீரப்போர் புரிந்து அவர்களை விரட்டியடிக்கும் போதும், எப்படியோ மாமல்லரின் உள்ளத்தில் அடிவாரத்தில் சிவகாமியின் நினைவு மட்டும் இருந்து கொண்டுதானிருக்கும்.

பகல் வேளையில் பல்வேறு காரியங்களில் ஈடுபட்டிருக்கும் சமயங்களிலேதான் இப்படியென்றால், இரவு நேரங்களில் சொல்ல வேண்டியதில்லை. காஞ்சி நகரில் அரண்மனையில் தங்கும் நாட்களில் இரவு போஜனம் முடிந்து தாம் தன்னந்தனியாகப் படுக்கைக்குப் போகும் நேரத்தை எப்போதும் மாமல்லர் ஆவலுடன் எதிர் நோக்குவது வழக்கம். ஏனெனில் சிவகாமியைப் பற்றிய நினைவுகளிலேயே அவருடைய உள்ளத்தைப் பூரணமாக ஈடுபடுத்தலாமல்லவா? கருவண்டையொத்த அவளுடைய கண்களையும், அந்தக் கண்களின் கரு விழிகளைச் சுழற்றி அவள் பொய்க் கோபத்துடன் தன்னைப் பார்க்கும் தோற்றத்தையும் நினைத்துப் போதை கொள்ளலாமல்லவா?

இப்படி நெடுநேரம் சிவகாமியைப் பற்றி எண்ணமிட்டுக் கொண்டிருந்த பிறகு கடைசியில் கண்களை மூடித் தூங்கினால், தூக்கத்திலும் அவளைப் பற்றிய கனவுதான். எத்தனை விதவிதமான கனவுகள்? அந்தக் கனவு

களில் எத்தனை ஆனந்தங்கள்? எத்தனை துக்கங்கள்? எத்தனை அபாயங்கள்? எத்தனை ஏமாற்றங்கள்?

கனவுகளிலே என்னவெல்லாமோ ஆபத்துக்கள் சிவகாமிக்கு ஏற்பட்டதும், அவற்றிலிருந்து அவளைத் தப்புவிக்கத் தாம் முயன்றதும், சில சமயம் அவளைத் தப்புவிப்பதற்கு முன்னாலே கனவு கலைந்து எழுந்து, மீதி இரவெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருந்ததும், மறுநாள் விரைந்து சென்று சிவகாமிக்கு அபாயம் ஒன்றுமில்லை என்று தெரிந்துகொண்டு ஆறுதல் அடைந்ததும், மாமல்லருக்கு இப்போது நினைவுக்கு வந்தன. அந்தப் பயங்கரமான கனவுகள் இப்போது மெய்யாகி விட்டன! உண்மையாகவே ஆபத்து வந்த சமயத்தில் தான் அருகிலிருந்து அவளைக் காப்பாற்ற முடியாமற் போய் விட்டது.

அந்தப் பேதையின் உள்ளத்தில் இப்படி ஒரு பெரிய ஆபத்துத் தனக்கு வரப் போகிறது என்பது எப்படியோ தோன்றியிருக்க வேண்டும். இதன் காரணமாகத்தான் அவள் தன்னிடம் அடிக்கடி "என்னை மறக்க மாட்டீர்கள் அல்லவா?'' என்றும், ''என்னைக் கைவிட மாட்டீர்கள் அல்லவா?'' என்றும் கேட்டுக் கொண்டிருந்தாள். அப்போதெல்லாம், ''இதென்ன அர்த்தமில்லாத கேள்வி?'' என்று மாமல்லர் அலட்சியமாகத் திருப்பிக் கேட்பது வழக்கம். உண்மையில் அது எவ்வளவு அர்த்த புஷ்டியுள்ள கேள்வி!

சிவகாமி! என் கண்ணே! உன்னை மறக்க மாட்டேன்! இந்த ஜன்மத்தில் உன்னை மறக்க மாட்டேன்! எந்த ஜன்மத்திலும் மறக்க மாட்டேன். உன்னை என்னிடமிருந்து பிரித்த பாதகர் மேல் முதலில் பழி வாங்குவேன்! அதற்குப் பிறகு உன்னைத் தேடிக் கொண்டு வருவேன். யமன் உலகத்துக்கு உன்னைத் தொடர்ந்து வந்து தர்ம ராஜாவிடம், ''எங்கே என் சிவகாமி?'' என்று கேட்பேன். சொர்க்க லோகத்திற்குச் சென்று தேவேந்திரனிடம், ''என் சிவகாமி எங்கே? ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை ஆகிய நாலு பேர் உங்கள் உலகில் இருக்கிறார்கள். எனக்கோ சிவகாமி ஒருத்திதான் இருக்கிறாள்! அவளைக் கொடுத்து விடுங்கள்!'' என்று கேட்பேன்.

சிவகாமி! சொர்க்க லோகத்தில் நீ இல்லாவிட்டால் அதோடு உன்னை விட்டு விட மாட்டேன்! பிரம்மலோகம், வைகுண்டம், கைலாசம் ஆகிய உலகங்களில் எங்கே நீ இருந்தாலும் உன்னை என்னிடமிருந்து பிரிக்க முடியாது! வருகிறேன், சிவகாமி வருகிறேன்! கூடிய விரைவில் நீ இருக்குமிடம் வருகிறேன்!

முப்பத்து நான்காம் அத்தியாயம்

இந்தப் பெண் யார்?

காஞ்சிமா நகரம் இதற்கு முன் எந்த நாளிலும் கண்டிராத அமைதியுடன் விளங்கிற்று. பெரிய பயங்கரமான புயல் அடித்து ஓய்ந்த பிறகு ஏற்படும் அமைதியை அது ஒத்திருந்தது. நகரவாசிகளின் மன நிலைமையும் அதற்கேற்றபடிதான் இருந்தது.

வாதாபிப் படைகள் தொண்டை நாட்டில் சொல்லொணாத அட்டூழியங்களைச் செய்துவிட்டுப் பின்வாங்கிச் சென்றது பற்றியும், மணிமங்கலத்திலும் சூரமாரத்திலும் நடந்த போர்களைப் பற்றியும், காஞ்சி நகர் வாசிகளுக்கு அரைகுறையான விவரங்கள் கிடைத்திருந்தன. மகேந்திர பல்லவச் சக்கரவர்த்தி மணிமங்கலம் போர்க்களத்தில் அடைந்த காயங்களினால் யமன் உலகை



எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பதும், அவரைப் பிழைப்பிக்க அரண்மனை வைத்தியர்கள் பிரம்மப் பிரயத்தனம் செய்து கொண்டிருப்பதும் காஞ்சி மக்களுக்குத் தெரிந்திருந்தபடியால், எந்த நிமிஷத்திலும் அவர்கள் "சக்கரவர்த்தி காலமானார்" என்ற துக்கச் செய்தியை' எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மணிமங்கலம் போர்க்களத்திலிருந்து திரும்பி வந்த வீரர் சிலரின் மூலம் ஆயனருடைய கால் முறிந்த செய்தியையும்,



சிவகாமி, சளுக்கர்களால் சிறைப் பிடித்துக் கொண்டு போகப்பட்ட விவரத்தையும் காஞ்சி மக்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். இந்தச் சம்பவம் அவர்களுக்கு எல்லாவற்றிலும் அதிக வேதனையை அளித்திருந்ததுடன் மகேந்திர பல்லவரிடம் அவர்களுக்கிருந்த மரியாதையைப் பெரிதும் குறைத்திருந்தது.

இத்தகைய காரணங்களினால் காஞ்சி மாநகரம் களையற்றுக் கலகலப்பற்று, சோபிதமில்லாமல் அசாதாரணமான அமைதி குடிகொண்ட நகரமாய் விளங்கிற்று.

நகரத்திலேயே இப்படி இருந்தது என்றால் அரண்மனைக்குள்ளே கேட்க வேண்டியதில்லை. புவனமகாதேவி மகேந்திர பல்லவரை மணந்து காஞ்சி அரண்மனைக்குள்ளே கால் வைத்த நாளிலிருந்து, அந்த அரண்மனை ஒரு காலத்திலும் இம்மாதிரி கலகலப்பற்றும் பிரகாசமில்லாமலும், பேய் குடி கொண்ட பழைய மாளிகையைப் போலத் தோற்றமளித்தது கிடையாது.

காஞ்சி நகரம் முற்றுகையிடப்பட்டிருந்த காலத்திலே கூட அந்த அரண்மனையில் அந்தந்த நேரத்தில் கீத வாத்தியங்களின் ஒலியும், பேரிகை முரசங்களின் கோஷமும், சங்கங்களின் முழக்கமும், ஆலாசிய மணிகளின் சத்தமும் கேட்டுக் கொண்டுதானிருந்தன.

இவற்றுடன் அரண்மனைத் தாதிப் பெண்கள் கால்களில் அணிந்திருந்த பாதசரங்களின் கிண்கிணி ஓசை இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருக்கும். வேத மந்திரங்களின் கோஷமும், செந்தமிழ்ப் பாடல்களின் கீதநாதமும் சில சமயங்களில் கேட்கும்.

அரண்மனை முன் வாசல் முற்றத்தில் வந்து போகும் குதிரைகளின் காலடிச் சத்தம் சதா கேட்டுக் கொண்டிருக்கும்.

இப்படியிருந்த அரண்மனையில் இப்போது ஆழ்ந்த மௌனம், - பீதியை உண்டாக்கும் பயங்கர மௌனம், குடி கொண்டிருந்தது.

மணிமங்கலம் போர்க்களத்திலிருந்து மகேந்திர பல்லவரை எடுத்து வந்த பிறகு, இராஜ வைத்தியர்கள் அல்லும் பகலும் அவர் பக்கத்தில் இருந்து சிகிச்சை செய்து வந்தார்கள்.

மகேந்திர பல்லவர் பலநாள் நினைவற்ற நிலையிலேயே இருந்தார். சூரமாரம் போர்க்களத்திலிருந்து மாமல்லர் திரும்பி வந்த பிறகு கூடச் சக்கரவர்த்திக்குச் சுய நினைவு இல்லாமலிருந்தது.

அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாகக் கண் விழித்துப் பார்க்கவும், தம் எதிரிலுள்ளவர்களைத் தெரிந்து கொள்ளவும் ஆரம்பித்தார்.

இனிமேல் சக்கரவர்த்தி பிழைத்துக் கொள்வார் என்றும், ஆனால், இன்னும் சில காலம் அவரைக் கவலையுடன் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் வைத்தியர்கள் சொன்னார்கள். மாமல்லரைப் பார்க்கும் போதெல்லாம் மகேந்திரருக்கு உணர்ச்சி அதிகமாகிப் பேசுவதற்கு முயன்றபடியால், மாமல்லர் தந்தையிடம் அதிகமாகப் போகாமலிருப்பதே நல்லதென்று அபிப்பிராயப் பட்டார்கள்.

இதனால் மாமல்லரின் மனவேதனையும் அமைதிக் குலைவும் அதிகமாயின. அவர் மனம் விட்டுப் பேசுவற்கு அரண்மனையில் யாரும் இல்லை. தளபதி பரஞ்சோதியோ சேனைகளை அழைத்துக் கொண்டு கோட்டைக்கு வெளியே சென்று, வாதாபிப் படையால் ஹிம்சிக்கப்பட்ட கிராமவாசிகளுக்கு உதவி செய்வதில் ஈடுபட்டிருந்தார்.

புவனமகாதேவி எப்போதும் கண்ணீரும் கம்பலையுமாயிருந்தார். புலிகேசியை நகருக்குள் அழைப்பதால் கேடு தான் விளையும் என்று நாம் முன்னாலேயே எச்சரித்ததை இப்போது சொல்லிச் சொல்லி வருந்தினார். அதோடு மாமல்லருக்குப் பாண்டிய ராஜ குமாரியை அப்போதே மணம் முடிக்காதது எவ்வளவு தவறு என்பதையும் அடிக்கடி குறிப்பிட்டார். இந்தப் பேச்சு மாமல்லரின் காதில் நாராசமாக விழுந்தது.

நாளாக ஆக, மாமல்லருக்குச் சிவகாமியைப் பற்றி யாருடனாவது மனத்தைத் திறந்து பேசாவிட்டால் இருதயம் வெடித்துவிடும் போலிருந்தது. அப்படிப் பேசக்கூடியவர்கள் யார் இருக்கிறார்கள்? ஆயனர் ஒருவர்தான், அவர்தான் சிவகாமியைப் பற்றித் தாம் பேசுவதை ஒத்த உள்ளத்துடன் கேட்கக் கூடியவர். மேலும் அவருடைய உடல் நிலையைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா? பார்க்கப் போனால், தமக்கு மகேந்திர பல்லவர் எப்படியோ, அப்படியே ஆயனரும் தந்தைதானே? அவரைக் கவனியாமலிருப்பது எவ்வளவு பிசகு?

இவ்விதம் எண்ணி ஒருநாள் மாமல்லர் ஆயனரை அவருடைய அரண்ய வீட்டில் பார்ப்பதற்காகத் தன்னந்தனியே குதிரை மீதேறிப் பிரயாணமானார்.

காட்டு வழியாகப் போய்க் கொண்டிருக்கையில், அவருக்குத் தாமரைக்குளம் ஞாபகம் வந்தது. தானும் சிவகாமியும் எத்தனையோ ஆனந்தமான நாட்களைக் கழித்த இடம், - ஒருவர்க்கொருவர் எத்தனையோ அன்பு மொழிகளைக் கூறிப் பரவசமடைந்த இடம் - அப்பேர்ப்பட்ட குளக்கரையைப் பார்க்க வேண்டுமென்று ஆசை உண்டாயிற்று.

எனவே, பாதையை விட்டுச் சிறிது விலகித் தாமரைக் குளக்கரையை நோக்கிக் குதிரையை மெதுவாகச் செலுத்தினார்.

சற்றுத் தூரம் போனதும் அந்தக் காட்டு வழியில் எதிரே பெண் ஒருத்தி வருவது தெரிந்தது. மாமல்லர் வருவது கண்டு திடுக்கிட்ட தோற்றத்துடன் அவள் ஒதுங்கி நின்றாள். மாமல்லர் தமது பரம்பரையான குலப் பண்பாட்டுக்கு உகந்தபடி அவளுடைய முகத்தை மறுமுறை ஏறிட்டுப் பாராமல் தம் வழியே சென்றார். ஆனால், சிறிது தூரம் சென்றதும் அந்த ஸ்திரீயின் முகம் ஏற்கெனவே பார்த்த முகம்போல் ஞாபகத்துக்கு வந்தது. "அவள் யார்? அவளை எங்கே பார்த்திருக்கிறோம்?" என்று எண்ணமிட்டுக் கொண்டே மாமல்லர் தாமரைக் குளத்தை அடைந்தார்.

(தொடரும்)

அருள்வாக்கு

பத்து ரூபாயை ஒருவன் திருடுவதால், திருட்டுக் கொடுத்தவருக்குச் சிறிது கஷ்டம் உண்டாகிறது. திருடியவனுக்கோ அதைவிடப் பெரிய கஷ்டமாகப் பல நாட்கள் சிறைவாசம் விதிக்கப்படுகிறது. இப்படிச் செய்தால்தான் அவன் மீண்டும் அந்தத் தப்புப் பண்ண மாட்டான். மற்றவர்களும் அந்தத் தப்பைப் பண்ணப் பயப்படுவார்கள் என்கிற அடிப்படையில் தண்ட நீதி அமைந்திருக்கிறது. மனித இயல்புப்படி (Psychology) பார்க்கும்போது இதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.



ஆனால், இதனினும் சிலாக்கியமான ஓர் உபாயத்தையும் அரசாங்கம் அதே சமயத்தில் விருத்தி செய்ய வேண்டும். குற்றம் இழைத்த பின் ஒருவரைத் தண்டிப்பதும், ஒருவர் சுபாவமான தர்ம உணர்ச்சி இல்லாமல் தண்டனைக்காகப் பயந்தே குற்றம் செய்யாமல் இருக்கச் செய்வதும் இரண்டாம் பட்சம்தான். குற்றம் செய்கிற எண்ணமே தோன்றாமல் இருக்கச் செய்வதுதான் சிலாக்கியமானது.

தர்ம சாஸ்திரப்படி நடக்கும் ஸத்துக்கள் உருவாவதற்கு உரிய சூழ்நிலையை அரசாங்கம் காப்பாற்றிக் கொடுத்தால், ஜனங்களுக்குக் குற்றம் செய்கிற உணர்வே கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து விடும். தர்மம் அறிந்தவர்கள் தர்மத்தை அநுஷ்டிப்பவர்கள் விருத்தியாவதற்கு வசதி இருந்தால், அவர்கள் மற்றவர்களிடமும், தங்கள் வாழ்க்கை உதாரணத்தாலேயே சாந்தத்தையும் ஒழுக்கத்தையும் பரப்புவார்கள். சண்டை, பூசல், குற்றம் எல்லாம் குறையும்.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சாரிய சுவாமிகள்**

ஒலிம்பிக் கனவு!

கேரள மாநிலம் செங்கணாஞ்சேரியில் குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டி. ஒண்ணாங்கிளாஸ் படிக்கும் தம் பெண் குழந்தையை அழைத்துக் கொண்டு ஓட்டப்பந்தயத்தில் பெயர் கொடுக்கிறார் அப்பா. ஓட்டப் பந்தயத்தில் பங்கு பெறுகிறோம் என்கிற உணர்வே இல்லாமல், அந்தக் குழந்தை நின்று கொண்டிருக்கிறது. விசில் ஊதப்பட்டவுடன், அப்பா சொன்னபடி வேகமாக ஓடுகிறது. வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றவர்களின் கைத்தட்டல்கள் குழந்தையை உற்சாகப்படுத்த, அந்தக் குழந்தைக்கு முதல் பரிசு! அப்பாவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர்! ஓட்டப்பந்தயத்தில் முதல் பரிசு பெற்றதற்காக ஒரு டீ கப் பரிசு கிடைக்கிறது.

இன்று ஆசிய விளையாட்டுப் போட்டி வரை, பங்கேற்று, நீளம் தாண்டுதலில் தங்கப் பதக்கம் பெற்றுவிட்டாலும் அந்தச் செங்கணாஞ்சேரி 'டீ கப் சாம்ப்' விளையாட்டுப் போட்டி தமது அதலெடிக் வாழ்க்கைக்குப் பிள்ளையார் சுழி போட்ட சம்பவத்தை நினைவு கூர்கிறபோது, அஞ்சு ஜார்ஜின் குரலில் உற்சாகம்! ஓர் ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பார் என்று சொல்லுவார்கள். அஞ்சு ஜார்ஜின் வெற்றிகளுக்குப் பின் அன்று அவர் அப்பா இருந்தார். இன்று அவரது கணவர் ராபர்ட் பாபி ஜார்ஜ்.

"என் வெற்றிகளுக்குக் காரணம், என் கணவர்தான். அவர் மட்டும் ஒரு விளையாட்டு வீரராக இல்லாமல் போயிருந்தால், நான் எப்போதோ விளையாட்டுத் துறையை விட்டு, விலகியிருப்பேன். காரணம், அடிப்படையில் எனக்கு சோம்பேறித்தனம் அதிகம்'' என்கிறார் அஞ்சு.

ஓட்டப்பந்தயத்தில் தொடங்கிய நீங்கள், நீளம் தாண்டலுக்கு ஏன் மாறினீர்கள்?''

"96ம் ஆண்டு, திருச்சூரில் நான் படித்துக் கொண்டிருந்தபோது இந்த முடிவை எடுத்தேன். அதற்கு முன்பு வரை, நான் ஓட்டத்தில் தான் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று, ஜெயித்துக் கொண்டிருந்தேன். கோச் யூசுப், உன்னுடைய உடல் அமைப்புக்கு, ஓட்டத்தை விட நீளம் தாண்டுதல் பொருத்தமானது. உனது கால்கள் நீளமாக இருப்பது உனக்கு பிளஸ் பாயிண்ட்! என்று ஆலோசனை சொன்னார்.'' அதனைத் தொடர்ந்துதான் தடம் மாறினேன்.

"சிட்னி ஒலிம்பிக்ஸ் போட்டிக்கு இந்தியாவின் சார்பில் தேர்வு செய்யப்பட்டும், கடைசியில் போக முடியாமல் போய்விட்டதே!''

"கணுக்காலில் அடிபட்ட அந்தச் சம்பவம் மிகவும் துரதிருஷ்டவசமானது.

"இப்போது கணுக்கால் பிரச்னை தீர்ந்து விட்டதா?"

"ஆமாம், என்னால் முன்னைவிட நன்றாக இப்போது ஓட முடிகிறது; தாண்ட முடிகிறது. விளையாட்டுத் துறையில் இருப்பவர்களுக்கு, கணுக்காலில் அடிபட்டு விட்டால், அது மீண்டும் சரியாகாது என்று எனக்குச் சிகிச்சையளித்த டாக்டர்கள்கூட சொல்லி விட்டார்கள். ஆனால், என்னைக் காப்பாற்றியது ஆயுர்வேதம். ஜார்ஜ்தான் தினமும் நம்பிக்கையளித்து மீண்டும் பயிற்சிக்குத் தயார்ப் படுத்தினார். காலையிலும், மாலையிலும் ஓட்டம், உடற்பயிற்சி. பகலில் அடிபட்ட கணுக்காலுக்கு, வைத்தியர்களின் ஆலோசனைப்படி பிஸியோதெரபி பயிற்சி. உடல் சோர்ந்து போகும்.

"இத்தனைச் சிரமப்பட்டு, மறுபடி களம் இறங்க வேண்டியது அவசியமா? விளையாட்டுத் துறையைவிட்டு விலகி விடலாமா!'' என்று தோன்றும். அந்தச் சோர்வு என் முகத்தில் பிரதிபலிக்கிறபோதெல்லாம், என் கணவரின் ஊக்கம் அதைப் போக்கி விடும். மிகவும் கஷ்டப்பட்டேன் என்றாலும், விடா முயற்சி



யுடன் பயிற்சி பெற்றேன்."

"இப்போது உலக சாதனையுடன் ஒப்பிடுகிறபோது, நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?"

"என்னுடைய இப்போதைய ரெக்கார்டு 6.74 மீட்டர். உலக சாதனை என்பது 7.02 மீ. இப்போது நான் உலகில் பதினைந்தாவது இடத்தில் இருக்கிறேன். உலக அளவிலான போட்டிகளுக்குரிய விதிமுறைகள் நூற்றுக்கு நூறு சதவீதம் கடைபிடிக்கப்படாத கோச்சிங் கேம்ப் சூழ்நிலையில் ஏழு மீட்டர் வரை என்னால் தாண்ட முடிகிறது என்பது அசாதாரணமான விஷயம். கணுக்காலில் அடிபடுவதற்கு முன்பு, இந்தியாவின் சார்பில், ஒலிம்பிக் போட்டியின் இறுதிச் சுற்றில் பங்கேற்றால் போதும்; பதக்கம் வெல்ல முடியாமல் போனாலும் பரவாயில்லை என்பதே என்னுடைய லட்சியமாக இருந்தது. ஆனால், இப்போது, ஏதென்ஸ் நகரில் நடைபெறவிருக்கும் அடுத்த ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்று, பதக்கம் வென்று விட முடியும் என்ற தன்னம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. காலில் அடிபட்டது கூட நல்லதற்குத்தான் என்று நான் நம்புகிறேன்.

"தற்போது, நீங்கள் பெறும் பயிற்சியே ஒலிம்பிக்ஸில் ஜெயிக்கப் போதுமானது என்று நினைக்கிறீர்களா?"

"பெங்களூரில் எனக்குத் தேவையான எல்லா பயிற்சி வசதிகளும் கிடைக்கின்றன. ஆனாலும் உலகத் தரம் வாய்ந்த, ஒலிம்பிக்ஸ் போட்டிக்குப் பிரத்யேகமாய்ப் பயிற்சி பெற, வரும் மார்ச் மாதம் அமெரிக்கா செல்கிறேன். போக்குவரத்து, உணவு, தங்கும் வசதி மற்றும் பயிற்சிக்காக இருபத்தைந்து லட்சத்துக்கு மேல் ஆகும். இதற்கான ஸ்பான்ஸர்ஷிப் உதவிகள் நிச்சயம் கிடைத்துவிடும். ஏதென்ஸில் என் ஒலிம்பிக் கனவு நிச்சயம் நனவாகி விடும்'' என்கிறார் நம்பிக்கை பொங்கும் குரலில் அஞ்சு.

பேட்டி: **எஸ். சந்திரமௌலி**

அட்டை, படங்கள்.
கே.வி.வேங்கடகிருஷ்ணன்



• அஞ்சு



• ஜார்ஜ்



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை - 63. போன்: 276 0612.

City Office: No.7, முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 600 033. போன்: 371 4942.

புத்தாண்டு-பொங்கல் நல்வாழ்த்துக்கள்

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 14 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 180 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (180 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் / வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்

சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் (நிறுவனர்) A. ராஜாபக்கிரிசாமி MSc., MEd.,

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு

• ஷியாமளன்


டாக்டர் காஸா என்பவர், 'இந்த மருத்துவ மனையில் உயிர்காக்கும் மருந்துகள் கிடைக்காததால், ஒவ்வொரு மாதமும் நூற்றுக்கணக்கில் குழந்தைகள் இறந்து கொண்டிருக்கிறார்கள்' என்று கூறியதை பி.பி.ஸி.யில் அறிவித்தபோது, வருத்தமாக இருந்தது. பாக்தாத் நகரின் மருத்துவமனைகள் மட்டுமல்ல, வியாபார கேந்திரங்களும் டல்லடித்துக் கொண்டிருந் ததைக் காட்டினார்கள். 'கடை விரித்தேன் கொள் வாரில்லை' என்று புலம்புகிறார்கள் வியாபாரிகள். எல்லாம் ஐ.நா. சபை இராக்கின் மீது பொருளாதாரத் தடை அறிவித்ததிலிருந்து இந்த நிலைமை. சதாமைப் பொறுத்துவரை 'பிள்ளையார் பிடிக்க, பழமொழியை குவைத் பிடிக்க குழப்பமாய் முடிந்துவிட்டது' என்று கூறலாம்.



இயக்குனர் மணிரத்னம் 'கன்னத்தில் முத்த மிட்டால்' படத்தின் இளைய கதாநாயகியை வானு யரப் புகழ்ந்தது நினைவிருக்கலாம். அதே போல் தனது 'சிக்ஸ்த் சென்ஸ்' படத்தில் முக்கியப் பங் கேற்ற சிறுவன் குறித்து ஸ்டார் மூவீஸில் புகழ்ந்து தள்ளி னார் மனோஜ் ஷ்யாமளன். 'என் எதிர்பார்ப்புகளை யெல்லாம் தாண்டி அந்தப் பாத்திரத்துக்கு உயிர் கொடுத்தான்' என்றார்.

பாம்புக் கடிக்குப் பழகாத அதிகாரி!

ஸ்டார் நியூஸில் 'சர்பன்ச்' மாவட்டத்திலுள்ள வட இந்திய கிராமத்தைக் காண்பித்தார்கள். அங்கிருந்து டவுனுக்கு ஒரு கயிற்றுப் பாலத்தின் வழியாகத் தான் வர வேண்டும். நடக்க ஒரு கயிறு, மேலே பிடித்துக் கொள்ள ஒரு கயிறு என்று பிடித்துக் கொண்டு, நீளமான அந் தப் 'பாலத்தில்' சுமை களோடு பெண்களும் குழந்தைகளும், நோயுற் றவர்களும் நடப்பதைக் காண்பித்தபோது பாவ மாக இருந்தது. மழை கொட்டித் தீர்த்தபிறகு கீழே நீர் பெருக, பாலத் தில் நடப்பவர்களில் சிலர் கீழே விழுந்து விடு வதையும், அந்த நீரில் பல பாம்புகள் இருப்பதையும் காண்பித்ததும், மேலும் மனதை கனக்க வைத்து. 'பாலம் கட்ட அரசிடம் இப்போதைக்குப் பண மில்லை' என்றார் அரசு அதிகாரி!



'உதயம்' தொடரில் ஈஸ்வரி ராவுக்குப் பதிலாக டாக்டர் ஷர்மிளா! 'அவ ருக்குப் பதில் இவர்' என்று அலட்சியமாக மிளகாய் அரைக்கும் போக்கு தொடங்கி, ரொம்ப நாளாகி விட்டது. ஆனால் (சென் ஸிடிவ்வாக நடிக்கக் கூடியவர்கள் என்றா லும்) சிவசந்திரன், ரேணுகா, ஷர்மிளா ஆகிய சீனியர்களின் முக் கோணக் காதல் காட்சிகளையெல்லாம் காட்டுவது (எல்லாம் ஃப்ளாஷ்பாக்காம்) அதைவிட அடாவடி!

- சேனல் பாய்

பாபா ஸ்டைலில் பாண்ட்!



உலகப் புகழ் பெற்ற சீக்ரட் ஏஜெண்ட்டான 007 என்கிற ஜேம்ஸ் பாண்டு, நம் ஊர் சூப்பர் ஸ்டாரின் பாணியில், தனது வழக்கமான பிராண்ட் சிகரெட்டுக்கு குட்பை சொல்லிவிட்டு, புகழ் பெற்ற (கியூபா நாட்டு) சுருட்டுப் பிடிக்கிறார். (புகைப்பழக்கத்துக்கு எதிரான அமெரிக்க அமைப்புகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன என்பது வேறு விஷயம்!)

தனது வழக்கமான பி.எம். டபுள்யூ காருக்குப் பதிலாக, ஆஸ்டன் மார்டின் காரைப் பயன்படுத்துகிறார். உடை ஸ்டைல், வாட்ச் (இப்போது ஒமேகா) என்று எல்லாமே மாறிவிட்டது. பயணம்: பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானத்தின் முதல் வகுப்பு கேபின். பருகுவது 007க்கு ஏற்றார் போல 7 அப்.

ஜேம்ஸ் பாண்டு படங்களுக்கு இது நாற்பதாவது ஆண்டு. 1962ல் முதல் படமான 'டாக்டர் நோ' வெளியானது. அதன் பிறகு வெளியாகியுள்ள இருபதாவது ஜேம்ஸ் பாண்டு படம் இது.

சம்பந்திய வழக்கப்படி, இந்தியாவில் ஜேம்ஸ் பாண்டு ஆங்கிலம் தவிர இந்தி, தமிழ், தெலுங்கும் பேசுவார். தமிழ்நாடு, கேரளாவில் மட்டும் அறுபது பிரிண்ட்கள் ரிலீஸ் ஆகியுள்ளது பாண்டின் 'டை அனதர் டே' படம்!

டெயில் பீஸ்:

டை அனதர் டே படத்தில் ஜேம்ஸ் பாண்டுக்கு ஜோடியாக, ஆஸ்கார் விருது பெற்ற ஹால் பெரி நடித்திருந்தாலும், படத்தில், ஒரு துணை நடிகையாக நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டார், ஜூடி மார்டின் கிளார்க். இவரது அழகு, துறுதுறுப்பு இரண்டும் இயக்குனரை மிகவும் கவர்ந்துவிட, வேறு ஒரு முக்கியப் பாத்திரத்தில் நடிக்க வைத்துவிட்டார். "ஒரே ஒரு காட்சியில் ஜேம்ஸ் பாண்டு பியர்ஸ் ப்ராஸ்னனுடன் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது என்றாலும், அதுவே எனக்கு ரொம்ப பரவசமாக இருந்தது'' என்கிறார் 32 வயது ஜூடி. இவரது தாய் ஓர் இந்தியப் பெண்மணி என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு பிரிட்டிஷ் தம்பதிக்கு தத்துப் பெண்ணாக இங்கிலாந்து சென்ற ஜூடிக்கு, சிறு வயது முதலே நடிப்பில் ஆர்வம். 'இங்கிலாந்தில் நடிப்புப் பயிற்சி பெற்ற பின், பதினெட்டாவது வயதில், குதிரைப் பந்தைய மைதானத்தில், கோக்ககோலா விற்பனைப் பெண்ணாக இருந்த போதுதான் அதிர்ஷ்டம் என் முதுகைத் தட்டியது' என்று கூறும் ஜூடி, பிரிட்டனில் பிரபல மாடலாக விளங்கியவர்.



• ஜூடி

"இனி ஹாலிவுட்டில் ஒரு ரவுண்டு வருவேன்'' என்கிறார் ஜூடி.

- மௌலி

புக் பேங்க்













இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி. — செ. திவான்

சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ.சி. என்பதைத்தான் பலரும் அறிவோம். அவர் சிறந்த தமிழிலக்கியவாதி என்பதை, அவர் 1917ல் விளக்கவுரை எழுதிய, பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்றான "இன்னிலை"யை மறுபதிப்பாக வெளியிட்டு நினைவு படுத்துகிறார் செ. திவான்.

சுஹைனா பதிப்பகம்,
106, F-4A, திருவனந்தபுரம் சாலை, பாளையங்கோட்டை.

தந்தை பெரியாரின் இறுதிச் சொற்பொழிவு — நாத்திகம் பி. இராமசாமி

ஈ.வெ.ரா. பெரியார் 19.12.73ல் ஆற்றிய கடைசி உரையின் தொகுப்பு.

நாத்திகம், 97/55.
என்.எஸ்.கிருஷ்ணன் சாலை,
கோடம்பாக்கம், சென்னை - 24.
(இலவச வெளியீடு)

சமூக நீதிப் போராட்ட வரலாறு — முக்தா சீனிவாசன்

வரதட்சணை, பலதார மணம், பொட்டுக் கட்டுதல், தீண்டாமை என பல சமூக அவலங்களைச் சாடி விளக்கியுள்ளார் முக்தா சீனிவாசன்.

கங்கை புத்தக நிலையம்,
13. தீனதயாளு தெரு, தி. நகர்,
சென்னை - 17. விலை ரூ. 35/-

காமராஜர் ஒரு தத்துவம் — ஜி. லட்சுமிநாராயணன்

காமராஜரின் மகத்தான சாதனைகளையும் அவருடைய அரசியல் தத்துவத்தையும் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

திருவரசு பதிப்பகம்,
13, தீனதயாளு தெரு, தி. நகர்,
சென்னை - 17.
விலை ரூ. 60/-

பெரிய புராணம் — மூலமும் தெளிவுரையும்: வ.த. இராமசுப்பிரமணியம்

அறுபத்து மூன்று நாயன்மார்களின் சரிதத்தைப் பாடிய சேக்கிழாரின் தமிழையும், பக்தியையும் வளர்த்த நூல். மூலமும் தெளிவுரையும் மிக நேர்த்தியாக எழுதப்பட்டு, இரண்டு தொகுதிகளாக வெளி வந்துள்ளது.

திருமகள் நிலையம்,
ப.எண். 55, புதிய எண். 16,
வெங்கட் நாராயணா ரோடு,
தி. நகர், சென்னை - 17.
விலை(ஒரு பாகம்) ரூ. 270/-

கம்பன்: நேற்று இன்று நாளை — சுகி. சிவம்

2001ல் கம்பன் விழாவில் சுகி. சிவம் ஆற்றிய சொற்பொழிவின் நூல் வடிவம். கம்பனில் நாம் இதுவரை காணாத, அதிகம் அறியாத, வாழ்வுக்குப் பெரிதும் உதவக் கூடிய பக்கங்களைக் காட்டுகிறார் சுகி. சிவம். இலக்கியச் சுவையும், இன்றைய உலகியல் சுவைகளும் ஒன்றாக இணைத்து வெளிவந்துள்ள நூல்.

வானதி பதிப்பகம்,
13. தீனதயாளு தெரு,
தி. நகர், சென்னை - 17.
விலை ரூ. 35/-

— விஸ்வக்

சிறு தொடர் – 1

பாரு யோகேஸ்வரன்

அமலிக்கு அம்மாயி பற்றித் தெரிந்து கொள்வதில் அத்தனை ஆர்வம் ஏன் என்று எனக்குப் புரியவேயில்லை.

இருவரும் சேர்ந்து வாழத் தொடங்கிய இந்த இரண்டு ஆண்டுகளில், குறைந்தது இரண்டாயிரம் முறையாவது அம்மாயி பற்றிக் கேட்டிருப்பாள். அதில் இருபது முறை நான் பதில் சொல்லியிருந்தால் அதிகம். மற்ற சமயங்களில் பதில் சொல்லத் தோன்றாமல் மௌனமாகி விடுவேன்.

உதாரணமாக, 'நாம் இருவரும் திருமணம் செய்து கொள்ளாமல் இப்படி ஏதோ ஓர் ஒப்பந்தத்தில் சேர்ந்து வாழ்கிறோமே... இதுபற்றி தெரிந்தால் உன் அம்மாயி என்ன சொல்லும்?' என்று கமலி கேட்டால் நான் குழம்பிப் போய் விடுவேன். அதற்குக் காரணம் இருக்கிறது.

பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் - அதுவரை இல்லாத அளவுக்கு மோசமான மதிப்பெண்கள் பெற்று நான் தோல்வியடைந்திருந்த சமயம். மத்தியான வேளையில், ஊர் அடங்கிய நேரமாகப் பார்த்து, டுட்டோரியல் காலேஜ் போய்க் கொண்டிருந்தேன். எஞ்சிய நேரத்தில் நான் வேறு எதுவும் தகிடுதத்தங்கள் செய்துவிடக் கூடாது என்கிற பயத்தில் எனது மாமா, ஒரு தட்டெழுத்துப் பயிற்சிப் பள்ளியில் வேறு சேர்த்து விட்டிருந்தார்.

தட்டெழுத்துப் பயில்வதற்காக நான் தேர்வு செய்து கொண்டிருந்த நேரம் மாலை ஆறு மணியிலிருந்து ஏழு மணி வரை. சுருக்கெழுத்துத் தொழிலும், தட்டெழுத்துத் தொழிலும் மெல்ல செத்துக் கொண்டிருந்த காலமாதலால், பெரும்பாலான இயந்திரங்கள் தீண்டுவதற்கு விரல்கள் இல்லாமல் அகலிகை நிலையை அடைந்திருந்தன. காட்டுக்கோயில் பூசாரி போல நான் மட்டும் ஒரு மூலையில் அந்தக் காலத்து ரெமிங்டன் ஒன்றில், ஏ எஸ் டி எஃப் ஜி எஃப்களோடு கொத்து பரோட்டா வேலையில் ஈடுபட்டிருப்பேன்.

"இங்க பாருங்க... எப்பவுமே ஒரு பேப்பரை வச்சு அடிக்கக் கூடாது. டைஃப்பேஸ் கெட்டுப் போயிடும். இப்படித் தான் பேப்பரை இன்செர்ட் பண்ணி ஸ்க்ரோல் பண்ணணும். இது மார்ஜின். இது



"ரிப்பன் ஸ்பூல்..." என்று முதல்நாள் சொல்லிக் கொடுத்த அந்தப் பெண், பூட்டையும் சாவியையும் மடியில் போட்டுக் கொண்டு, வரவேற்பறையில் உட்கார்ந்து நகம் கடித்துக் கொண்டிருக்கும்.

முதல் நான்கைந்து தினங்களுக்கு எங்களுக்குள் எவ்விதப் பேச்சு வார்த்தையும் நிகழவில்லை. பேந்தப் பேந்த விழித்தபடி, நான் அடித்து நீட்டும் தாளில் இருபத்தெட்டு இடங்களை சுழித்து, "நாளைக்குத் தப்பு குறையணும், ஸ்பீட் அதிகமாகணும்..." என்று கதவைப் பூட்டியபடியே சொல்லி, தெருவில் இறங்கி ஏதோ ஒரு இருட்டுச் சந்தில் செருப் பைத் தேய்த்தபடி மறைந்து போகும். எந்தப் பக்கம் திரும்பி நடந்தாலும் ஒரு பிரதான சாலையில் போய் முடியும் அந்தத் தெருவில், எந்தப் பக்கம் திரும்பி நடப் பது என்று கொஞ்ச நேரம் குழப்பமாய் நின்றுகொண்டிருந்துவிட்டு, ஏதோ ஒரு திசையில் நகர்வேன்.

அம்மாயி

என் வழக்கமான ஒழிசல்தனம் காரண மாக திடீரென்று ஒருநாள் பயிற்சிப் பள்ளிக்கு மட்டம் போட, "வரலைன்னா முதல் நாளே சொல்லிடணும். ஆறு மணிக்கே இன்ஸ்டிட்யூட்டைப் பூட்டிட்டுப் போயிருப்பேன். யாரும் இல்லாம இருட்டில நான் மட்டும் தனியா ஏழு மணி வரைக்கும் உட்கார்ந்திருக்க முடியாது..." என்று அந்தப் பெண் தட்டச்சு எந்திரம் போல கடகடக்க... எங்களுக்குள் மெல்லியதாய் ஒரு நட்பு முளைத்தது.

"நீங்க அடிச்சு முடிக்கற வரைக்கும் இந்தப் புத்தகத்தைப் படிச்சுக்கிட்டிருக்கவா?" என்று என் கையில் இருந்த கதைப் புத்தகம் ஒன்றை ஒருநாள் எடுத்துக் கொண்டது.

"ஆமாம்... உங்க பேரு என்ன...?"

"ஜெயலட்சுமி."

பதினைந்து நிமிடம் கழித்து, ரிப்பன் ஸ்பூல் சுழலாமல் முரண்டு பிடிக்க, எழுத்துக்கள் தெளிவில்லாமல் நகர்வது கண்டு இணற, ஜெயலட்சுமியின் உதவியை நாடி வெளியில் வந்தேன்.



"என்ன திடீர்னு இந்த நான்சென்ஸ் எல்லாம் படிக்க ஆரம்பிச் சுட்டே...?"

ஜெயலட்சுமியின் வயதையொத்த, ஆனால் மஞ்சள் நிறத்திலான ஒரு பெண் அந்தக் கதைப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தது.

"என்னு இல்ல. இதோ... இவரோடது..."

ஜெயலட்சுமி என் திசைநோக்கித் தலை யாட்டிக் காண்பிக்க... அந்தப் பெண், 'நீதானா அந்த நான்சென்ஸ்...' என்பது போல் திரும்

பிப் பார்த்தது.

"ஓ... புது ஸ்டூடண்ட்டா... இப்போதைக்கு இந்த இன்ஸ்டிட்யூட்டை மூடற மாதிரி இல்லை...?"

"ஏன்... நான் ஒரு ஐந்நூறு ரூவா சம்பளம் வாங்கிக்கிட்டிருக்கறது உனக்குப் புடிக்கலையா...?"

ஜெயலட்சுமி சிரிக்க... அந்தப் பெண் மறுபடியும் என்னைத் திரும்பிப் பார்த்தது.

"வந்து... அந்த ரிப்பன் ஸ்பூல் இல்லை... அது சுத்த மாட்டேங்குது."

இரண்டு பேரும் குபீரென்று சிரித்தார்கள்.

ஜெயலட்சுமி வேகமாக எழுந்து வந்து யந்திரத்தைச் சரிபண்ண, அந்தப் புதிய மஞ்சள் நிறப் பெண்ணின் பெயர் சீதா என்றும், இன்ஸ்டிட்யூட்டிற்குப் பக்கத்தில் இருக்கும் புராதன ஜவுளி வியாபாரக் குடும்பத்தைச் சேர்ந்த பெண், என்றும் தெரிந்து கொண்டேன்.

ஜெயலட்சுமி, சீதா இரண்டு பேருமே என்னை விட மூன்று நான்கு வயது மூத்தவர்கள். ஆனாலும் அவர்கள் இருவரில் என்னை மிகவும் கவர்ந்தது சீதாதான். (எப்பொழுதுமே ஹீரோக்களுக்கு ஹீரோயின்களைத்தானே பிடிக்கும்?)

சீதாதான்... எனக்கு 'சென்ஸிபிளான' புத்தகங்களை அறிமுகப்படுத்தியது. ஞாயிற்றுக் கிழமை மாலைப் பொழுதுகளில் தியானம் பயில்வதற்காக அழைத்துச் சென்றது சீதாதான். 'யாரை எங்கே எப்பொழுது எதற்காக சந்திக்கிறோம் என்பதும், யாரை எங்கே எப்பொழுது எதற்காகப் பிரிகிறோம் என்பதும்தான் வாழ்வின் இருபெரும் அதிசயங்கள்' என்று ஆட்டோகிராஃபில் எழுதியது, சீதாதான்... நான் சினிமா ஆசையால் சென்னை ஓடி வந்து, தாக்குப்பிடிக்க முடியாமல் அந்த ராத்திரியே ஊருக்குத் திரும்பி ஓடி வந்த கதையைக் கேட்டு, அந்த வாரம் முழுக்க விழுந்து விழுந்து சிரித்தது.

சீதாதான்...

"ஆமாம் மேற்கொண்டு ஃபர்தரா என்ன படிக்கலாம்னு இருக்கீங்க...?" என்று ஒருநாள் திடீரென்று கேட்டது.

அந்த நேரம் நான் அரசாங்கக் கல்லூரிகளில் இளம்கலையோ, இளம் அறிவியலோ பயில்வதற்காக விண்ணப்பங்கள் வாங்கிக் கொண்டிருந்தேன்.

"சும்மா ஊருல இருக்கறவனெல்லாம் ஒரு குட்டையில போயி விழுறான்ங்கறதுக்காக நீங்களும் அதே குட்டையில போயி

"மாத்திரை சாப்பிடாம அடம் பிடிக்கும் உங்க பையனிடம் ரசகுல்லாவில் அதை ஒளிச்சு வச்சுக் குடுத்தீங்களே, என்ன ஆச்சு?"

"ரொம்ப நல்லாயிருந்தது, கொட்டையை மட்டும் துப்பிட்டேங்கறான்!"

— எம். சங்கர்

விழாதிங்க. இதுவரைக்கும் படிச்சது ஃபண்டமெண்டல் தான். இனி மூணு வருஷமோ அஞ்சு வருஷமோ படிச்சா... படிச்ச படிப்புக்கு உடனே ஒரு வேலைக்குப் போற மாதிரி இருக்கணும்..."

"இல்ல... நான் சினிமா பண்ணணும்னு இருக்கறதால..."

"மண்ணாங்கட்டி. ஜேஸுதாஸ் காக இல்லாம ட்ரெய்ன் ஏறி மெட்ராஸ் போயி ஜெயிச்சாருங்கறதுக்காக... நீங்களும் அப்படியே கனவு காணாதீங்க. ஒழுங்காப் படிச்சு... சின்ன வயசுலயே ஒரு வேலை தேடிக்குங்க. சொந்தமா சம்பாதிக்க ஆரம்பிச்சப்புறம், சினிமா, பாலிடிக்ஸ்னு எந்தக் கண்றாவியை வேணாலும் யோசிக்கலாம்..."

நான் எப்போதும் போல சிதாவின் கண்களையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"நான் ஒண்ணு சொல்றேன் கேக்கறீங்களா...? குமாரபாளையம் எஸ்.எஸ்.எம்ல... டெக்ஸ்டைல் டெக்னாலஜி டிப்ளோமா பண்ணுங்க. நம்ம ஊரு சொசைட்டிக்கு ரெண்டு சீட் அலாட்மெண்ட் இருக்கு. சொஸைட்டி செகரட்டரி எங்க ஃபேமிலி ஃப்ரெண்டுதான். நான் சொல்றேன். ஒழுங்கா கோர்ஸ் முடிச்சா... ஏதாவது நல்ல பாம்பே கம்பெனியில பெரிய சம்பளத்துக்கு வேலைக்குப் போயிடலாம். ஒருநாள் கூட வீட்டில உக்காந்திருக்க வேண்டிய அவசியமில்ல.. துணித்தொழிலுக்கும், சாப்பாட்டுத் தொழிலுக்கும் உலகத்தில என்னிக்கும் அழிவில்ல... என்ன சொல்றீங்க...?"

இரண்டு தினங்கள் கழித்து, மத்தியான சாப்பாட்டுக்குப் பிறகு. மேற்குப்புற வீட்டில் தூக்கத்தை நோக்கிக் கயிற்றுக் கட்டிலில் புரண்டு கொண்டிருந்தேன்.

"தம்பீ... இங்க இருக்கறியா... ஒன்னைப் பாக்க தாத்தைங்கார்பேட்டையிலிருந்து ரெண்டு பொண்ணுங்க வந்திருக்காங்க. வா..." என்றவாறு கதவைத் தள்ளித் திறந்தார் தாத்தா.

எனக்குள் ஒரே நேரத்தில் ஓராயிரம் தட்டெழுத்து யந்திரங்கள் ஒலிக்கத் தொடங்கின.

சட்டை பட்டன்களை மாற்றிப் போட்டபடி கீழ் வீட்டை நோக்கி ஓடினேன்.

திண்ணை முழுவதும் கோழி எச்சங்களால் நிறைந்திருக்க... அவற்றுக்கு இடையில் இற்றுப் போன தடுக்கிப்பாய் ஒன்றை விரித்து 'கொஞ்சம் அசைந்தாலும் ஆபத்து'



என்கிற அச்சத்தில் ('எச்சத்தால் அச்சம்' - இப்படித் தலைப்பு வைத்தால் எத்தனை பேருக்குப் புரியும்?) ஜெயலட்சுமியும், சிதாவும் உட்கார்ந்திருந்தார்கள்.

"சொஸைட்டி செகரட்டரி ஒரு பதினஞ்சு நாள் வெளியூர் போறாராம். அதுக்குள்ள லெட்டர் வாங்கிடலாம்னுதான் வந்தோம். கிளம்புங்க..."

எப்போது உடை மாற்றி, எப்போது ஜெயலட்சுமியோடும், சிதாவோடும் பேருந்து ஏறி, எப்போது செகரடரியைச் சந்தித்து, எப்போது கடிதம் வாங்கி, எப்போது தட்டெழுத்துப் பள்ளியை அடைந்தோம் என்பதே நினைவில்லாத அளவுக்கு...

...அவர்கள் இருவரும் எனது வீட்டுக்கு வந்தது தொடர்பாக வெலவெலத்துப் போயிருந்தேன்.

இன்ஸ்டிட்யூட் வாசலில் காளியின் மறு உருவமாக, சுருக்குப் பையைப் பிரித்து வெற்றிலையை மடித்தபடி அம்மாயி நிற்பதைப் பார்த்ததும் தான், சரி... நம் கதையில் ஒரு முக்கியத் திருப்பம் ஏற்படப் போகிறது என்கிற உணர்வுக்கே நான் வந்தேன்..

"நான் இல்லாத நேரமாப் பாத்து வீட்டுக்கு வந்து, ஒரு வயசுப் பயலை கூட்டிக்கிட்டு வந்த ரெண்டு சிறுக்கிங்களும் நீங்கதானா?" என்று அம்மாயி தன் ஆட்டத்தைத் தொடங்கியது.

(தொடரும்)

திறந்திடு ஆஸ்கார்!

இந்த வருடம், ஆஸ்கார் விருதுக்காக, அனிமேஷன் பிரிவில், தகுதிச் சுற்றுக்குத் தேர்வு செய்யப்பட்டிருக்கும் பதினேழு படங்களில், நம் ஊர் தயாரிப்பான அலிபாபா



வும் ஒன்று. முப்பரிமாணத்தில், அலிபாபாவும் நாற்பது திருடர்களும் கதையை, அனிமேஷன் திரைப்படமாக எடுத்திருப்பவர்கள் பென்டாமீடியா கிராபிக்ஸ்காரர்கள். செலவு ஆறு கோடி!

பென்டாமீடியா நிறுவனம், உலகப் புகழ் பெற்ற யுனிவர்சல் ஸ்டுடியோஸ் நிறுவனம் மூலம் உலகமெங்கும் இதனை வெளியிடுகிறது.

"கார்ட்டூன் படத் தயாரிப்பில், உலக அளவில் நம்மால் போட்டி போட முடியுமா?" என்று இப்படத் தயாரிப்பில் முக்கிய பங்கு வகித்த பென்டா மீடியாவின் கமதி ஸ்ரீதரனிடம் கேட்டபோது, "நாங்கள் இதற்கு முன் மகாபாரதத்தை 'பாண்டவாஸ்' என்று கார்ட்டூன் படமாகத் தயாரித்தபோது, வரவேற்பும், தேசிய விருதும் கிடைத்தது.

"ஒன்பது மாதங்களில், ஸ்கிரிப்ட் தயார் செய்து, வசன ஒலிப்பதிவை முடித்து, அதன்பின் டிஜிடல் முறையில் கேரக்டர்களை உருவாக்கி, படம் எடுத்து முடித்தோம். இசையமைப்பாளர் விண்மணி கனடாவில் வசிப்பவர் என்பதால், போஸ்ட் புரொடக்ஷன் வேலைகளை கனடாவிலேயே வைத்துக் கொண்டோம். கார்ட்டூன் படங்களில் அதிகமாக இருக்கும் அமெரிக்க வாசனை, இதில் தவிர்க்கப்பட வேண்டும் என்று நாங்கள் நினைத்ததும் இதற்கு இன்னொரு முக்கிய காரணம்.

"இப்படிப்பட்ட கார்ட்டூன் திரைப் படங்களை இங்கேயே உலகத் தரத்துக்குத் தயாரிப்பதில் இன்னொரு அனுகூலமும் உண்டு. ஏற்கெனவே இறங்குமுகமாய் இருக்கும் மென் பொருள் தொழில் துறையில், இதன் மூலம் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும். நம் தரமான படைப்புகளைப் பார்த்துவிட்டு, பாராட்டும் அயல் நாட்டு அனிமேஷன் தயாரிப்பாளர்களை, இங்கே ஈர்க்க முடியுமல்லவா?" என்று கூறுகிறார் இவர்.

"அலிபாபா கதையில் ஏதாவது மாற்றம் செய்திருக்கிறீர்களா?"

இல்லை, அனிமேஷன் படம் என்பதால், அலிபாபா, குகையின் கதவினைத் திறக்கும் காட்சியைப் புதுமையான முறையில் படமாக்கியிருக்கிறோம். குகையின் நுழை வாயிலை ஒரு முகம் போல ஆக்கி, அது பேசுவது போலச் செய்து, 'திறந்திடு சீஸேம்' என்றவுடன் முகம் திரவ வடிவில் உருமாறி, வழிவிடுவது போல அமைத்திருக்கிறோம்." என்கிறார் படத்தின் எடிட்டரான வெங்கி.

பென்டா மீடியாவின் அடுத்த அனிமேஷன் தயாரிப்புகள் : சிந்துபாதின் மைந்தன், புத்தா.

- எஸ். சந்திரமௌலி





போ நைனா!

✉ "யெல் நைனோ (EL-NINO)வுக்கு எதிரான விளைவுக்கு, அதாவது குறைவெப்ப அளவுக்கு லா – நைனா (LA-NINA)விளைவு என்றுதான் பெயர். வா நைனா! என அன்போடு அழைத்திருக்கிறீர்களே! போ நைனா!
பொன்மலை, ஆர். பிரகாஷ்

✉ ஊர்க்குருவி ஊர் வம்பைக் கூட்டப் போகிறதோ என்று நினைத்தேன், பரவாயில்லை சார், உருப்படியான பல ருசிகர தகவல்களை வழங்குகிறது!
சென்னை - 91, கே.என். பாலகிருஷ்ணன்

✉ நாகப்பாவின் சமாதியோடு இரண்டு மாநில அரசுகளின் கௌரவமும், தன்மானமும், சமாதி ஆகிவிட்டன என்பதை பொட்டிலடித்தாற்போல் எடுத்துக் காட்டியது கார்ட்டூன்!
மதுரை - 14, நெல்லை. தேவமைந்தன்

✉ எந்தப் பிரதிபலனையும் பாராமல் சங்கீதத்தை ஐம்பது வருடமாக, ஒரு யாகம் மாதிரி செய்து வரும் சிக்கல் சகோதரிகள் நீலா – குஞ்சுமணி இருவருக்கும் 'சங்கீத கலாநிதி' விருது பொருத்தமானது. விருது லேட் என்றாலும் பிளாட்டினம் ஜூப்ளி ஆண்டில் பெறுவது இனிது!
திருவாரூர் - 1, எஸ். பாலச்சந்தர்

✉ "பழைய மொந்தையில் புதிய கள்" என்பதைப் போலத்தான் 'புதிய வீராணம்' இருக்கிறது. 'இந்தத் திட்டத்தை நிறைவேற்றியே தீருவேன்' என்ற முதல்வரின் சபதம் மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் நிறைவேறினால் சரி!"
திருச்சி – 21, ஆர். அப்துல் சலாம்

✉ 'நாகப்பா மரணம் – யார் பொறுப்பு?' என்ற தலையங்கக் கேள்வி நியாயமானதே. ஆனால், இதற்குக் குற்றஞ் சாட்டப்படுபவர்கள் (கர்நாடக, தமிழக, மத்திய அரசுகள்) பொறுப்பேற்றுக் கொள்வார்களா என்பது சந்தேகமே. வீரப்பன் செய்யும் அட்டகாசம் இரு மாநிலங்களையே ஆட்டிக் கொண்டிருப்பது அரசுகளுக்கே பேரவமானம். அப்பாவி மனித உயிர்கள் காவு கொடுக்கப்படுவது அரசியலுக்குக் கேடு.
தஞ்சாவூர் - 2, ஜி. ராமதாஸ்.

✉ ரிமோட் பகுதியில் முத்துராமன் வில்லவாக நடித்த முதல் படம், "போக்கிரிராஜா" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு முன்பாக வெளிவந்த, "அவளுக்கென்று ஒரு மனம்" என்ற படத்தில் வில்லனாக நடித்திருக்கிறார்.
சென்னை – 12, ஒய்.எஸ். ப்ரீதா.

✉ சொன்னது சொன்னபடி. சிரிப்புத் துணுக்குகள் அருமை. குறிப்பாக சுண்டு விரல் வலிக்காக ஈ.ஸி.ஜி, எக்கோ, ரத்தப் பரிசோதனை எடுத்தது மட்டுமல்லாமல், எம்.ஆர்.ஐ. ஸ்கானும் எடுக்கச் சொன்னது சூப்பர்ப்!
மணியக்காரன் பாளையம்,
ஏ.ஜி.கல்யாணசுந்தரம்

காதல்

சொந்தம் மறந்தவனென்று
உறவுகள் தூற்றட்டும்
இறந்தவர் வீட்டுக்கெல்லாம்
வரவே மாட்டேன்
நீ
அழுது கொண்டிருப்பதைப்
பார்க்க முடியாது
என்னால்?

ஏதைப் பற்றியுமே முழுமையாகப் பேசத் தெரியாதவர் கூட காதலைப் பற்றிப் பேசத் தொடங்கினால், ஏராளமான உணர்வுகளைக் கொட்டிக் கவிழ்க்கிறார். எனக்கொரு காதலியிருந்தால் எனத் தொடங்கும் அவரது கதையின் முற்பகுதி, பல திருப்பங்களைக் கடந்து முடிவுறும் போது, கண்ணீர்த் துளிகளாய் மாறிவிடுகிறது. கண்ணீர், காதலின் திரவம். கண்ணீர் காதலின் பரிசு. கண்ணீர் காதலின் இன்னொரு வடிவம்.

ரகசியமாய் அழும்போதுதான் மனது உண்மையின் மடியில் உட்கார்ந்திருக்கக் காண்கிறோம். அடுப்பூதும் பெண்கள் பலருக்கு, ரகசிய அழுகை என்பதன் பொருள் தெளிவாய் விளங்கும். இன்னொருவரால் சொல்லப்படுவதல்ல ரகசியம். இன்னொருவரைப் பற்றி நமக்குத் தெரிந்த உண்மைக்கு, ரகசியம் என்று பெயர் நாமகரணம் சூட்டியிருக்கிறோம். காதல் ஓர் உயிரால் இன்னொரு உயிருக்குத் தரப்பட்ட ரகசியம். ரகசியம் பாதுகாக்கப்படுவதல்ல.

இயற்கையின் ரகசியத்தை பெருங்கவி கம்பதாசன் போல் படம் பிடிக்க வேறு யாராலும் முடிந்ததில்லை. உலகக் காதலின் முதல் கண்ணீர்த் துளி, என்று தாஜ்மஹாலைச் சொன்ன இவருக்கும், ஒரு காதலின் கண்ணீர்க் கதை இருக்கிறது. ஒரே இரவில் அந்த நினைவுகளுக்காக பக்கம் பக்கமாய் எழுதி வைத்திருக்கிறார். ஒரு கவிஞனுக்குக் கிடைக்க வேண்டிய உச்சபட்ச அங்கீகாரத்தை, நாற்பதுகளில் பெற்ற பெருமைக்குரியவர். திரைப்பாடல் வரலாற்றில் தனித்த முத்திரை பதித்த இவரது பாடல்கள், காற்றில் செதுக்கிய கல்வெட்டுக்கள்.

கவிஞர்களின் கவிஞர் என அறியப்பட்ட கம்பதாசன் கற்பனைகளின் மடியில்



10

இசைஷ!

தவழ்ந்து, யதார்த்தத்தின் நாற்காலியை எட்டிப் பிடித்தவர். அவர் கண்களில் எழில் எனப்படுவது ஏழையின் காய்ப்பேறிய கைகள்.

சுற்றும் இரவினில்
தூக்க வழிகாட்டும்
சொப்பனமே எழிலா?
குற்றமின்றி மண்ணைக்
கோதிக் கலயம்செய்
குயவனின் கை எழிலா?

காதலும் கலயம் போலத்தான். குயவனின் கைகளால் கலயம் உருவாக்கப்படுகிறது. காதலோ கண்களால் அழகாக்கப்படுகிறது. கைகள் நழுவினால் கலயம் சேதமாகும். கண்கள் நழுவினால் காதல் கீதமாகும். மண்ணைப் பிசைந்து கலயம் செய்வது இயல்பு. மண்ணைக் கோதி என்கிறார் கம்பதாசன். மண் மீது கீறல் படக் கூடாதென்று கருதியிருப்பாரோ என்னவோ?

கோதுதல் என்றதும் கூந்தல்தான் நினைவுக்கு வரும். எத்தனை எத்தனை விரல்கள், எத்தனை எத்தனைக் கூந்தலை கோதிக் கோதிக் காய்ப்பேறின? காலத்தின் கணக்குப் புத்தகத்தைப் பிரித்து வைத்தால், மனப்பாடச் சூத்திரங்களாக இருப்பது ஒரு சில கற்பனைகள்தான்.

இடையி லிலையாரி இறுமிறு மென எழா
எமது புகலிடம் இனி இலை யெனவிழா
அடைய மதுகரம் எழுவது விழுவதாம்
அளக வனிதையர் அணிகடை -
திறமினோ

இடைதொடும் கூந்தல் கொண்ட ஒருத்தியின் மதர்த்த தனத்தைக் காண்கின்ற வண்டு, அவள் இடை உடைந்து விடுமோ என அஞ்சி அமராமல் எழுந்தும் விழுந்தும், பறந்து விடுவதாக ஒரு கற்பனை. தேன் எடுக்க வந்தமரும் வண்டுகள் திரும்பி விடுகின்ற அளவுக்கு, இடை சிறுத்த பெண்களை உருவகிக்கும் ஆற்றல் கவிதைக் காரனுக்கே உண்டு. தன் கண்களை அதனுள் பொருத்தி நயத்தோடு கலிங்கத்துப்பரணியில் எழுதிக் காட்டுகிற செயங்கொண்டான், என்றென்றும் நினைவில் நிற்பவர். இன்னொரு இடத்தில் அதே கூந்தலில் செருகப்பட்ட பூவை எழுதுகிறார்.

முருகிற் சிவந்த கழுநீரும்
முதிரா இளைஞர் ஆருயிரும்
திருகிச் செருகும் குழல் மடவீர்
செம்பொற் கபாடம் திறமினோ

மணம் வீசும் மலர்களை (செங்கழுநீர்ப்பூ) மட்டுமல்ல, காதல் நிரம்பிய இளைஞனின் ஆருயிரையும் கூந்தலில் செருகிக் கொண்டனர் என்கிறார். உயிரையும் பூப் போல பறித்துக் கொள்வது, பெண்களின் விரல்களுக்குப் பிடித்தமானது. வண்டமர உடைந்துவிடும் மென்னிடையாள்; தன் காதலனின் கனத்த இதயத்தைத் தாங்க இயலுமா? இயலும் என்கிறது இலக்கியம்.


மழை பொழியும் வானம் பூமிக்கு முத்தமிடுகிறது.

மழை நின்ற பிறகும் திட்டுத் திட்டாய்த் தென்படும் ஈரங்கள் எச்சில் கறைகள். இடி

யுகபாரதி

போல் எனக்குள் நீ இறங்கி விட்டாய். மின்னல் போல் என்னிலிருந்து கவிஞன் சிந்திப்பான். கவிஞனின் ஆரம்பம் உணர்தல். உணர்தலின் உச்சமே கவிதை. உணர்த்தப் படுவதற்காகவும் சில சமயம் உருமாறலாம். கம்பதாசன் வானவில்லை வர்ணிக்கும் அழகு சிறப்பானது.

பூமியாம் காதலி
தன்னுடனே - வானம்
பொங்கி கலவிகொள்
போதினிலே





''நீங்க கடன் வாங்கி ஒரு வருஷம் ஆச்சு. இன்னும் கட்டவே இல்லையே.''

''இன்னுமா அதை வராக் கடனில் நீங்கள் சேர்க்கவில்லை?''

தேமலர் வாய்மென்ற தம் பலத்தைத் - துப்பச்

சித்திர வானவில் ஆனதடா!

இயற்கை ஏற்பாடு செய்த விருந்தில் வானமும் பூமியும் கலந்து கொண்டது. வானம் காதலன். பூமி காதலி. இரண்டு பேரும் கலவி கொள்ள, தேன்மலர் வாய் சிவக்கிறது. சிவந்த வாய் துப்பிய போது வானவில் ஆகிறது.

வானவில்லுக்கு ஏழு நிறம். எட்டாவது நிறமாய் கம்பதாசனின் கவிதை. நட்சத்திர வண்டினங்கள் நனவின் அனல் மொய்க்கும். கம்பதாசன் கவிதைகளைக் காற்று அடை காக்கும். 'பாட்டு முடியுமுன்னே' என்கிற அவரது தொகுப்பில், இதயத்தின் முடிவுறாத பாட்டோசையைக் கேட்க முடியும்.

வெண்மணலின் ஆற்றினிலே
வெள்ளம் வரும் போகும்
விண்ணிடையே வெள்ளிநிலா
விம்மிவரும் போகும்
கண் றங்கும் கங்குலிலே
கனவு வரும் போகும்
கன்னிகை என் நெஞ்சிலுற்ற
காதல் போவ துண்டோ?

நெஞ்சிலுற்ற காதல் போவதில்லை. திரும்பத் திரும்ப வரும் ஞாபகத்தில். எனக்கொரு காதலி இருந்தாள் எனச் சொல்ல தொடங்கும் ஒவ்வொரு மனிதனும், அந்தத் தீக்கங்கில் திணறிக் கொண்டிருக்கிறான். யாரோ ஒருவர் காதல் பற்றி பேசத் தொடங்கினால், அவன் காதலியின் முகம் அவனுக்குள் மலர்ந்து விடுகிறது. அந்த மலர் அவன் கூந்தலில் குடியேற வில்லை. அவன் இதயத்தில் மட்டுமே இருந்துவிட்டுப் போகிறது. காதலியின் இடையை விட, இதயம் மெலிதாக இருந்ததால் இவன் தங்குவதற்குத் தயங்குகிறான். இதயமே இல்லாத இன்னொருவன் அவளை மணம் முடித்துப் போகிறான். ஆருயிரைப் பறித்துக் கொண்டு போனவன் போனதுதான். வானவில் கனவுகள் நொறுங்க, நொறுங்க... வாலிபக் கவிதைகள் கசங்க... கசங்க... வேறு வழியறியாமல் யாராவது காதலென்றால் இவன் புலம்புகிறான். நமக்குப் புலம்பல். அவனுக்கு ஆறுதல். நமக்குக் காற்று; அவனுக்கு மூச்சு. நமக்குத் தாகம்; அவனுக்குக் கண்ணீர்.

ரகசியமாய் அழுது; ரகசியமாய்த் தவித்து ரகசியமாய் ரசித்த காதலை, சிரித்துக் கொண்டு சொல்பவர்கள் யாருமிலர். எனில், காதல் அழுகையின் குழந்தை. கம்பதாசனின் கவிதைகளோ, காதல் தெருவில் திரியும் குழந்தை. அழகும் எளிமையும் குழந்தையின் நடைவண்டி.

(தொடரும்)



''கல்யாணத்துக்கு முன்பு ஒரு பெண்ணிடம் வழிவீர்களாமே... அந்தக் கதையை என்னிடம் சொல்லவில்லையே...''

''ஓ...அதுவா...ஜொள்ளு மறந்த கதை.''

— எஸ். மோகன்

பசுவை தேசிய விலங்காக அறிவிக்க வேண்டும்!

தைப்பொங்கல் திருநாளில் பசுமடத்திற்கு கோதானம் செய்து புண்ணியம் பெறுங்கள்!

ஆன்மீக அன்பர்களுக்கு வணக்கம்! பொங்கல் திருநாளில் கோமாதா தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

இந்துக்களின் அனைத்து தெய்வங்களும் உள்ளடங்கிய "கோ" என்பது கோமாதாவாகிய "பசு" ஆகும். அது தாயைப் போன்றது. பிறந்த குழந்தைக்கு தாய்ப்பால் எவ்வளவு அவசியமோ அதற்கு நிகரான பசுவின் பால் குழந்தைப் பாதுகாப்புக்கு மிக அவசியமாகும். இத்தகைய புனிதமான காமதேனுவை - கோமாதாவை - பசுத்தாயை பராமரிப்பதும், பாதுகாப்பதும், பூஜைசெய்து வழிபடுவதும் ஒவ்வொரு இந்துவின் கடமையாகும். மேலும் பசுக்களை காப்பாற்றுவதே உண்மையான லட்சுமி பூஜை என்ற நல்லுணர்வுடனும், சமுதாய சிந்தனையுடனும் சென்னை திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோவில் அருகில் "ஸ்ரீ கோசாலா ஸேவா டிரஸ்ட்" மூலம் பசுமடம் ஒன்றை பெருமாளகரம், திருவேற்காடு, சென்னை - 77 என்ற விலாசத்தில் ஏற்படுத்தியுள்ளோம். பசுக்களின் துன்பங்களைத் தனதுபோல் உணர்ந்து அவற்றைப் போக்கவும், மத்திய, மாநில அரசின் பசு வதை சட்டத்தை மதித்தும், குடும்பநலன் கருதியும் நமக்குப் பலவழிகளில் நன்மைதரும் பசுக்களை வாங்கி நமது பசுமடத்திற்கு அனுப்பிப் பாதுகாக்க, பராமரித்து பூஜை செய்து வழிபட, கொடுப்பதன் மூலம் தங்களுக்குக் கோமாதாவின் அருளைப்பெற இது ஒரு நல்ல வாய்ப்பாகும்.

நீங்கள் தானம் செய்யும் பசுவுக்கும், கன்றுக்கும் வைதீக முறைப்படி புரோகிதர்களை வைத்து நித்தம் பூஜாதிகள் உங்கள் பெயரில் நடத்தி வைக்கப்படுகிறது. மேலும் பசுத்தொழுவத்தில் கோமாதாக்களுக்கு நவீன விஞ்ஞான முறைப்படி பராமரிப்புகள், மின்விசிறிகள், வேதபாராயண ஸ்லோகங்கள், கண்ணன் தெய்வீகப்பாடல்கள் தொடர்ந்து ஒலிக்க ஒலிநாடாக்கள் இயக்கி வைக்கப்படுகிறது. இத்தகைய பராமரிப்புகள், வழிபாடுகள் அமைந்துள்ள கோசாலாவிற்கு கோதானம் செய்து கோமாதாவின் தெய்வீக அருளைப்பெற அன்புடன் அழைக்கிறோம். பசுவை பராமரித்து, பாதுகாத்து பூஜிக்கவும், பசுக்களின் தினப்படி ஆகாரங்களுக்கும், தீவனங்களுக்கும் தினம், வாரம், மாதம், வருடம் என முறைப்படியாகும் செலவுகளுக்கு உதவியளித்து கோமாதாவின் அருளைப்பெறுவதுடன் வாழ்வில் உயர்வும் பெற்றிடலாம்.


பசுத்தாயின் உடலில் மும்மூர்த்திகளும், 33 கோடி தேவர்களும், அனைத்துப் புண்ணிய தீர்த்தங்களும் குடிகொண்டுள்ளன. பசுவை வலம் வந்தால் எல்லா தெய்வங்களை வணங்கிய பலனும், எல்லாப் புண்ணிய நதிகளில் நீராடிய பலனும் தங்களுக்குக் கிடைக்கும் என்று வேதசாஸ்திரங்கள் சொல்கின்றன. பசுச்செல்வத்தின் உடல் புண்ணியத்தின் விளைநிலம். இறந்த நமது முன்னோர்களுக்கு உணவு அளிக்க விரும்பினால், பசுவிற்கு கொடுத்தால் போதும். அது நமது முன்னோர்களுக்குப் போய்விடும். பசுவின் சாணம் கிருமிநாசினியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பஞ்சகவ்யம் எனப்படும் பால், தயிர், நெய், கோமியம், சாணம் இவைகளில் இருந்து தயாரிக்கப்படும் மருந்து தீராத வியாதியாகிய கேன்சரைக் குணப்படுத்துகிறது. இப்படி நீதிப்படி பார்த்தாலும், விஞ்ஞானப்படி பார்த்தாலும் பல வழிகளில் நமக்கு நன்மை தரக்கூடிய பசுத்தாயைப் பாதுகாத்து வளர்க்க வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும்." இறைவனுக்கு அபிஷேகமாகும் பாலையும், இறைவனின் திருமேனியை அலங்கரிக்கும் விபூதியையும், வேள்விகளுக்கான வரட்டியையும், நெய்யையும், பறை, பேரிகை முழங்க தன் தோலையும் வழங்குவது கோமாதாதான் என்பதை தாங்கள் நன்கு அறிவீர்கள்.

பசுவைப் பாதுகாத்து பராமரிக்க தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

* ரூ.500/- அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
* ரூ.1000/- அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
* ஒரு பசுவை பராமரிக்க ஆண்டிற்கு ரூ.5400/- தேவைப்படுகிறது. இந்த நன்கொடையை வழங்கும் ஆன்மீக அன்பர்களுக்கு பசுவும் கன்றும் சேர்ந்த விக்ரகம் அனுப்பி வைக்கப்படும். ஒரு பசுவை ஒரு ஆண்டிற்கு பராமரிப்பதுடன், தங்களை "Ghomadha Seva Scheme" "பசு சேவை திட்டம்" என்ற புனித அமைப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் "ஆன்மீகம்" மாத இதழ் 10 ஆண்டுகளுக்கு தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

ஆன்மீக அன்பர்கள் தங்களுடைய திருமண நாள், பிறந்த நாள், பிள்ளைகளின் பிறந்த நாள், பண்டிகை நாட்கள், விசேஷ நாட்கள், முன்னோர்கள் திதி நாட்கள் என தங்களுக்கு உகந்த நாட்களில் பசுவை தானமாகத் தரலாம். மேலும் இதுபோன்ற முக்கிய நாட்களில் தாங்கள் "கோ பூஜை" செய்ய விரும்பினால் அந்த நாட்களில் நமது "ஸ்ரீ கோசாலா ஸேவா டிரஸ்ட்" என்ற அமைப்பின் மூலம் சென்னை திருவேற்காட்டில் நிர்வகிக்கப்படும் "பசுமடத்திற்கு" குடும்பத்துடன் நேரில் வரலாம். குழந்தை இல்லாதவர்கள் 1 ஆண்டு பசு கன்று வளர்த்து சேவை செய்ய குறை நீங்கும். தீராத துன்பங்கள் குடும்ப பீடை உடையவர்கள் வெள்ளிக்கிழமை விரதமேற்று பூஜை செய்ய குடும்ப சுபிட்சம் ஏற்படும். திருமணம் ஆனவுடன் பசு ஒன்றை வளர்க்க தொடங்கிட மணமக்கள் மங்கள வாழ்வு பெறுவார்கள். பலவிதமான சாபத்தால் ஏற்பட்ட குறை நீங்க கோவில்கள், மடங்கள், அந்தணர்களுக்கு பசுதானம் செய்ய சாபம் விலகும். 108 பசுக்களை ஒரே நேரத்தில் தரிசித்தால் நூறு ஆண்டுகள் இறைவனை வழிபட்ட பயன் ஒரு நாளில் உண்டாகும். தொழில் விருத்தி, வியாபார விருத்தி, திருமணத்தடை, புத்திர பாக்யம், குடும்ப நலன் ஏற்பட கோமாதா பூஜை செய்ய குறை நீங்கி சுகவாழ்வு ஏற்படும்.

இறைச்சிக்காகபசு கொல்லப்படுவதை தடுக்கவும், குடும்பநலனுக்காக பசுக்களை காக்கவும், கோபூஜை செய்யவும், ஆன்மீக அன்பர்கள் பசுவைத் தானமாக கொடுக்கலாம் அல்லது பசுக்களை பாதுகாத்து பராமரிக்க தங்களால் இயன்ற அளவு நன்கொடையை Cheque/D.D/M.O மூலமாக Shri Ghosala Seva Trust என்ற பெயருக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.



பசுமடம்

பசுக்கள் பாதுகாப்பு இல்லம்

(ஸ்ரீ கோசாலா ஸேவா டிரஸ்ட் மூலம் பராமரித்து பாதுகாக்கப்படுகிறது)

பெருமாளகரம், திருவேற்காடு (P.O), சென்னை - 600 077.

✆ : 4959302 Fax: 7102308 E-mail:sivasiva@vsnl.net

மாட்டுப்பொங்கல் திருநாளில் பசு (கோமாதா) பூஜை செய்வது இந்துக்களின் கடமையாகும்!

ஆஹா ஆராய்ச்சி!

அஞ்சு போகம்

முப்போகம் என்பது மறைந்து இரண்டு போகமாவது விளைச்சல் இருந்தால் பரவாயில்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் விவசாயிகளின் வயிற்றில் பாலென்ன, ஐஸ்க்ரீமே வார்க்கும்படியாக நடந்திருக்கிறது ஓர் ஆராய்ச்சி. இந்த ஆராய்ச்சியில் பங்களித்த சிறுவன் ஓர் இந்தியன் என்பது தான் முக்கியம். பெயர் - ரோஷன் டி. பிரபு. வயது 17.

அமெரிக்காவில் நியூஜெர்சி மாநிலத்தில் ஜெர்சி நகரில் உள்ள 'டிக்கின்ஸன் பள்ளி' யில் படிக்கும் இவன், சக மாணவி, 'ஜூலியட் ஜிரார்ட்'வுடன் சேர்ந்து செய்த ஆராய்ச்சிதான், நம்பிக்கையை உண்டாக்கியுள்ளது.

அமெரிக்காவில் பள்ளி மாணவ, மாணவியரிடையே கணிதம், அறிவியல், தொழில் நுட்பம் போன்றவை குறித்து ஆர்வத்தை அதிகரிக்கவும், இருக்கும் ஆர்வத்தை அங்கீகரிக்கவும் போட்டி நடத்துகிறார்கள். இந்தப் போட்டியில் 2002- 03ம் ஆண்டுக்கு முதல் பரிசைப் பெற்றது இவர்கள் இருவரும் செய்த ஆராய்ச்சி. 'சைமன்ஸ் ஃபவுண்டேஷன்' என்ற அமைப்பு வழங்கும் 'வெஸ்டிங்ஹவுஸ் நேஷனல் ஸ்காலர்ஷிப்'பான ஒரு லட்சம் அமெரிக்க டாலரை (இந்திய ரூபாயில், இன்றைய மதிப்பு 48 லட்சத்திற்கும் மேல்) இந்த இருவரும் பங்கிட்டுக் கொள்கிறார்கள், இந்த ஆராய்ச்சிக்காக!


அப்படி என்னதான் ஆராய்ச்சி?

'காவிரி டெல்டாவில் பாதி விளைந்த நெல்லுக்கு மீதித் தண்ணீர் இல்லை; இதனால் பயிரில் பச்சையும் இல்லை' என்ற புலம்பலைத் தவிர்க்கலாம். அதாவது, குறைந்த தண்ணீரிலேயே சீக்கிரம் விளையச் செய்து, அறுவடையை முடித்து விட உதவும் ஆராய்ச்சி! ஆராய்ச்சி செய்த அந்த அம்மணியின் வார்த்தைகளிலேயே சொல்வதானால் - ''பயாலஜி, ஜெனிடிக்ஸ் போன்றவற்றில் எனக்கு ஆர்வம் அதிகம். அதனால் நெற்பயிர் முதிர்ச்சியடைந்து, அது பூக்கும் பருவத்தை எட்டுவதற்கு நிர்ணயிக்கும் ஜீன்கள் எங்கே ஒளிந்திருக்கின்றன என்று கண்டுபிடித்தேன்: இதுதான் என்னுடைய பங்கு. அதை அடையாளம் 'காட்டியதும், ரோஷனின் பங்கு தொடங்குகிறது. கம்ப்யூட்டர், அது தொடர்பான விஷயங்களில் ஆர்வமுள்ள அவன், நான் காட்டிய ஜீன்களை கம்ப்யூட்டர் உதவியுடன் வளைத்துப் பிடித்து, அந்தத் தாவரம் பூக்கும் காலத்தைக் கட்டுப்படுத்த முடியுமா? என்று கண்டுபிடித்துள்ளான். இதுதான் எங்கள் ஆராய்ச்சி!''

''இதனால் இப்போது என்ன நடக்கும்?''

''பெரிதாக என்ன நடக்கும்! நெற்பயிர் முதிர்ந்து பூப் பூக்கும் காலத்தை, அதாவது அது மகரந்த சேர்க்கை செய்து கொள்ளத் தகுதியாகும் காலத்தைக் குறைக்கலாம். இதனால் சீக்கிரமே நெற்பயிர் முதிர்ந்து, நெல்லும் விளைந்து, அறுவடைக்கு தயாராகி விடும். சுருக்கமாகச் சொன்னால், நெற்பயிரின் வாழ்நாளைக் குறைத்துவிட முடியும்.

'பயிர் செய்ய வருஷம் முழுக்கத் தண்ணீர் எங்கே கிடைக்கிறது?' என்ற கேள்வியிருந்தால், தண்ணீர் கிடைக்கும் காலத்தில், தேவையான அளவு அறுவடையைப் பார்த்துவிடலாம். கோடைப் பஞ்சத்தில் நெற்பயிர் வாடாது; விவசாயியின் பாக்







நெல் விளையும்!


கெட்டில் ஒட்டை விழாது. உணவு பற்றாக்குறையையும் தவிர்க்கலாம். பட்டினிச் சாவுகளைத் தடுக்கலாம்'' என்கிறார் ஜூலியட்.

அடடா! ரொம்ப வித்தியாசமான இந்த ஆராய்ச்சி, மாணவர்களான இவர்கள் கையில் எப்படி வந்தது?

''கோடை விடுமுறையின் போது சின்ன சின்ன ஆராய்ச்சிகளைச் செய்யும் வாய்ப்புகள் உள்ளதை, எங்கள் பள்ளி ஆசிரியர் மைக்கல் ஜே கார்க்கரன் எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அப்படியான ஒரு முயற்சியாக, 'நாசா ஷார்ப் ப்ளஸ்' என்ற கார்னல் பல்கலைக் கழகத்தில் நடந்த கோடை ஆராய்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டோம். அந்தப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய டாக்டர் மைக்கேல் தாம்ஸன் என்பவரிடம், நாங்கள் ஆலோசனை பெறுவது என்று முடிவானது. அவருடன் பல்வேறு விஷயங்களைப் பற்றியும் பேசினோம். என் பார்ட்னர் ஜிரார்ட், அதற்கு முன்பே நான்கு வருடங்களாக எனக்குத் தெரிந்தவர்; பழகியவர். அவருடன் சேர்ந்து, இதற்கு முன்பே சில ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிறேன். அதே போல இப்போதும் சேர்ந்து விவாதித்து, கடைசியாக, இந்தத் தலைப்பை முடிவு செய்தோம். இதற்கு மைக்கேல் தாம்ஸன் நிறையவே உதவினார். அவர் பல நுட்பமான விஷயங்களை, ரொம்பவே எளிமையாக எடுத்துச் சொல்லி, புரிய வைத்தார். அதன் பிறகு நாங்கள் இருவரும் சேர்ந்து கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. இறுதியில் இப்போதைய முடிவை எட்டினோம். இப்போது, கார்னல் பல்கலைக் கழகத்தின் ஒரு திட்டமாக, 'சர்வதேச நெல் பயிர் மரபணு ஆய்வுத் திட்டம்' என்று இந்த ஆராய்ச்சி தொடர்கிறது. அது நிறைவு பெறும்போது கிடைக்கும் நெற்பயிருக்கு, கார்னல் பல்கலைக் கழகம் காப்புரிமை பெற்றுக் கொள்ளும்'' என்கிறார் ரோஷன். இந்த ரோஷன் கர்நாடக மாநிலத்தில் பிறந்தவர். ஆக மொத்தத்தில், ''இந்த ஆராய்ச்சியால் உலகின் பசி நோய் தீர்ந்தால் ரொம்ப சந்தோஷப்படுவோம்'' என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். நமக்கும் சந்தோஷம்தானே!

- ரா. சந்திரன்






விவேக் காமெடிக்குப் பாராட்டு



இன்னும் எத்தனை நாளைக்கு எங்களை வைத்து படம் பண்ணுவீங்க... விட்டு விடுங்க... கதறுகிறார் போட்டை ஜெனி

ஸ்ரீ






துள்ளுவதோ இளமை

தோ கமெண்ட்!

பதினைந்து வருடங்களுக்கு முன் வந்திருந்தால் நூறு நாள்தான். (ஒரு டைம் மிஷின் பயணம்)



சமஸ்தானம்

'மதன்'டுன்!

'படம் வெளியாவதற்கு முன்பு, ரசிகர்களின் எதிர்பார்ப்பு' என்று ஒரே கோடு. அதன் பக்கத்தில், 'படம் வெளியான பிறகு, ரசிகர்களின் மனநிலை' என்று ஒரு சிறிய கோடு. இரண்டையும் இணைத்து, அடுத்த சில நொடிகளில் அசத்தல் கார்ட்டூன். விஜய் டி.வி.யின் திரைப்பட விமர்சன நிகழ்ச்சியில், மதன் இப்படிபோடும் கார்ட்டூன்களுக்கு ஏக வரவேற்பு.

"பாராட்டுக்கள் ஏராளமாகக் கிடைத்தாலும், அவ்வப்போது, சில கண்டனங்களும், மிரட்டல்களும்கூட வருவதுண்டு" என்கிறார் மதன்.

நிகழ்ச்சியில் மதன் வரைந்த சில கார்ட்டூன்களும், அவரது விமர்சன வரிகளும் இங்கே!

தொகுப்பு : மௌலி

படம்: யோகா



தென்காசி பட்டணம்

நிரந்தரமின்மைதான் மனித வாழ்க்கையின் அடிநாதம். அந்த நிரந்தமின்மையைப் புரிந்து கொள்கிறபோது, வாழ்க்கையில் பல முரட்டுத் தனங்கள் மனம் விட்டு நகர்ந்து விடுகின்றன.

ஜார்ஜ் டவுனும் அதைச் சுற்றியுள்ள பகுதியும்தான் தன்னுடைய வாழ்க்கை என்று நினைத்துக் கொண்டிருந்தவர், அதை உதறி, அங்குள்ள மனிதர்களை உதறி, அந்த வாசனையை உதறி, வைக்கோலும், புல்லும் நிறைந்த கிராமம் போலும் உள்ள தாம்பரம் பக்கம் வந்து குடியேற, ராதாகிருஷ்ணன் மனம் இங்கும் வேர்விட்டது. வேர்விட்டு நீர் உறிஞ்ச இங்கேயும் இலைகள் துளிர்த்தன.

"உங்க பில்டிங் ஓனர் முதலியார் சொன்னாரு, நீங்க ரொம்ப நல்லா ஜாதகம் பார்க்கறீங்களாமே. இது என் பொண்ணு ஜாதகம். வயசு முப்பத்தொண்ணு. கல்யாணம் ஆகலை. எத்தனை விதமா முயற்சி பண்ணாலும் தட்டிப்போறது. நீங்க ஜாதகம் பார்த்து ஒரு நல்ல வாக்கு சொல்லணும்."

பவ்யமாக ஒரு மத்தியதர வர்க்கத்து மனிதர் கைகூப்பி நின்றார்.

ஜாதகத்தைப் பார்த்த இரண்டாவது நிமிடம் ராதாகிருஷ்ணன் பேசினார். "குரு பலன் வந்துடுத்து. வடக்க ரொம்ப தூரத்து லேர்ந்து மாப்பிள்ளை வருவான். உயரமா இருப்பான். நல்ல களையா இருப்பான். நம்ம வீட்டுக் கல்யாணமா அப்படின்னு திகைச்சு போற அளவுக்கு ரொம்ப கிராண்டா கல்யாணம் நடக்கும். சௌக்கியமா இருப்பா. பொண்ணுக்கு நட்சத்திரம் திருவாதிரைங் கறதுனால, சிவபூஜை பண்றதுக்குக் கத்துக் கொடுங்கோ. யார் கத்துக் கொடுப்பாங்கன்னு பயப்படவேண்டாம். இதோ, இந்தக் கோயில் சிவனை தினமும் மூணு தடவை வலம் வந்து, உன்னை பூஜை பண்ண சொல்லிக்கொடுன்னு கேட்டால் போதும். யாராவது வந்து, எங்கிருந்தாவது வந்து சொல்லித்தருவா."

அப்படியே நெல்முனையளவும் பிசகாமல் நடந்தது.

ஜாதகம் கேட்டவருக்குக் காசு கொடுக்க முடியவில்லை. நூற்றியோரு ரூபாய் காசு கொடுத்தாலும் அது நிறைவு என்று தோன்றவில்லை. தனக்குத் தெரிந்த அத்தனை பேரிடமும் ராதாகிருஷ்ணனுடைய புகழ் பாடினார்.

ஜாதகம் என்பது சாதாரண கணிதம் – இந்தக் கிரகம் இங்கிருந்தால் இந்தப் பலன். இந்தப் பார்வை இங்கு பட்டால், இந்தப் பார்வைக்கு இப்படி அர்த்தம் என்று சில விதிமுறைகள் இருந்தன. ஒரு இருநூற்று சொச்ச விதிமுறைகளை மனனம் செய்தால், ஜாதகம் எவர் வேண்டுமானாலும் பார்த்து விடலாம். ஆனால், அதைத் தாண்டி அந்த விதிமுறைகள் சட்டென்று ஞாபகம் வரவும், உள்ளிருக்கின்ற ஒரு குரலை உற்றுக் கேட்கவும், ஒரு மனிதருக்கு ஞான பலம் தேவைப்படுகிறது.

ராதாகிருஷ்ணருடைய மந்திர ஜபங்கள் அந்த விதமான வாக்கு பலத்தை அவருக்குக் கொடுத்தன. ஒரு நாள் காலை மின்வண்டி பிடித்துப்போய், சங்கரய்யரின் எதிரே உட்கார்ந்து தன் சௌக்கியத்தைச் சொல்லி தன்னுடைய அனுபவங்களைச் சொல்கிற போது சங்கரய்யர் முகம் மலர்ந்தார்.

"வாக்கு பலிதம்தான் முதல் விசேஷம். இன்னும் இரண்டு மந்திரங்கள் சொல்லித் தருகிறேன். இதைச் சொல்லுங்



மனம் உருகுதே

கள். மனதில் எதிர்காலம் ஸ்புரிக்க ஆரம்பிக்கும். தாம்பரத்தில் அருகம்புல் கிடைக்குமா? அருகம்புல் பறித்து வினாயகர் பூஜையை ஆரம்பியுங்கள். மறுபடியும் சொல்கிறேன் ராதாகிருஷ்ணன், இவையெல்லாம் சடங்கு. எதைச் செய்கிறபோது மனம் கூர்மையாக ஈடுபடுகிறதோ, அதுவெல்லாம் பூஜை. காமமோ, காதலோ மனிதனுக்கு ஏன் சந்தோஷமாக இருக்கிறது? ஏனெனில் மனம் அதில் கூர்மையாக ஈடுபடுகிறது. அதனால் சந்தோஷம் ஏற்படுகிறது. உண்மையாக இருந்தால், அடுத்தது என்ன செய்ய வேண்டுமென்பது மிகத் தெளிவாகத் தெரியும். கடவுள் வழி நடத்துவார். கடவுள் என்பது வேறு எதுவுமில்லை ராதாகிருஷ்ணன். தூய்மையான நம் மனம்தான் கடவுள்.

ஜாதகம் பார்த்துச் சொல்வது தவறில்லை. ஆனால், இதையே வாழ்க்கையாக வைத்துக் கொள்ள வேண்டாம். மந்திர ஜபங்கள், நான் சொல்லிக் கொடுத்ததை மற்றவர்களுக்குச் சொல்லித்தர வேண்டாம். உன்னுள் நீ நிலைக்கும்வரை உனக்கு போதிக்க அதிகாரமில்லை. உங்களை உள்ளுக்குள்ளே சிரும்



33

சிறப்புமாக வளர்த்துக் கொள்ளுங்கள். பிறகு நீங்கள் என்ன செய்தாலும் சரியாகவே இருக்கும்."

வாழ்க்கை அப்படித்தான் ஓடிற்று.

குழந்தைகள் அற்புதமாகப் படித்தார்கள். இரவு ஆறு மணிக்கு வீட்டின் எல்லா ஜன்னல் கதவுகளையும் பூட்டி, கொசுவர்த்தி ஏற்றிவிட வேண்டும். இல்லையெனில் உடம்பை கொசுக்கள் ரணப்படுத்திவிடும். எட்டு எட்டே காலுக்கு மெல்லத் திறந்து கொள்ளலாம். அப்போதும் கூட மெல்லிய நைலான் வலையை ஜன்னல்களிலெல்லாம் அடித்து வைத்துவிட வேண்டும்.

இரவு நன்றாக காற்று வந்தது. தண்ணீர் சுத்தமாக இருந்தது.

பெண் குழந்தை சுபத்ரா எட்டாவது தேறினாள். எல்லாப் பாடங்களிலும் முதலாவதாக வந்தாள். கோடை விடுமுறையின் போது பாட்டு வகுப்பு, கம்ப்யூட்டர் வகுப்பு என்று இருந்ததால், டிசம்பரின்போது அவர்கள் தென்னிந்தியாவிலுள்ள திருத்தலங்களுக்குப் பயணப்பட்டார்கள். ஒரு ஜாதகம் பார்க்க நூறு ரூபாய் என்று வாங்கினார். எளிதாக மூவாயிரம் ரூபாய் அவரால் சம்பாதிக்க முடிந்தது.

"இரண்டாயிரம் ரூபாயில் மளிகை சாமான் வாங்க முடியாது?"

"போதுமே. எதேஷ்டம்."

ரேவதி அவருக்குப் பதில் சொன்னாள்.

பையன் ப்ளஸ் டூவில் நல்ல மார்க்குகள் எடுத்தான். இன்ஜினீயரிங் சேரவேண்டும் என்று ஆசைப்பட்டான். அந்த முறை கவுன்சிலிங் விரைவாக இருந்தது. நல்ல மார்க் வாங்கினால் போதும், நிச்சயம் இடம் கிடைக்கும் என்று எல்லோருக்கும் சொல்லப்பட்டது.

தாம்பரம் தாண்டியுள்ள, தெற்கே போகும் சாலையிலுள்ள, பெரிய இன்ஜினீயரிங் கல்லூரியில் அவனுக்கு இடம் கிடைத்தது. அது தனியார் கல்லூரி. ஆனால், அரசாங்கக் கோட்டா. அதனால் கட்டணம் குறைவாக இருந்தது. தாம்பரத்திலிருந்தே ஆறேழு மாணவர்கள், அப்படி தெற்குப் பக்கம் போய் இன்ஜினீயரிங் காலேஜில் சேர்ந்திருப்பதை பின்னை தெரிந்து கொண்டான். அவனைத் தேடி பையன்கள் வர ஆரம்பித்தார்கள். அந்த அடுக்குமாடி வீட்டு வாசலில் உட்கார்ந்து படித்ததைப் பற்றியும், படிக்கப்போவது பற்றியும் பேசினார்கள். இதையெல்லாம் செவிமடுத்துக் கொண்டிருந்த முதலியார், மேல்மாடியில் தட்டுப் பந்தல் போட்டுக் கொடுத்தார்.

"சரிவுப்பந்தல் போட்டுக் கொடுத்துடுவேன். ஆனா, உன்ன துணிமணி வச்சுக்கத் தோணும். அது வேணாம். வந்து உட்கார்ந்து பேச, கொஞ்ச நேரம் கண்மூடி படுக்க, இந்த இடத்தை வச்சுக்கோங்க. வாசல்ல நின்னு பேசறதுக்குப் பதிலா இங்க பேசலாம்" என்று பெருந்தன்மையாக இடம் கொடுக்க, ராதாகிருஷ்ணன் நெகிழ்ந்து போனார்.

"நான் ஏதாவது வாடகை கொடுத்துடட்டுமா?"

"வேணாம். அப்போ உரிமையாயிடும். நீங்க எத்தனை வாட்டி ஜாதகம் பார்த்து சொல்லியிருக்கீங்க. ஒத்த பைசா வாங்கலையே. நான் வாங்கினா நல்லாயிருக்குமா."

படிப்பில் ஆர்வமுள்ள, கிரிக்கெட்டில் ஈடுபாடுள்ள, அந்தப் பையன்கள் அப்படியொரு இடம் கிடைத்ததும் உட்கார்ந்து கடுமையாகப் படித்தார்கள்.

இன்ஜினீயரிங் கல்லூரியில் தலைமை மாணவி ஒருத்தி, பரத நாட்டியத்தில் பெரிய தாரகை. அதே சமயம் படிப்பையும் விடவில்லை. அவளைப் பாராட்ட, இந்த இளைஞர்கள் போக, என்னிடம் பரதம் கற்றுக் கொள்ளுங்களேன், என்று அவள் விளையாட்டாகச் சொல்ல, சரி என்று இவர்களும் சந்தோஷமாக தலையசைக்க, அவர்களுக்குப் பதினைந்தே நாட்கள் நடனப்பயிற்சி நடந்தது. பதினாறாம் நாள் கல்லூரிக் கலை விழாவில் மாணவர்கள் பரதநாட்டியம் ஆடுகிறார்கள் என்றதும், கேலியும், கூச்சலும் உரத்துக் கிளம்பின. ஆனால், மேடையில் கட்டுமஸ்தாக, ஒல்லியாக, அகலமார்போடு இடுப்பில் பட்டு வேட்டியோடு, கழுத்தில் ஜொலிக்கின்ற நகையோடு, நெற்றியில் குங்குமத்தோடு, புன்சிரிப்போடு பத்து வாலிபர்கள் நிற்கவும், சட்டென்று அமைதியாயிற்று.

நிதானமாக ஆரம்பித்து மிகுந்த துரிதகதியில் நாட்டியம் முடிய, மாணவர்கள் எழுந்து நின்று கைதட்டினார்கள். மாணவிகள் பக்கமிருந்து மிகப்பெரிய ஆதரவு வந்தது. தலைமையேற்க வந்த பெண்கள் கல்லூரி முதல்வர், எழுந்து நின்று கைதட்டினார்.

"கனவு காணுங்கள் வெற்றி நிச்சயம்னு அப்துல்கலாம் சொன்னதை நம்பி, இருந்த வேலையும் போச்சு!"

"முட்டாள்! ஆபீஸில் தூங்கியா அவரு கனவு காணச் சொன்னார்?"

— உ. ராஜாஜி

அவர்களுக்குச் சுழல் கோப்பையும், தனித்த மெடல்களும் கிடைத்தன. பாராட்டு மழையில் அந்த இளைஞர்கள் நனைந்தார்கள். ராதாகிருஷ்ணனின் மகன் ராஜாராமன் மிகுந்த சந்தோஷமடைந்தான்.

"பரதநாட்டியம் என்னுடைய பொழுது போக்கல்ல. என் ஆர்வமல்ல. எதையும் என்னால் செய்ய முடியும் என்று நிரூபிக்கத்தான், நான் பதினைந்து நாட்கள் பயிற்சி எடுத்துக் கொண்டேன். திறம்பட ஆடினேன். நீங்கள் பாராட்டினீர்கள். என்னுடைய இடம், என் வேலை இன்ஜினீயரிங்" என்று மேடையில் ஏறிப் பேச, மறுபடியும் கூட்டம் கைதட்டியது.

இன்ஜினீயரிங் முடித்துவிட்டு பையன் வெளியே வரும்போது, பெண் ப்ளஸ் டூவுக்குள் நுழைந்தாள். அண்ணன் வழிகாட்ட, எப்படிப் படிப்பது என்று திட்டம் போட்டுக் கொடுக்க அவளும் தன் புத்திசாலித்தனத்தைக் கொடி பறக்க விட்டாள். நிறைய மார்க்குகள் வாங்கினாள். டாக்டருக்குப் படி, டாக்டருக்குப் படி... அண்ணன் அவசரப்படுத்தினான். ஆனால், அவள் மறுத்து விட்டாள். பௌதிகம் எடுத்துக் கொண்டாள். அவள் கல்லூரியும் தாம்பரத்திலேயே அமைந்தது. ராதாகிருஷ்ணன் போகாமலேயே அவளுக்கு சீட்டு கிடைத்தது.

எங்கேயோ போய் பரீட்சை எழுதி வந்து ஆறாயிரம் ரூபாய் உதவித் தொகை வாங்கி வந்தான். ஆயிரம் ஆயிரமாக, ஒரு மாதம் விட்டு ஒரு மாதம் கிடைக்குமென்று அவர்கள் சொன்னார்கள். அப்படியே அனுப்பி வந்தார்கள்.

இன்ஜினீயரிங் கல்லூரியில் முதன்மையாகத் தேறிய மாணவர்களைப் பல கம்பெனிகள் போட்டி போட்டு வேலைக்கு அழைத்தன.

மகாராஷ்டிர மாநிலம் தானேயில் ஒரு உருக்காலையில் அவனுக்கு வேலை கிடைத்தது.

ராதாகிருஷ்ணன் தன்னைவிட உயரமாக பிள்ளை வளர்ந்திருப்பதைப் பார்த்து



சந்தோஷமடைந்தார். அதே நேரத்தில் ரேவதி அவனைக் கட்டிக் கொண்டு அழுதாள். விடை கொடுத்தாள்.

முதல் சம்பளத்திலிருந்து ஆயிரத்தோரு ரூபாய் அனுப்பியபோது கணவன், மனைவி இரண்டு பேரும் குதூகலித்தார்கள். தீபாவளிக்கு அவன் நிறையப் புடைவைகள் வாங்கி வந்தபோது இன்னும் சந்தோஷப்பட்டார்கள்.

"டேய்... உன் தங்கை கல்யாணம் இருக்குடா. ஞாபகம் வச்சுக்கோ. கல்யாணம் வரைக்கும் நான் சமாளிச்சுடுவேன். அதுக்கப்புறம் செலவு இருக்கோன்னோ. நீதான் கொஞ்சம் பார்த்துக்கணும்."

ராதாகிருஷ்ணன் எச்சரித்தார்.

அவள் கல்யாணத்துச் செலவுகளையே தான் ஏற்றுக் கொள்ளும்படியான நிலைக்கு வந்துவிடுவேன் என்று உறுதி கூறினான்.

அடுத்த வருடம் அவன் பரோடாவுக்கு வேறு வேலைக்கு மாறினான்.

அது மிகப்பெரிய இன்ஜினீயரிங் கம்பெனி. திட்டமிடுதல்தான் மிக முக்கியம். ஏ.சி. அறையில் உட்கார்ந்து வரைபடங்களைப் பார்த்து, பொருட்கள் வாங்குவதையும், அதற்கான விலையையும் நிர்ணயித்து விற்பனையைப் பற்றி தெளிவாக கம்பெனிக்கு எடுத்துரைக்கும் வேலை.

"பினானிங் டிபார்ட்மென்ட்ல வேலை கிடைக்கறது கஷ்டம். உள்ள புகுந்து வேலை கத்துனுட்டோம்னா, பல்வேறு இடங்கள் லேர்ந்து நமக்கு அழைப்பு வரும்."

அவன் எதிர்காலம் பற்றி அவன் தெளிவாக இருப்பதும், துணிச்சலாக இருப்பதும், திறமையாகச் செயல்படுவதும் அவன் விளக்கிச் சொல்ல சொல்ல, அவர் ஆச்சரியத்தில் ஆழ்ந்தார்.

"நீ ரொம்ப சோம்பலான பையன்னு நான் நினைச்சுண்டிருந்தேன். போடு போடுன்னு போடறடா. சந்தோஷமா இருக்கு."

"எனக்கே என்னைப்பத்தி பயம் இருந்ததுப்பா. ஆனால், நீ ஆத்துல மந்திரஜபம் பண்ண ஆரம்பிச்சபாரு அப்போ, ப்ளஸ் டூல பெரிய மாற்றம் ஏற்பட்டது. உண்மையா படிக்கறது என்னன்னு அப்போதான் தெரிஞ்சுண்டேன். சங்கரய்யர் நம்ம வீட்டுல எல்லாரையும் என்னமோ பண்ணிட்டார்ப்பா. அவரைப்போய்ப் பார்த்துட்டு வரலாம். வரியா."

வாடகைக்கார் ஏற்பாடு பண்ணிக் கொண்டு அந்தக் குடும்பம் சங்கரய்யரைப்

பார்க்கப்போயிற்று.

சங்கரய்யர் சற்றுத் தளர்ந்து போயிருந்தார். கண்ணுக்குக் கீழ் வளையங்கள் இருந்தன. தலைமுடி இன்னும் தும்பைப் பூவாய் நரைத்துப் போயிருந்தது. உடம்பில் சதைத் தொய்வு இருந்தது.

ஆனால், இவர்களைப் பார்த்ததும் மிகப் பெரிய சந்தோஷம் முகத்தில் வெளிப்பட்டது.

ராஜாராமனை அருகே உட்கார வைத்து அவன் தலையைத் தடவி அவனை உற்றுப் பார்த்தார்.

"இப்போ வேலை செய்யற விஷயம் ரொம்ப பிடிச்சருக்கோ உனக்கு" என்று கேட்டார்.

ஆமாம் என்று தலையசைத்தான்.

"அதுலயே இரு. கிழக்க மேற்க ரெண்டு இடத்துக்கு கூப்பிடுவான். கிழக்கபோ — ஜப்பானுக்குப் போ. இந்தோனேஷியா, மலேசியா, சிங்கப்பூர் அந்த மாதிரி போ. அங்க இருக்கறவாளுடைய வேகமும், உன் வேகமும் சரியா வரும். உனக்கு ஆட்டம் பாட்டம் ஜாஸ்தி பிடிக்காது. இந்த வேலையை முடிச்சுட்டு, அடுத்த வேலைக்குப் போறதுதான் உனக்கு சந்தோஷம் இல்லையா? இந்த வேலையை முடிச்சுட்டு இன்னொரு வேலை பண்றதுதான் ஓய்வு இல்லையா? அப்படியே இரு. கடுமையா உழைக்கறதுக்குன்னு இந்த உலகத்துல சிலபேர் பிறந்திருக்கா. அதுல நீயும் ஒண்ணு." அவனை ஆசிர்வதித்தார்.

"ராதாகிருஷ்ணன் இந்த மந்திரஜபம் தெரியுமோ!" ரேவதியையும், ராதாகிருஷ்ணனையும் உட்கார வைத்து சங்கரய்யர் மேலும் இரண்டு மூன்று மந்திர ஜபங்கள் சொல்லிக் கொடுத்தார்.

"ஜாதகம் பார்க்காமலேயே, ஆள் உள்ளே நுழைவதை உற்றுப் பார்க்கும் பொழுதே, சில விஷயங்கள் தோன்றும் ராதாகிருஷ்ணன். அதற்கான மந்திரங்கள் இவை. தொடர்ந்து எல்லா மந்திரங்களையும் செய்து வாருங்கள். பிறகு பூஜை விஷயங்களையும் நான் சொல்லித்தருகிறேன்."

சங்கரய்யர், ராதாகிருஷ்ணன் கிளம்பிப் போகும்போது, தான் வைத்துக் கொண்டிருந்த மான் தோலைச் சுருட்டி ராதாகிருஷ்ணன் கைகளில் போட்டார்.

"உங்க ஆசனம். எனக்கு என்னத்துக்கு கொடுக்கறேள்?"

"காரணமில்லாமல் சங்கரய்யர் எதுவும் செய்ய மாட்டான். உங்ககிட்டயே இருக்கட்டும். போட்டுண்டு உட்கார்ந்து ஜபம் பண்ணுங்கோ. இந்த மான் தோல் எனக்கு என் குருநாதர் கொடுத்தது. தடவித் தடவிக் கொடுத்தது."

"இவ்வளோ பெரிய அனுக்கிரகத்திற்கு எனக்குத் தகுதி இருக்கா?"

ராதாகிருஷ்ணன் குரல் தழுதழுக்கப் பேசினார்.

"என்ன சொல்ல வரீர். உம்ம தகுதி என்னன்னு எனக்கு எடைபோடத் தெரியலைங்கறீரா?"

சங்கரய்யர் உறுத்துப்பார்த்துக் கேட்க, ராதாகிருஷ்ணனுக்கு மெல்லியதாய்ச் சிரிப்பு வந்தது.

(தொடரும்)

அடையாளம்!

நாற்பத்து நான்கு நிமிடமும், பதினைந்து நொடிகளும் திரையில் விரிகிறது இந்தக் குறும்படம். பன்னிரண்டாம் வகுப்பு இறுதித் தேர்வுக்குப் படித்துக் கொண்டிருக்கும் ஒரு நடுத்தர வகுப்பு மாணவனின் வீட்டிற்குள் நுழைந்து விட்ட உணர்வு. அப்பா, அம்மா இருவருமே டாக்டர்கள், மகனையும் டாக்டராக்கிவிட வேண்டும் என்கிற தங்களின் விருப்பத்தை மகன் மீது திணிக்கிறார்கள்.



மதிப்பெண் நோக்கி அவனை ட்யூன் செய்கிறார்கள். விளைவு! ஒரு நண்பனாக, ஒரு மகனாக, கித்தாரை நேசிக்கும் ஓர் இசைக் கலைஞனாக தனது சுய அடையாளங்களை இழக்கிறான். மனத்தளவில் பாதிப்புக்கும் ஆளாகிறான். மருத்துவப் பெற்றோர் என்பதால் அவனது மாற்றங்களை கவனித்து அவனிடம் இருக்கும் கலைஞனை மீட்டெடுப்பதோடு படம் முடிகிறது.

இதை உருவாக்கியிருக்கிறார் இருபத்து ஐந்து வயது இளைஞரான அம்ஜத் மீரா அகிலன்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் இரசாயனப் பட்டம் பெற்று சென்னை வந்திருக்கும் இவர், இந்தப் படத்தை எதற்கு எடுத்தாராம்? "உதவி இயக்குனராகச் சேர எனக்கொரு அடையாளம் தேவைப்பட்டது. அதற்காகத்தான்!" என்று அதிரவைக்கிறார்!

— ஜெ.

அக்னி சர்மா பக்கம்

நடக்குமென்பார்;





மேஷம்: குடும்பஸ்தானத்தில் ராகு இருப்பதால் 'ரெட் சிக்னல்' விழுந்து விட்டது என்று சற்று உஷாராக இருக்கவும். குறிப்பாக, உடல் நலத்தில் கவனம் தேவை. எதிர்பாராத சிக்கல்கள் தோன்றும் அபாயமிருக்கிறது. உடன் பிறந்தவர்களால் சில பிரச்னைகள் ஏற்பட்டு விலகும். பதற்றப்படாமல் ஆராய்ந்து முடிவுகளை எடுக்கவும். உத்தியோகத்தில் கடினமான சூழ்நிலைகள் நிலவினால், சாமர்த்தியமாகச் செயல்பட வேண்டியது அவசியம்.



ரிஷபம்: வியாபாரிகளுக்கான வசந்த காலம் வந்தே விட்டது. மருத்துவம், ரசாயனம், உலோக வகை, தோல் பொருள், ரெடிமேட் ஆடைகள், ஏற்றுமதி இறக்குமதி, உணவு போன்ற தொழில்களில் லாபம் கொழிக்கும். குடும்ப நலம் சீராக இருக்கும். கணவன் - மனைவி உறவு இனிமையாக இருக்கும். குரு பார்வை 7ம் இடத்தில் இருப்பதால், திருமணம் போன்ற சுபமங்கள காரியங்கள் கூடிவரும்.

மிதுனம்: ராசிநாதன் புதன் மகரத்தில் 8ம் இடத்தில் ராசியில் சனி வக்ர கதியில் சஞ்சாரம் என்பதால், எடுத்த காரியங்களில் அனுகூலம், தெளிவான மனநிலை, வழக்கு விவகாரங்களில் அனுகூலமான திருப்பம், என நல்ல பலன்களாகவே ஏற்படும். அரசுப் பணியாளர்கள் முன்னேற்றம் காண்பார்கள். சுயமாகத் தொழில் புரிபவர்களுக்கு, இதுவரை இருந்து வந்த எதிர்ப்புகள் விலகும்.

கடகம்: குருவின் பார்வை 7 ஆம் இடத்தில் இருப்பதால், திருமணம் போன்ற சுப காரியங்கள் நடக்க அடி கோலப்படும். மாணவர்கள் சிறந்த முன்னேற்றம் அடைவார்கள். வியாபாரிகளுக்கு, சரளமான பணவசதி இருக்கும். அரசியல்வாதிகள் முன்னணிக்கு உயர்வார்கள். பெண்களுக்கு சகல முயற்சிகளும் கை கூடும். புதிய பொருள் சேர்க்கை உண்டாகும். கலைத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு புகழ், மதிப்பு கூடும்.

சிம்மம்: நீங்கள் இடுக்கில் புகுந்தால், எதிரிகள் கோலத்தில் புகுந்து சிலம்பம் சுழற்றி திணற வைத்துக் கொண்டிருந்தார்கள் இல்லையா? இனி, பூர்வ புண்ணியஸ்தானத்தில் உலவும் சூரியன் பார்த்துக் கொள்வார். மறைமுக எதிரிகள் காணாமல் போவார்கள். பயப்படாதீர்கள். உத்தியோகம் அல்லது வியாபாரம் சம்பந்தமாக நீங்கள் போகும் வெளியூர் காரியங்களில் ஜெயம் ஜெயமே! சுய தொழில் செய்பவர்கள் நல்ல வளர்ச்சி காண்பார்கள்.



கன்னி: 'வீட்டுக்கு வீடு வாசப்படி. குடும்பத்துக்குக் குடும்பம் குழப்படி' என்று மனசைத் தேற்றிக் கொள்ளுங்க. ஏன்னா, இந்த வாரம் சிறு சிறு பிரச்னைகள் வந்து, வந்த சுவடே இல்லாமல், மறைஞ்சுடும். ஆரோக்கியம் பற்றிக் கவலை இல்லை. உற்சாகமான மனநிலையோடு வளைய வருவீர்கள். மாணவர்களின் உழைப்பு, திறமை வீண் போகாது. தாமதமடைந்து வந்த தெய்வீகக் காரியங்கள் கை கூடும்.



துலாம்: எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்து சேரும். அதனால் தொடங்கப்படும் எல்லா முயற்சிகளுமே வெற்றிகரமான பலன்கள் பெறும். புதிய தொழிலில் ஈடுபடும் வாய்ப்பு உள்ளவர்களுக்கு





நடக்கும்! ஜனவரி 1 முதல் 7 வரை



சாதகமான காலம். உங்கள் ராசிநாதன் சுக்ரன் ஆட்சியாக, ராசியில் செவ்வாயுடன் கூடி உலவுவதால், எதிர்பாராத தன லாபம், எடுத்த காரியங்களில் வெற்றி, தெய்வ பலம் உண்டாகும்.



விருச்சிகம்: உத்தியோகத்திலிருந்து வந்த பிரச்னைகள் யாவும் விலகி உற்சாகமான மன நிலை உண்டாகும். அலுவலகத்தில் எல்லோருடைய ஆதரவும் ஒத்துழைப்பும் ஏற்படும். தாமதமான பதவி உயர்வு, இடமாற்றம் இப்போது வந்து சேரும். தனியார் துறைகளில் வேலை செய்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். புதிய பொறுப்பு, அதிகாரம் ஆகியவை உண்டாகும். தொழில் புரிபவர்கள் நல்ல வளர்ச்சி காண்பார்கள். வியாபாரிகள் ஆதாயம் கூடப் பெறுவார்கள்.

தனுசு: குடும்பத்தில் சலசலப்பு, உத்தியோகத்தில் முணுமுணுப்பு, வியாபார விஷயத்தில் படபடப்பு என்று டென்ஷன் சங்கதிகள் எதுவும் இனி உங்களுக்கு இருக்காது. குடும்பஸ்தானத்தை குரு பார்ப்பது மங்களமான வரம். இதன் தொடர்பாக சுபச் செலவுகள் நிறைய ஏற்பட்டாலும், தாக்குப் பிடித்து சமாளித்து விடுவீர்கள். மனை, நிலம், வீடு, ரியல் எஸ்டேட் வகையில் ஆதாயம் உண்டு. பெண்களின் நோக்கம் நிறைவேறும்.

மகரம்: ஜான் ஏறினால் முழம் சறுக்கும் நிலைமையில் 'சர்வேஸ்வரா... எல்லாம் உன் செயல்' என்று சாந்தமாக இருந்து விட முடிகிறதா என்ன...? அதனால்தான் சஞ்சலப்பட்டு, சங்கடப்படுவதெல்லாம். ஆனால் இந்த வாரம் கிரக சஞ்சாரம் மிகவும் சிறப்பாக உள்ள நிலையில், புதிய முயற்சிகள் யாவும் பொன்னாக மாறும். எதிர்பாராத தன வரவு வந்து திக்குமுக்காட வைக்கும்.

கும்பம்: 9ம் இடத்தில் ஆட்சி பெற்ற சுக்ரனுடன், 10ன் அதிபதி செவ்வாய் கூடியிருப்பது சிறப்பானது என்பதால், கும்பராசிக்காரர்கள் காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வது போற்றுதலுக்குரியது. அலுவலக விஷயங்களில் ஆதாயமான திருப்பங்கள் நேரும் என்பதற்கு உங்கள் பூர்வ புண்ணியஸ்தானம் கியாரண்டி தருகிறது. குடும்பத்தில் விருந்து, உபசாரம், உல்லாசம் என மகிழ்ச்சிப் பெருக்கெடுக்கும்.



மீனம்: "குன்று மேல் விளக்கா யிருக்க வேண்டிய நான், குடத்தி லிட்ட விளக்கா இருக்கேனே!" என்ற உங்களுடைய புலம்பல் நியாயமானது தான். இனி கவலைப்பட வேண்டாம். உங்கள் திறமைக்கும் பூர்வ புண்ணியத்துக்கும் ஏற்ப, மேன்மையும், மதிப்பும் கூடப் பெற்று, புகழ் மாலை சூடுவீர்கள். பெண்களுக்கு உத்தியோகத்தில் நிலவிய மறைமுக எதிர்ப்புகள் விலகும். மனை, நிலம், வீடு, வாகனம் போன்ற விஷயங்களில் ஆதாயமான பலன்கள் நடக்கும்.







நடிகர் கருணாஸின் மனைவி கிரேஸிக்கு (மகரம்) எதிர்பாராத தனவரவு உண்டாம்!

ஆசார்ய நிஷ்டை என ஒன்று;
ஸ்வ நிஷ்டை
பாகவத நிஷ்டை
உக்தி நிஷ்டை - இவை நான்கு விதமான நிஷ்டைகளாக நமக்குச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இஞ்சிமேட்டு ஸ்ரீமத் அழகிய சிங்கர், அவர் பெரிய மகான் - உக்தி நிஷ்டை என்பதை வலியுறுத்தினார். அதைத்தான் அஹோபிலத்திலே அந்த நரசிம்ஹனுக்கு எதிரிலே கடைப்பிடித்தார். அங்கே ஆசார்யர்கள் ஆத்ம சமர்ப்பணம் பண்ணும்படியான 'பரன்யாஸம்' என்பது நடக்கும். அதை உக்தி நிஷ்டை மூலமாகப் பண்ண வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார். அதன்படிதான் இப்போதும் நடக்கிறது.

உக்தி நிஷ்டை என்றால், ஆசார்யர் பகவானுக்கு எதிரிலே நின்று, சிஷ்யனையும் நிறுத்தி, இவன் வாக்கினாலே சொல்ல வைத்து, **அவன்** திருவடியிலே சேர்த்து வைத்தல். இது ஆசார்யர்கள் எம்பெருமானிடம் நம்மைச் சேர்த்து வைக்கும் மிகப் பெரிய கல்யாணம்.

ராமாயணத்திலே மூன்று கல்யாணங்கள் நடந்தன. பாலகாண்டத்திலே சீதா கல்யாணம்; அயோத்யா காண்டத்து சீதா கல்யாணம்; இன்னொரு சீதா கல்யாணம் சுந்தர காண்டத்திலேயும் நடந்தது.

சீதா கல்யாணம் மூன்று தடவை கூட நடக்குமா என்று கேட்கக் கூடாது.

22

பால காண்டத்திலே நடந்ததை வால்மீகி வர்ணித்தார். அயோத்யா காண்டத்திலே, முடிவிலே, அத்ரி மஹரிஷி ஆசிரமத்துக்குப் போகிறான் ராமன். சீதா லக்ஷ்மணனோடு போகிறாள். அப்போது அனுசூயா தேவி, சீதாப் பிராட்டியைக் கட்டி அணைத்துக் கொண்டு, 'இவ்வளவு சின்னப் பெண் நீ - போகங்களை அனுபவிக்க வேண்டி

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

யவள்; இப்படி காட்டிலே பர்த்தாவோடு வந்திருக்கிறாயே' என்று கேட்டாள். சீதா பிராட்டி ரொம்ப வெட்கப்பட்டுப் போய், "அம்மா அனுசூயா தேவி! தாங்கள் என்னைப் பார்த்து இப்படிச் சொல்லலாமா? நான் என்ன பண்ணிவிட்டேன் உயர்த்தியாக? என் பர்த்தாவோடு நான் வராமல் இருந்தால்தானே தோஷம்! இது என் கடமைதானே? கடமையாக இருப்பதைச் செய்தால், பெரிதாகச் சொல்லக் கூடாது" என்றாள். "பர்த்தாவோடு கூட இருப்பது ஒரு தர்மபத்னிக்கு அழகல்லவா?"

இதைக் கேட்டு விட்டு அனுசூயைக்கு ரொம்ப சந்தோஷம். சீதா பிராட்டிக்கு எல்லா ஆபரணங்களையும் போட்டுப் பார்த்து சேவிக்கிறாள். அப்போது சீதாபிராட்டி தன் வாக்கினாலேயே தன் கல்யாணத்தை வர்ணித்துச் சொல்கிறாள் அனுசூயையிடம். இப்படி மஹாலக்ஷ்மி வாக்கினால் கல்யாண வர்ணனை கேட்ட பாக்கியம் பெற்றவள் அனுசூயா.

'சங்கல்ப சூர்யோதயம்' என்ற நாடகத்திலே சுவாமி தேசிகன் இதை எடுத்துக் காட்டுகிறார். சீதாப் பிராட்டியை ஜீவாத்மாவாக நாம் உருவகப்படுத்திக் கொள்ள வேண்டும். ராமன் பரமாத்மா - ராமனால் அனுப்பப்பட்டவர் ஆஞ்சநேயர் - அவர் ஆசார்யன்.

இந்த நாடகம் ரொம்ப அழகு. வேதாந்த விழுப் பொருளை நாடகமாக அமைத்துக் கொடுத்திருக்கிறார். காவ்யேஷு நாடகம் ரம்யம். காவியங்களுக்குள் நாடகம் என்பது ரம்மியமானது.



வேத பாராயணம் நடக்கிறது என்றால் பத்துப் பேர் வந்து கேட்கிறார்கள். அதையே உபன்யாசமாகப் பண்ணுகிறார்கள் என்றால், இன்னொரு நூறு பேர் வந்து கேட்கலாம். அதையே பாட்டாகப் பாடுகிறார்கள் என்றால், இருநூறு பேர் வரலாம். நடித்துக் காட்டினால் ஐந்நூறு பேர் வருவார்கள்! அதனால்தான் காவ்யேஷு நாடகம் ரம்யம் என்றது. பாத்திரத்தைப் போஷித்து, அந்தப் பாத்திரமாக மாறி, நடித்துக் காட்டுகிறபோது அது நன்றாக மனத்திலே பதிகிறது.

சங்கல்ப சூர்யோதயம் நாடகக் காட்சியும் இப்படித்தான். ஆசார்யனான ஆஞ்சனேயன் அங்கே, இலங்கைக்குப் போய் ராமபிரான் அனுக்கிரஹம் பண்ணிய மோதிரத்தைக் கொண்டு போய்க் கொடுத்தான். ஜீவாத்மாவாகிற சீதை எப்போதும் வணங்கி நிற்கிறாள் என்பதை உணர்த்த, இங்கே சூடாமணியைக் கொடுத்து... இவர்கள் இரண்டு பேருக்கும் ஆத்ம விவாஹம் பண்ணி வைக்கிறான் ஆஞ்சனேயன். ஆத்ம விவாஹம் என்பதை, ஆசார்யர்களால்தான் பண்ணி வைக்க முடியும்.

சுந்தர காண்டத்திலே நடந்த விவாகம் இருக்கிறது பாருங்கள்... அது ஒரு சிலருக்குத்தான் நடக்கும் உலகத்திலே. எல்லோருக்கும் நடப்பது ரொம்ப துர்லபம். ஏனென்றால் ஆசார்யரை வணக்கம் பண்ண வேண்டும். அவரிடத்திலே பிரதி பக்தியோடு இருக்க வேண்டும். எம்பெருமானிடம் விச்வாசம் இருக்க வேண்டும். அவன் திருவடியிலே ஆத்ம சமர்ப்பணம் பண்ண வேண்டும், என்கிற எண்ணம் வரவேண்டும். அதற்கு விசேஷமாக அங்கே போய் அடிபணிந்து நிற்க வேண்டும். ஒரு நல்ல ஆசார்யரை அடைய வேண்டுமானால் இதெல்லாம் வேண்டும்.

எம்பெருமான் கக்ருதம் மட்டும் இருந்துவிட்டால் பல அனுக்கிரஹங்கள் நமக்குக் கிடைக்கும். ஒருத்தர் திவ்ய தேச யாத்திரை கிளம்புகிறார். இன்னொருத்தர் போக வேண்டும் என்று நினைத்திருக்க மாட்டார். ஆனால், திடீரென்று அந்த சுக்ருதத்தை - பலனை - உண்டாக்குகிறான் பரமாத்மா.

சைக்கிளில் வீதியோடு போகிறார் ஒருத்தர். இத்தனை பேர் இங்கே இருக்கிறார்கள். என்னவோ பகவத் விஷயம் நடக்கிறது. ஆனால் அவருக்கு உள்ளே வந்து பார்க்க வேண்டும் என்று தோன்றவில்லை. வீதியோடு போகிறவர், ஒரு நிமிடம் ஹேண்ட்பாரை விட்டு விட்டு, அப்படி அந்தத் திக்கை நோக்கிக் கைகூப்புகிறார்.

"புத்தாண்டு வாழ்த்துக் கார்டில் உன் அப்பா என்னடா எழுதியிருக்கார்?"
"அரியர்ஸெல்லாம் ஒழிந்து நிம்மதி பிறக்கட்டும் – இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்னு!"
– உ. ராஜாஜி

- இந்த மாதிரி எப்போதோ ஒரு சமயம் தெரிந்தோ தெரியாமலோ, அவன் திருவடியிலே வணங்கிவிட்டால், பகவான் அசுபங்களை வாழ்க்கையிலிருந்து போக்கி விடுகிறான். சுபங்களை உண்டு பண்ணுகிறான்.

என்ன செய்தாலும், அந்த பகவான் நம்மைப் பார்க்க வேண்டும். அவன் பார்வை நம் மீது படுகிறதா? நித்யம் ஒருவர் பார்த்தசாரதி கோயிலுக்குப் போகிறார். ஆனால், நீர் அவனைப் பார்ப்பது போல், உம்மை அவன் பார்க்கிறானா?' என்று கேட்கிறது வேதம்.

யாரைப் பார்க்கிறான் பகவான்? எப்படிப்பட்டவர்களுக்கு அனுக்கிரஹம் பண்ணுகிறான்...?

ஓர் இடத்திலே வேத பாராயணம் நடக்கிறது. அர்த்தம் புரியவில்லையானாலும் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதிகாஸ புராணம் நடக்கிற இடத்திலே போய் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறவர்கள், ஆனந்தமாகக் கேட்கிறவர்கள், தானும் உட்கார்ந்து சஹஸ்ரநாம பாராயணம் பண்ணுகிறவர், சத்கர்மா பண்ணுகிறவர், பெரியோர்கள் வந்தால் வணங்குகிறவர்; இதையெல்லாம் பண்ணுகிறவர்கள் மேல் பகவானின் பார்வை படுகிறது என்று அர்த்தம். யாரும் சொல்லாமலே இதைத் தெரிந்து கொள்ளலாம். இந்தக் காரியங்கள் மீதெல்லாம் ஒருத்தருக்கு வெறுப்பு வந்து விட்டது என்று வைத்துக் கொள்வோம்... அவர் மீது பகவான் பார்வை படவில்லை என்று தெரிந்து கொள்ளலாம். பகவான் நம்மைப் பார்த்தானா இல்லையா என்பதற்கு அளவுகோல் இதுதான்.

அத்வேஷியாக இருப்பவன் மீது பகவான் பார்வை படுகிறது. யாரையும் துவேஷிக்கக் கூடாது. எங்கேயுமே பேசுகிறபோது உள்அர்த்தத்தோடு பேசக் கூடாது. இஞ்சிமேட்டு



அழகிய சிங்கர் இதை ரொம்ப வலியுறுத்திச் சொல்லுவார். நேரே அர்த்தம் கொடுக்கிற மாதிரிதான் பேச வேண்டும். உள்ளுக்குள்ளே ஒன்று வைத்து, மறைத்துப் பேசக் கூடாது; யாரையும் துவேஷிக்கக் கூடாது. - அத்வேஷம் முக்கியம்.

மகான்கள் நம் ஊருக்கு வந்திருக்கிறார்கள் என்றால், உடனே அவர்களைப் போய் சேவிக்க வேண்டும். ராமனுக்கு இந்தக் குணம் உண்டு.

மகான்களின் அண்மை நமக்குக் கிடைத்து விட்டால், 'உம்'மென்று உட்கார்ந்து விடக் கூடாது. அவர்களோடு பேச வேண்டும். பெரியவர்களோடு பேசினால்தான் நல்ல விஷயங்கள் நம் காதிலே விழும்.

இந்தக் குணங்களெல்லாம் அமையப் பெற்றவனுக்குத்தான் ஆசார்யர் கிடைப்பார். அப்படிப்பட்ட ஆசார்யர் கிடைத்த பிறகு, என்ன குறை உண்டு! நல்ல ஆசார்யன் கிடைத்து விட்டால், நமக்கு உயர்ந்த கதிதான். நம்மை உடனே கரைசேர்த்து விடுவார்கள் அவர்கள்.

திருவேங்கட மலையை எல்லோரும் பார்த்திருக்கிறோம். ஏழு சிகரங்கள். சிகரத்துக்குச் சிகரம் சிம்மம் தாவும்! சின்ன எறும்பு – அது ஒரு மலையிலிருந்து இன்னொரு மலைக்குத் தாவ நினைத்ததாம்! அதனுடைய நிலையிலே, ஒரு மலை இறங்கி, இன்னொரு மலை ஏற முடியுமா...? கீழே இருக்கிற பள்ளத்தாக்கெல்லாம் தாண்டி, அருவியெல்லாம் தாண்டி, அது போய்ச் சேருமா என்று பார்த்தால், அது எறும்புக்கு ரொம்ப சிரமமான காரியம்.

ஆனால், அந்த எறும்புக்கு இப்போது ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.. காலைப் பிராண்டிக் கொண்டு, தாவத் தயாராக நிற்கிறது சிம்மம். எறும்பு என்ன பண்ண வேண்டும்...? சிம்ம சரீரத்திலே போய் உட்கார்ந்து கொண்டு விட வேண்டும். அவ்வளவுதான். அப்படி சிம்ம சரீரத்தைப் பிடித்துக்கொண்டால், அது தாண்டுகிறபோது, இதுவும் தாண்டிவிடும்!

அந்த மாதிரி, நமக்கு சதாசார்ய சம்பன்னம் ஏற்பட்டு அவர் திருவடியைப் பிடித்துக் கொண்டோமானால், அவருடைய அனுக்கிரஹத்தினாலே, இந்த சம்ஸார பந்தத்திலிருந்து விடுபடுவோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால், ஸதாசார்ய சம்பந்தமானது மோக்ஷத்தளவும் நமக்கு வேண்டும். பூலோக வாழ்க்கையோடு அறுந்து போய்விடுவது கிடையாது. இந்த சம்பந்தம், மோக்ஷம் வரையில் உடனிருக்கிற ஆசார்யர் சம்பந்தம்தான், பகவத் சம்பந்தத்தை நமக்கு ஏற்படுத்திக் கொடுக்கும்.

இதை ரொம்ப அழகாக உவமித்துச் சொல்லியிருக்கிறது.

ஒரு பெரிய புஷ்கரிணி. அந்த புஷ்கரிணியிலே தாமரை மலர்கள் சூரியனைக் கண்டு மலர்ந்து, அப்படியே இருக்கின்றன.... நிறைய ஜலம் இருக்கிறது புஷ்கரிணியில். நீண்ட நாளம் கொண்ட அந்தத் தாமரைகள், ஜலம் இருக்கும்போதுதான் மலர்ந்து இருக்கும். எந்த தாமரை மலர் சூரியன் பட்டு மலர்ந்து பிரகாசித்ததோ, அதே மலர் ஜலமில்லாத குளத்திலே வாடி வதங்கிவிடும். அது போன்று, ஆசார்ய ஸ்தானமானது ஒரு குளத்தின் தீர்த்தம். அதிலே சிரிக்கிற தாமரை மலர்கள் போன்றவர்கள் நாம். பகவான் பகலவன் - சூரியன். அவனுடைய அனுக்கிரஹம் நமக்கு ஏற்பட வேண்டுமானால், தீர்த்தத்தோடு தாமரைக்கு சம்யோகம் இருப்பது போல், ஆசார்யரோடு சம்பந்தம் இருந்து கொண்டேயிருக்க வேண்டும்.

சதாசார்யனை அண்டி, அவன் திருவடியிலே சிச்ருஷை பண்ணி, அந்த பரப் பிரும்ம வித்யையை நாம் தேடி நிற்க வேண்டும்.

அதற்கான உபாயம் என்ன என்பதை நன்கு தெரிந்து கொண்டோம்.

அப்படி பரப்பிரும்மத்தை அடைந்தால் அதற்கான பலன் என்ன...? பிரதிப்ரயோஜனம் என்ன...? அவன் திருவடியிலே அறுபடாத நித்ய கைங்கர்யம் என்பதுதான் - மறுபடியும் பிறத்தல் இல்லாத சாஸ்வதமான நிலை அது!

(வளரும்)

ஆந்திரியா, ஷர்மிஷ்டா, மீட்டு!

'மிஸ் பண்ணாதே மிஸ் சென்னை' என்ற ரஹ்மான் ஹிட் பாடல் வரிக்கு ஏற்ப, 'மிஸ் சென்னை 02' அழகிப் போட்டிக்கு மிஸ் பண்ணாமல் போயிருந்தோம்.

• நிகழ்ச்சி ஆரம்பிக்க வேண்டிய ஏழரை மணிக்கு அரங்கத்தில் இருந்தவர்களுக்கு மிகுந்த சஸ்பென்ஸ் தந்தது, யாருக்கு மிஸ் சென்னை கிரீடம் கிடைக்கப்போகிறது என்ற எதிர்பார்ப்பல்ல; நடுவர்கள் எப்போது வருவார்கள்? எப்போது நிகழ்ச்சி ஆரம்பிக்கும் என்பதுதான்!

• போட்டியில் பங்கேற்க நாற்பத்து இரண்டு பேர் விண்ணப்பிக்க, அதிலிருந்து



தேர்வான பன்னிரண்டு பேர் போட்டியில் பங்கு பெற்றனர். அவர்களிலிருந்து ஆறுபேர் இறுதிச் சுற்றுக்கு வந்தனர். அதில் மிஸ் சென்னை, அடுத்தபடி முதல் ரன்னர் – அப், இரண்டாவது ரன்னர் – அப் என மூன்று பேர் கிரீடம் சூட்டப்பட்டனர்.

• நடுவர்களில் ஒருவரான டான்ஸர் ஸ்ரீநிதி சிதம்பரம், இரண்டு சுற்றுக்கள் முடிந்ததும் கிளம்பிப் போய் விட்டார். லேட்டாய் வந்த நடிகை ஸ்நேகா, அதன்பின் நடுவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். பாடகர் ஹரீஷ் ராகவேந்தரும் நடுவர்களில் ஒருவர்.

• 'அறிவுடன் கூடிய அழகு' என்பதுதான் மிஸ். சென்னை போட்டியின் நோக்கம் என்று கூறினார்கள். அதன் அடிப்படையில், அழகுடன் கூட, வேறு திறமைகளை வெளிப்படுத்தும் படி, ஒரு சுற்று அமைந்திருந்தது. மூன்று பேர் மேற்கத்திய நடனம் ஆடினார்கள், மூன்று பேர் பரதநாட்டியம் ஆடினார்கள். மூன்று பேர் பாட, மூன்று பேர், ஓரங்க நாடகம் நடத்தினர். ஒவ்வொரு பிரிவிலும் ஒரு திறமைசாலி தேர்ந்தெடுக்கப்பட்டு, மினி கிரீடம் சூட்டப்பட்டார்கள்.

• பங்கேற்ற 12 பேரில், இரண்டு அர்ச்சனாக்கள், இரண்டு அபர்ணாக்கள் தவிர ஆந்திரியா, ஷர்மிஷ்டா, மீட்டு என இப்படியான பெயர் கொண்டவர்களும் உண்டு.

• இறுதிச் சுற்றுக்கு வந்த ஆறு பேரிடமும், "நவீனம்" என்பது மனம் சம்பந்தப்பட்டதா? தோற்றம் சம்பந்தப்பட்டதா? பண்பு சம்பந்தப்பட்டதா? என்ற கேள்வியைக் கேட்டு, விடையை மூன்று நிமிடத்தில் எழுதித் தரச் சொன்னார்கள்.

• மிஸ் சென்னை 02 ஆகத் தேர்வு செய்யப்பட்ட சிதாரா, நவீனம் என்பது மனம், தோற்றம், பண்பு மூன்றும் சம்பந்தப்பட்டது. இவற்றின் முடிவில் நம் செயல் என்ன என்பதுதான் மிக முக்கியம், என்று சொல்லி கிரீடத்தைத் தட்டிச் சென்றார். இரண்டாம் இடம்; அபர்ணா மூன்றாமிடம்: சுருதி.

— மௌலி

கோடம்பாக்கத்தில் கூத்து வாத்தியார்!


• 'காதலுடன்' முரளி • தேவயானி

ஒன்றரை வருடமாக தலைமறைவு வாழ்க்கை நடத்தி வந்த இயக்குனர் ராஜகுமாரன், இப்போது திடீரெனத் தோன்றி, 'காதலுடன்' படத்தை இயக்கி முடித்து விட்டேன் என்று சர்ப்ரைஸ் தந்தார். தயாரிப்பாளர்கள் எல்லாம் கைவிட்டு விட்ட சூழ்நிலையில் இவருக்குக் கைகொடுத்தது யாராம்?

"வேற யாருங்க.. மனைவி தேவயானிதான் படத்தோட தயாரிப்பாளர், கதாநாயகி எல்லாம். முரளி கதாநாயகன். நான் இயக்குனர். படம் வெளியான பிறகு பாருங்க.. ரொம்ப பிஸியாகிடுவேன். அந்த மாதிரி உழைச்சிருக்கேன்" என்று வாக்கு மூலம் கொடுத்தார்.

கோடம்பாக்கத்து ரெக்கார்டிங் ஸ்டூடியோ ஒன்றில் கூத்துப் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. நாட்டுப்புறக் கலைக்கு மரியாதை தர நினைக்கும் நாசர் படமாக இருக்கும் என்று உள்ளே நுழைந்தால், திரைப்படக் கல்லூரி மாணவர்கள் நின்று கொண்டிருந்தனர். புகழ்பெற்ற புரிசைக் கூத்துக் கலைஞர் சுப்ரமணியத் தம்பிரான் பாடிக் கொண்டிருந்தார். கூடவே ஸ்டண்ட் மாஸ்டர் கனல் கண்ணன். புரிசை கூத்துக் குழுவுக்கும், கனல் கண்ணனுக்கும் என்ன தொடர்பு? டியூப்லைட் படத்தில் கனல் கண்ணன் தெருக் கூத்துக் கட்டியக் காரனாக நடிக்கிறாராம். சென்னையிலிருந்து தெருக்கூத்து பார்க்க வரும் கதாநாயகிக்கு இந்தக் கட்டியக்காரன் மீது காதலாம்... இந்தப் படத்தில் புரிசைக் கூத்து தவிர, கரகாட்டம், காவடியாட்டம்,


• எக்ஸ்பிரஸ் விருது விழாவில்...


• 'ட்யூப் லைட்' கனல் கண்ணன் • சந்தோஷி

மயிலாட்டம், ஒயிலாட்டம், புலியாட்டம், என்று தமிழகப் பாரம்பரியக் கலைகள் அனைத்தையும் இடம் பெறச் செய்திருக்கிறோம் என்கிறார் படத்தின் இயக்குனர் கே. மகேஷ் குமார். இசைக்கு அதிக முக்கியத்துவமுள்ள இந்தப் படத்தில், அந்தப் பொறுப்பை கலைவாணன் என்ற அறிமுகம் ஏற்றுச் செய்திருக்கிறார். படத்தின் தலைப்பைப் பார்த்தால்தான் கதைக்குத் தொடர்பு இல்லாத மாதிரி தெரிகிறதே.

சினிமா எக்ஸ்பிரஸ் இருபத்து இரண்டாவது திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டதுமே, சந்தோஷப்பட்ட முதல் மனிதர் மணிரத்னமாகத்தான் இருப்பார். காரணம், படம் வசூல் செய்ததோ இல்லையோ, சிறந்த படம், சிறந்த இயக்குனர் என்று 'கன்னத்தில் முத்தமிட்டால்' படத்துக்கு மொத்தம் ஆறு விருதுகள்!

— ரவுண்ட்ஸ் பாய்

பாழாய்ப் போகும் பல்கலைக் கழகம்; பரிதவிப்பில் பாதிரியார்!



• இன்னாசிமுத்து

சென்னைப் பல்கலைக்கழகத்தில் பயின்றோர் அது குறித்துப் பெருமைப்பட்டுக் கொண்ட காலம் ஒன்று உண்டு. ஆனால் இன்று, அங்கு நடக்கும் அரசியல் சூழ்ச்சி, தனிநபர் ஆதிக்கம், போட்டி, பொறாமை, ஜாதி மோதல், ஆசிரியர் சங்கப் போட்டி ஆகியவற்றால் பல்கலைக்கழகத்தின் தரம் பாதாளத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது.

நான்கைந்து மாதங்களுக்கு முன்பு ஃபாதர் இன்னாசிமுத்துவைத் துணைவேந்தராக நியமித்த போது ஒரு நம்பிக்கை ஒளி தெரிந்தது. ஆனால் பேராசிரியர்கள் ஆர்.எஸ். ராகவன், மற்றும் வி. துரை ஆகியோரைச் சந்தித்த போது, அதிர்ச்சியான தகவல்களைச் சொன்னார்கள். இன்னாசிமுத்து மீது அவதூறுகளை வீசியடித்து அவரை விரட்டியடிக்க சதி நடக்கிறதாம்! அந்த நோக்கத்தில் அவர் மீது அபாண்டமாக குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறதாம். என்னவென்று விசாரித்த போதுதான், பல்கலைக்கழக அரசியலின் முழுப் பரிமாணம் தெரிந்தது.

இன்னாசிமுத்து மீது இரண்டு குற்றச் சாட்டுக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, பல்கலைக்கழக மானியக்குழு மூலிகை ஆராய்ச்சிக்காகக் கொடுத்த பத்து கோடி ரூபாயை முறைகேடாகப் பயன்படுத்தினாராம். இதில் வேடிக்கை என்னவென்றால், இன்னாசிமுத்து பதவியேற்றப் பிறகு எந்தப் பணமும் வரவில்லை. அவருக்கு முன் இருந்த துணைவேந்தர்தான் பணத்தைச் செலவழித்தார். நடந்தது என்னவென்றால், இன்னசிமுத்து பதவியேற்றவுடன் "பணத்தைச் செலவழிக்க வேண்டாம், ஒரு கமிட்டி அனுப்புகிறோம். அது விசாரித்து முடிந்த பின் ஆராய்ச்சியைத் தொடரலாம்'' என்று யு.ஜி.சி. ஃபாக்ஸ் அனுப்பிய பிறகுதான், இதுபோன்ற ஆராய்ச்சி நடப்பதே துணைவேந்தருக்குத் தெரியும். உடனே துறைத் தலைவர்களைக் கூப்பிட்டு விசாரணை நடத்தி, புதிய யோசனைகளைக் கேட்டிருக்கிறார்.

யு.ஜி.சி. கமிட்டி விசாரித்து, அந்தப் புதிய யோசனைகளைப் பரிசிலித்து முடிவெடுக்க இருக்கிறது. இன்னாசிமுத்து பொறுப்பேற்ற பிறகு எந்தப் பணமும் வரவில்லை, செலவழிக்கப்படவுமில்லை. அப்படியிருக்க இவர் மீது விசாரணை ஏன்? இத்தனைக்கும் மூலிகை ஆராய்ச்சிப் பணத்தை சொந்தப் பணம் போல வங்கியில் போட்டுச் செலவழித்த பேராசிரியர் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. அந்தப் பணத்தை முறையான ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தாமல், க்வாலிஸ் வேன் வாங்கப் பயன்படுத்தியதற்கும், வேண்டப்பட்ட தனி நபர்களுக்கு, ஆராய்ச்சி என்ற பெயரில் ஆயிரக் கணக்கில் தானமாக வழங்கியதற்கும் எந்த நடவடிக்கையும் இல்லை.

அதற்கு என்ன காரணம் என்று விசாரித்தால் மற்றொரு விவகாரத்தைச் சொல்கிறார்கள். கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்ட பேராசிரியர்கள் செல்வராஜ் மற்றும் கோவிந்தராஜன் ஆகியோருக்கு ஆதரவாகச் செயல்பட்டராம் துணைவேந்தர். அவர்களுக்கு ஆதரவாகத் துணைவேந்தர் செயல்பட்டால், யாருக்குக் கோபம் வருகிறது என்று கேள்வி வரும். விவகாரம் தோண்டத் தோண்ட எலி வளை போலப் போகிறது. தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களுக்கு ஆளுநர்தான் வேந்தர். சிண்டிகேட்டுக்கு உறுப்பினர் போட அவருக்கு உரிமை உண்டு. ஆளுநருக்குத் தனி உதவியாளராக இருப்பவர், ஐ.ஏ.எஸ். அதிகாரி ஷீலாப்ரியா. இவரது கணவர் மதன கோபாலன் என்பவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பிரெஞ்சு மொழிப் பேராசிரியராக இருந்து சமீபத்தில்தான் ஓய்வு பெற்றார். ஷீலாப்ரியா பத்து வருடங்களாகத் தனிச் செயலர் பதவியில் இருப்பது கின்னஸ் சாதனை.

ஷீலாப்ரியா என்ன சொல்கிறார்?

"ஒரு கும்பல் தொடர்ந்து என் மீது சேற்றை வாரி வீசி வருகிறது. அரசு பொறுப்பில் ஆளுநரின் செயலாளராக இருப்பதால் என்னால் அவற்றிற்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. குற்ற



மதனகோபாலை எப்படியும் சென்னைப் பல்கலைக் கழகத்துக்குத் துணைவேந்தர் ஆக்கி விடுவது என்ற முயற்சி, கடந்த பத்து வருடங்களாக நடந்து வருகிறதாம். ஆனால் சென்னை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவராக இருக்கும் செல்வராஜ், மற்றும் செயலாளர் கோவிந்தராஜன் ஆகியோர் தடையாக இருந்தார்களாம். செனட் மற்றும் சிண்டிகேட் ஆசிரியர் சங்கத்தின் செல்வாக்குக் கணிசமானது. இந்த நிலையில், செனட் கூட்டத்தில் அதிகார பூர்வமாகவன்றி நுழைந்ததாக இவர்கள் மீது குற்றச்சாட்டுப் போடப்பட்டு, முதலில் தற்காலிகப் பணி நீக்கம், அடுத்து கட்டாய ஓய்வு என்று கொடுக்கப்பட்டது. இன்னாசிமுத்து, லயோலாவில் முதல்வராக இருந்தபோது செனட் உறுப்பினர், விசாரணையின் போது, செல்வராஜ் செய்தது சாதாரணக் குற்றம்தான் என்றும், அதற்கு சீரியசான தண்டனை தேவையில்லை என்றும் சொன்னவர். இந்த நிலையில் அவர் சென்னைப் பல்கலைக்கழகத்துக்குத் துணை வேந்தராக வந்தபோது, செல்வராஜ் வழக்கு உயர்நீதிமன்றத்தில் இருந்தது. அந்த வழக்கில் செல்வராஜை கட்டாய ஓய்வு அளித்தது செல்லாது என்ற நீதி வழங்கப்பட்டது. அந்த வழக்கில் சீனியர் வழக்கறிஞர்களை வைத்து வழக்காடாமல், செல்வராஜுக்குச் சாதகமாக நடந்து கொண்டார் என்பது குற்றச்சாட்டு. உண்மையில் அட்வகேட் ஜெனரல் என்.ஆர்.சந்திரனை ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால் ஏற்கெனவே விசாரணையின் போது செல்வராஜுக்கு ஆதரவாக சாட்சி சொல்லியிருந்ததால், சலுகை காட்டும் விதமாக நடந்து கொண்டார் என்று அபாண்டமாகச் சொல்லப்படுகிறது. செல்வராஜ் மீது கோபம் கொண்டிருந்தவர்கள், உடனே இன்னாசிமுத்து மீது தாக்குதலைத் துவங்கினார்கள். அதன் முடிவுதான் இந்த அபாண்டமான குற்றச்சாட்டுக்களும் விசாரணையும் என்று சொல்கிறார்கள் கல்வியாளர்கள்.

உண்மையில் கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் பணியில் நியமிக்க வேண்டும் என்று செனட் தீர்மானித்ததைச் செயல்படுத்தாமல் இருக்கும் துணை வேந்தர், அவர்களுக்குப் பாதகமாகத்தான் செயல்படுகிறார் என்கிறார்கள் பேராசிரியர்கள். இந்த விசாரணையில்லாமல், பாரதியார் பல்கலைக்கழகத்தில் ஊழியர்களை நிரந்தரமாக்கியதில் முறைகேடுகள், மற்றும் கட்டிடம் கட்டியதில் ஊழல் என்றெல்லாம் இன்னாசிமுத்து மீது குற்றச்சாட்டுக்கள் போட்டிருக்கிறார்கள். "இந்தக் குற்றச்சாட்டுக்களில் எள்ளளவு கூட உண்மை இல்லை" என்று அடித்துச் சொல்கிறார்கள் கல்வியாளர்கள். தம் மீது வீசப்பட்டுள்ள சேற்றைக் கண்டு கலங்கி நிற்கிறார் ஃபாதர் இன்னாசிமுத்து. யாரிடமும் விவாதிக்க மறுக்கிறார். "விசாரணையில் குற்றமற்றவன்" என்று நிரூபிப்பேன் என்கிறார். இவரை விருப்பப்பட்டு துணைவேந்தர் ஆக்கிய முதல்வர் ஜெயலலிதா, சூழ்ச்சிகளில் சிக்கித் தவிப்பதைப் பார்த்தும் பேசாமல் இருக்கிறாரே என்று பொருமுகிறார்கள் பேராசிரியர்கள்.

ஆளுநரின் செயலர் ஒரு பக்கம் என்றால், பல்கலைக் கழகத்தில் முன்னாள் முதல்வருக்கு வேண்டிய பேராசிரியர் ஒரு பக்கம். பல்கலைக் கழக விவகாரங்களைத் தங்கள் பிடியில் வைத்துக் கொள்ள நடக்கும் போராட்டத்தில், துணை வேந்தர்கள் பாடு திண்டாட்டமாகி விடுகிறது. எந்தக் கட்சி ஆட்சியிலிருந்தாலும் ஊழல், தில்லுமுல்லு, கனஜோராய் பல்கலைக் கழகத்தில் நடந்து வந்திருக்கிறது. பட்ட மேற்படிப்பில் முதல் வகுப்புப் பெற மார்க் போட்டது குறித்து உயர்நீதிமன்றம் தோலுரித்துக் காட்டியது.

"இது ஆராய்ச்சி மையமாக இல்லை. சூழ்ச்சி மையமாக இருக்கிறது" என்றார் ஒரு பேராசிரியர். தி.மு.க. ஆட்சியின் போது, ஜாதி அடிப்படையில் துணைவேந்தர்கள் நியமிக்கப்பட்டதை வருத்தமுடன் கட்டிக் காட்டுகிறார்கள். பதிவாளராக, பேராசிரியர்கள் நியமிக்கப்படும் முறையை மாற்றி ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் கொண்டு வர, தி.மு.க. முயன்றதைக் கடுப்புடன் சொல்கிறார்கள் அவர்கள்.

— ப்ரியன்

சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவை; அநியாயமானவை. என் கணவருக்குத் துணை வேந்தர் ஆக வேண்டும் என்ற லட்சியமும் கிடையாது. அதற்காக அவர் முயன்றதும் இல்லை. ஓர் அரசு அமைப்பில் என் போன்ற தனிப்பட்ட ஒருவர், சொந்த விருப்பு வெறுப்புகளைத் திணிக்க முடியும் என்று கூறுவது அபத்தமானது; அறிவுக்குப் பொருந்தாதது."



ஊர்க்குருவி!

'ஸ்டைல்' அடித்துக் கொண்டே வந்த ஊர்க்குருவியைப் பார்க்க ஆச்சர்யமாக இருந்தது. 'அட்டா இதென்ன உல்டா?' என்றதும் கோபமாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு, 'அதை ஏன் கேக்கறீங்க!'' என்று ஆரம்பித்தது.

''ஊர்ல இருக்கிற பிரச்னைப் போதாதுன்னு, ஹிட்லர் ஜெர்மனிலதான் பிறந்தாரு. ஆஸ்த்ரியால இருக்கற பிரானவ்ங்கற ஊர்ல பிறக்கலைன்னு 'ஈகான் பென்' வரலாற்றாசிரியர், இப்ப கிளப்பிவிட, 'அங்கு இருக்கற பத்திரிகைகளெல்லாம் இந்தச் செய்தியை விலாவாரியா பிச்சுக் குதறிட்டிருக்கு.''

''இப்ப எதுக்கு இந்தச் சர்ச்சை?''

''இது ரொம்ப காலமா நடந்துட்டிருக்கற பிரச்னைதான். இரண்டு நாடுகளுமே இங்கதான் ஹிட்லர் பிறந்தாருன்னு உரிமை கொண்டாடிட்டு இருக்கு. (ஹிட்லர் தன்னோட சுயசரிதையான 'மெய்ன் கேம்ப்' புத்தகத்திலேயே பிரானவ்ல பிறந்தேன்னு சொல்லியிருக்கிறார்.) இரண்டுமே பக்கத்துப் பக்கத்து நாடுதான். ஜெர்மனி பார்டர்ல ஹிட்லர் பிறந்து, அதுக்குப் பிறகு ஆஸ்த்ரியா மருத்துவமனையில் சேர்த்திருக்கலாம்னு ஈகான் பென் சொல்றாரு. ஆனா இதுக்கும் ஆதாரம் ஏதுமில்லையாம். ஒரு சர்ச்லயிருந்த ஃபாதர் சொன்னதா சொல்றாரு'' என்ற ஊர்க்குருவி, ரொம்ப ஸ்டைலாக ''தாய் மண்ணே வணக்கம்'' பாட்டைக் கொடுமையாகப் பாடித் தொலைக்க, ''ஐயையோ, என்ன பழைய பாட்டெல்லாம் இப்ப பாடற?'' என்றோம்.



ஹிட்லர் சர்ச்சை!

''காரணமில்லாமலா? எப்போதுமே முனு முனுக்க வைக்கற பாடல் பற்றி பி.பி.சி நிறுவனம் உலகம் முழுவதும் ஒரு சர்வே எடுத்தது. அதுல இந்த 'வந்தே மாதரம்' பாட்டுக்குத்தான் இரண்டாவது இடம்.''

''அட!''

''அடுத்த நியூஸைக் கேட்டு நீங்க இன்னும் காலரைத் தூக்கி விட்டுக்கலாம்.''

''அப்படியென்ன நியூஸ்?''

''பி.பி.சி கருத்துக் கணிப்பில் முதல் பத்து இடத்துல வந்திருக்கிற பாட்டுல மூணு தமிழ்ப் பாட்டு!''

''அதென்ன பாட்டு?''

''ராக்கம்மா கையைத் தட்டு' (இளையராஜா), 'தைய்ய, தைய்ய, தையா' (ஏ.ஆர். ரஹ்மான்), 'பூவும் நடக்குது, பிஞ்சும் நடக்குது' திருமலை சந்திரன், இலங்கைங்கிற விடுதலைப்புலிகள் பற்றிய படத்தோட பாட்டு.''

''சிறந்த பத்துல மூணு தமிழுக்குன்னா எங்கேயோ போய்ட்டோமே.''

''ஒரு லோக்கல் நியூஸ் சொல்றேன் கேளு; 'நகரம், கிராமம்'னு ஒருநாள் நிகழ்ச்சியைத் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அரும்பாக்கத்துல நடத்துச்சு. இளம் புகைப் படக்காரர் சண்முகசுந்தரம் எடுத்த, நகரம் பற்றிய புகைப்படக் கண்காட்சி காலையில். இதைப் பார்க்க வந்த 'ரன்' பட டைரக்டர் லிங்குசாமி ஒரு தகவலைச் சொன்னார். அதாவது 'ரன்' படத்துக்காக ஃபோட்டோ செஷன் வச்சாராம். மும்பையிலிருந்து ஒரு கேமராமேனைக் கூட்டிட்டு வந்து டிஜிட்டல் முறையில பத்தாவா எடுத்தோம். அப்போது இந்த சண்முகசுந்தரம் ஒரு ஓரமா நின்னு ஃபோட்டோ எடுத்திட்டிருந்தாரு. மும்பைக்காரரோட எக்குவிப்மென்ட்



லையெல்லாம் பார்த்ததும் இவரை யாரும் கண்டுக்கலை. அப்புறம் செஷன் முடிஞ்சு பார்த்தா ஒரு படமும் ஒழுங்கா பதிவாகலை. மறுநாள் விளம்பரம் கொடுக்கணும், என்ன பண்ணலான்னு முழிச்சிட்டிருந்தப்பதான் சண் முககுந்தரம் ஞாபகம் வந்து, அவரைத் தேடு தேடுன்னு தேடிக் கண்டுபிடிச்சு ஃபோட்டோ வாங்கினால், அவ்வளவு படமும் அட்டகாசமா இருந்தது. இவரோட திறமை எனக்கு அப்பத் தான் புரிஞ்சதுன்னாரு.

"மாலையில கிராமங்கற தலைப்புல கவிஞர் வித்யா ஷங்கர் தலைமையில கவியரங்கம். ஏழு கவிஞர்கள் கிராமம் பத்தி பாடிய கவிதையில ரொம்ப புல்லரிச்சுப் போய் எங்க ஊர் ஞாபகம் வந்துட்டு."



• லிங்குசாமி

"உனக்கு ஊர் ஞாபகமா?"

"ஏன் வரக் கூடாதா?" எனக்கும் வீடு, ஊரு கிடையாதா?"

"சரி, சரி. ரொம்ப பீல் பண்ணாத."

"அப்புறம், ஒரு மெடிக்கல் செய்தி, கேட்டால் ஆச்சர்யப்படுவ. வாரக்கணக்கா வளர்ந்த மனித கருக்களில் உள்ள செல்களில் இந்திந்த செல் பின்னாளில் இன்னின்ன உறுப்புகளாக வளரும்னு இனம் காணப்பட்டு அதுல மனித சிறுநீரகமாக வளரக்கூடிய 'செல்கள்' சிலவற்றை எடுத்து வெள்ளெலி உடலில் வச்சு வளரச் செஞ்சிருக்காங்க, இஸ்ரேல்ல உள்ள 'வைஸ்மென் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ் ஆராய்ச்சி' மைய டாக்டர்கள். பார்த்தால் அது மனுஷனுக்கு உள்ள இயல்பான முழு சிறுநீரகம் போல எல்லா உள் உறுப்புகளோட வளர்ந்திருக்காம். ரத்தத்திலிருந்து கழிவுகளைப் பிரித்து சிறுநீரா வெளியேத்தற பணியையும் செஞ்சிருக்காம்!"

"மாற்று உடலுறுப்பு கிடைக்காம நிறைய பேர் கியூவில் நிற்கிறாங்க. இந்த ஆராய்ச்சி மூலமா அந்த க்யூ குறையும்னு சொல்ல வர்றே, அப்படித்தானே!"


" அதுக்கு இன்னும் ரொம்ப வருஷம் ஆகும்... புது வருஷத்துக்கு நம்ம நடிகர் தலைவாசல் விஜய் இல்ல, அவரு எனக்கு ஒரு புத்தாண்டு வாழ்த்து அனுப்பியிருந்தாரு. வாழ்த்து அட்டையில வந்திருக்கிற மூணு கார்ட்டூனும் அசத்தல். கார்ட்டூனைப் பார்த்திட்டிரு. நான் வந்துடறேன்" என்று பறந்தது ஊர்க்குருவி.



• ஏ.ஆர். ரஹ்மான்



• தலைவாசல் விஜய்





• அந்தக் கார்ட்டூன்கள்!

மீண்டார் ராணி!

இழந்த பதக்கங்களை சர்வதேச ஒலிம்பிக் குழு சுனிதா ராணிக்குத் திருப்பிக் கொடுத்திருக்கிறது.

சுனிதா ராணியின் சிறுநீர் பரிசோதனையில், போதை மருந்தைப் பயன்படுத்தியதாக முடிவு வெளியாக, பதக்கங்கள் பறிக்கப்பட்டன. ஏழாவது இடத்தில் இருந்த இந்தியா, எட்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டது.

தொடர்ந்து வந்த நாட்களில் இந்திய அமெச்சூர் தடகளக் கூட்டமைப்பு நடத்திய ஒரு நபர் விசாரணையில், சுனிதா ராணி குற்றமற்றவர் என்று முடிவானது.



ஆசியப் போட்டிகள் நடைபெற்றது தென் கொரியாவில் உள்ள பூசான் நகரில் என்றாலும், விளையாட்டு வீரர்களின் சிறுநீர் மற்றும் ரத்தம், சியோலில் உள்ள சோதனைச் சாலைக்குத்தான் அனுப்பப்பட்டது. அந்தச் சோதனைகள் சரியான முறையில் நடத்தப்படவில்லை என்பதுதான், இந்திய அமெச்சூர் தடகளக் கூட்டமைப்பின் வாதம்.

எப்படி இந்த முடிவுக்கு வந்தார்கள்? சுனிதா ராணியின் உடலில் ஒரு மில்லிலிட்டர் சிறுநீரில் 21 நானோகிராம் அளவு நான்ட்ரோலின் என்ற போதைப் பொருள் காணப்பட்டதாம். இது சாம்பிள் 'ஏ'வில். சாம்பிள் 'பி'யில் இது 6 என்று காணப்பட்டது. (பெண்கள் உடலில் இந்தப் பொருள் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச அளவு ஐந்து நானோகிராம்தான்.)

இப்படியிருக்க, சோதனைகள் சரியான முறையில் செய்யப்படவில்லை என்று எந்த அடிப்படையில் இந்திய அமெச்சூர் தடகளக் கூட்டமைப்பால் கூற முடிந்தது?

சிறுநீரில் உள்ள நூற்றுக்கணக்கான பொருள்களை, மிக வேகமாகவும் துல்லியமாகவும் கண்டறியும் அளவுக்கு, தரமான கருவிகள் கொண்ட பரிசோதனைச் சாலைகளுக்கு மட்டுமே, சர்வதேச ஒலிம்பிக் குழு அங்கீகாரம் அளிக்கும். இந்த சோதனையில் தவறு ஏற்பட்டால், அது சம்பந்தப்பட்ட விளையாட்டு வீரரின் வருங்காலத்தையே புதைத்து விடலாம் என்பதால், தானே பல சோதனைகளைச் செய்து பார்த்துவிட்டுதான், இந்த அங்கீகாரத்தை சர்வதேச ஒலிம்பிக் குழு அளிக்கும். உலகம் முழுவதிலும் இப்படி அங்கீகாரம் அளிக்கப்பட்ட பரிசோதனைச் சாலைகள் இருபத்தேழுதான். (இந்தியாவில் எதுவுமில்லை.)

விளையாட்டு வீரரிடமிருந்து பெறப்படும் சிறுநீர் ஏ, பி என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டு, நடத்தப்பட்ட சோதனைகளின் முடிவில் இருந்த வித்தியாசம்தான், இந்திய விளையாட்டுக் கூட்டமைப்பு அதிகாரிகளிடம் சந்தேகத்தைக் கிளப்பியது. சாம்பிள் ஏ வின் முடிவு மட்டுமே சர்வதேச ஒலிம்பிக் குழுவுக்கு அனுப்பப்பட்டதையும், சோதனை அறிக்கையில் தேதி இல்லை, மற்றும் தேவைப்படும் சிலரது கையெழுத்துக்கள் இல்லை, என்பதையெல்லாம் சுட்டிக் காட்டி பரிசோதனை செய்முறைகள் சரியில்லை என்று கூறி, சுனிதா ராணியின் மீதுள்ள குற்றச்சாட்டுகள் தவறானவை என்று முடிவெடுத்தனர்.

இடுப்பில் ஏற்பட்ட காயத்தினால் சுமார் இரண்டு வருடங்களுக்குத் தடகளப் பிரிவில் சாதனைகள் எதுவும் புரிய முடியாமல் போன சுனிதாராணி, பூசானில் புரிந்த சாதனைகளில் விழுந்த இடியில் துவண்டு போனார். பதக்கம் திரும்பக் கிடைத்ததில் கொஞ்சமில்ல, நிறைய மகிழ்ச்சியில் இருக்கிறார் சுனிதா. போராடி பெற்ற பதக்கமாச்சே!

- ஜி.எஸ்.எஸ்



"கபாலி அண்ணே!
புத்தாண்டுக்கு
மாமியார் வீட்டுக்குப்
போகலியா...?"
"அப்படி ஒண்ணும் நான்
ரோசம் கெட்டுப்
போகலேடா! முறையா
ஏட்டையா வந்து
கூப்பிட்டாத்தானே போக
முடியும்...!"

– புன்னகை மன்னன்


செய்வினை செயப்பாட்டுவினை!



"காசில்லாம நாலு தோசை சாப்பிட்டா இரண்டு படி மாவு அரைச்சா போதும். ஏன் நான்கு படி அரைக்கிறேன் கிறீங்க?"

"இன்னும் பசிக்குதே!"

– சாயல் வெ. ராஜாராமன்



"அரை வருடப்
பரீட்சையில்
பெயிலாக்கிட்டாரேன்னு
தமிழ் வாத்தியாருக்குச்
செய்வினை வச்சது
தப்பாப்போச்சு!"
"ஏன்... என்ன
செஞ்சார்?"
"பதிலுக்கு எனக்கு
செயப்பாட்டு வினை
வச்சுட்டார்!"

– புளியரை கணேசன்

"கல்யாணத்துக்குப் பிறகு நடிக்க மாட்டேன்னு சொன்னது தப்பாப் போச்சும்மா."



"என்ன விஷயம்?"

"எப்ப மேரேஜ், எப்ப மேரேஜ்னு கேட்டு ஏகப்பட்ட ஃபோன் கால்... அட்டெண்ட் பண்ணவே நேரமில்லைம்மா...!"

– சீர்காழி வி. ரேவதி



மௌனம் பேசியதே

'மௌனத்திலிருந்து தொடங்குகிற காதல் மருந்துக்கும் இல்லை. கண்ணிலிருந்து தொடங்குவதெல்லாம் காதலே இல்லை' என்பதுதான் முரட்டு இளைஞன் சூர்யாவின் கண்டிப்பான காதல் வேதாந்தம். "உன்னை மாதிரி ஒரு ஆளைத்தான் நான் லவ் பண்ணுவேன்" என்று த்ரிஷா பேச்சுவாக்கில் சொல்லி விட்டுப் போக... அந்த பாறை இளைஞனுக்குள் ஈரமாய் எங்கோ ஒளிந்திருந்த காதல் கசிகிறது. அந்தக் காதலை காலத்தோடு வெளிப்படுத்த சூர்யா முன் வரும்போது, த்ரிஷா முந்திக் கொண்டு தனது காதலனை அறிமுகப்படுத்துகிறார். இடிந்து போகும் சூர்யாவின் காதல் முடிந்து போய்விட்டது என நாம் முடிவு கட்டினால், யாரும் யூகிக்க முடியாத திடுக்கிடலோடு இதமாய், இயல்பாய் ஒத்தடம் தந்து படத்தை முடிக்கிறார் இயக்குனர்.

தமிழ் சினிமா காப்பாற்றி வரும் மடத்தனமான மரபுகள் பலவற்றைத் தைரியமாய் மீறி, தன்னம்பிக்கைத் திறனோடு திரைக்கதை அமைத்திருக்கும் அமீர், நம்பிக்கையூட்டும் புதிய இயக்குனர்.

காதலை அடியோடு வெறுக்கும் சூர்யா பாத்திரத்தைத் தெளிவாய் நிலை நிறுத்த, அவரது உயிர் நண்பர்களைக் காதல் அபிமானிகளாய்க் காட்டியிருப்பதில் தொடங்கி, பாராட்டுக்களை அடுக்கலாம்.

என்றாலும், இத்தனைச் சிறிய வயதில் சூர்யாவுக்கு எப்படி இப்படியொரு பக்குவம் வந்தது என்பதைச் சொல்ல, சில ஹைக்கூ காட்சிகளையாவது காட்டியிருக்கலாம்.

மென்மையான புன்னகையோடு வலம் வந்து கொண்டிருந்த சூர்யாவா இது? மிரட்டும் தோற்றமும், விரட்டும் பார்வையுமாக, சண்டைக் காட்சியில் அவர் காட்டும் வேகம் அதிர வைக்கிறது. அறிமுக நாயகி த்ரிஷாவுக்கு நல்லவேளையாக அழும் வேலை எதுவும் இல்லை.

மற்ற புதுமுகங்கள் நந்தாவும், மஹாவும் இயல்பாக நடித்திருக்கிறார்கள். யுவனின் இசையில் எல்லாப் பாடல்களும் இளமைத் துடிப்போடு இருக்கின்றன. இந்தத் துடிப்பை ராம்ஜியின் ஒளிப்பதிவு காப்பாற்றியிருக்கிறது.

குடும்பத்தோடு திரையரங்கு செல்வதைத் தவிர்க்கத் தூண்டும் படங்களுக்கு மத்தியில் இந்தப் படம் ஓர் இனிய விதிவிலக்கு.


\- விஷ்ணுவல்தாசன்

● அபவ் ஆவரெஜ்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Pvt. Ltd.
Editorial Team : C. Egnath Raj, Anuradha Sekhar, C.Jesudoss. Layouts : S.Stephen, P.R. Rajan.
Editor : Seetha Ravi.
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Half Yearly Subscription : India : Rs. 165/-
Overseas (Air Mail) Annual : 62 U.S. Dollars, Srilanka Rs.2000/-

வேலை பிரஷர் தாங்க முடியாதபோது எல்லாவற்றையும் புறக்கணியுங்கள். உங்களுக்கும் உலகத்திற்கும் போதுமான இடைவெளி இருக்கட்டும். அமைதி தவழும் பாண்டிச்சேரிக்கு வாருங்கள். இங்கே நேரம் என்பதற்கு பொருள் முழு அமைதி என்பதே.

பாண்டிச்சேரி ஷாப்பிங் ஃபெஸ்ட்டிவெல்க்கு (18/12/02-16/01/03) வருகை தாருங்கள், மகத்தான பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்.



PEACEFUL

Pondicherry

Give time a break.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் : பாண்டிச்சேரி சுற்றுலா :
தொலைபேசி 91-413-2334575/2339497/2330532.
ஃபேக்ஸ் : 91-413-2330532/2333590.
இ-மெயில் : e_ptdc@sify.com
இணைய தளம் : www.tourisminpondicherry.com

மகத்தான வார இறுதிச் சுற்றுலா பற்றி அறிய தொடர்பு கொள்ளவும்.
சென்னை : 8460908 பெங்களூர் : 6550108-4121704-5321433

McCANN/PT/0128

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2002 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka